பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

நாவாந்துறைப் படிப்பகம்

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 29 ஞாயிற்றுக்கிழமை (11.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 167

# அம்பாறையில் வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகே ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன!

## எனினும் வாக்களிப்பு தாமதமாக நடைபெற்றது

அம்பாறை, மே 11

அம்பாறை மாவட்டத்தில் இரண்டு வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் நேற்றுக் காலை 7 மணியளவில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. அதனால் இரண்டு வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்களிப்பு 30 நிமிடங்கள் தாமதமாகவே ஆரம்பித்தன.

அம்பாறை சுதர்சன ராமய 2 'சி' கிராமம், பன்னாலகம வித்தியாலயம் ஆகிய இடங்களில் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வாக்களிப்பு நிலையத்துக்கு அருகில் உள்ள வீடுகளுக்கு சமீபாக வீழ்ந்து வெடித்த ஷெல்களால் நால்வர் காயமடைந்தனர். மூன்று பெண்களும் சிறுவன் ஒருவனும் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (16ஆம் பக்கம் பார்க்க)

### வாக்காளர் தொகை: உறுப்பினர் எண்ணிக்கை

யாழ்ப்பாணம், மே 11

உத்தியோகபூர்வ தகவலின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 3 லட்சத்து 30 ஆயிரத்து 950 பேரும்-

அம்பாறை மாவட்டத்தில் 14 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 4 லட்சத்து 9 ஆயிரத்து 308 பேரும்-

திருகோணமலை மாவட்டத்தில் 10 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 2 லட்சத்து 42 ஆயிரத்து (16ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்குத் தேர்தலில் 57% வாக்களிப்பு;

# முறைக்கேடு, வன்செயல் குற்றச்சாட்டு

## கண்காணிப்பாளர்களும் மிரட்டப்பட்டனர்

யாழ்ப்பாணம், மே 11

நேற்று நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் சராசரியாக 57 சதவீதமானோர் வாக்களித்ததாக தேர்தல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்தது. அம்பாறை மாவட்டத்தில் 65 சதவீதமான வாக்காளர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 55 சதவீதமான வாக்காளர்களும் திருகோணமலையில் 60 சதவீதமான வாக்காளர்களும் வாக்களித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - நேற்றைய தேர்தலில் முறைக்கேடுகள், வன்செயல்கள், தாக்குதல்கள், பயமுறுத்தல்கள், வாக்கு மோசடிகள் ஆகியன நிறையவே இடம்பெற்றன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் குற்றஞ்சாட்டின.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான அமைப்பு நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில் தாக்குதல்கள், பயமுறுத்தல்கள், ஆள்மாறாட்டங்கள் மற்றும் தேர்தல் மோசடிகள் குறித்து மொத்தம் 175 முறைப்பாடுகள் கிடைத்ததாகத் தெரிவித்தது.

அதேபோன்று தேர்தல் வன்செயல்களை கண்காணிக்கும் நிலையம் (சி.எம்.ஈ.வி.) தனது அறிக்கையில் தேர்தல் வன்செயல்கள் குறித்து 25 சம்பவங்களை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை- எதிர்க்கட்சிகளின் அவதானிகள் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வெளியேறுமாறு கலைக்கப்பட்டனர் என்று சி.எம்.ஈ.வி. பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் அல்ல என்றும் - அதனை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் - (16ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் முடிவுகள் இன்று காலைக்குப் பின்னரே...!

யாழ்ப்பாணம், மே 11

நேற்று நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பின் முதல் முடிவுகள் இன்று அதிகாலை 12.40 மணிக்கே உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

அந்த வேகத்தில் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அனேகமாக காலை 5 மணிக்குப் பின்னரே வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. (அ)

### முதல் வந்த முடிவு!

கொழும்பு, மே 11

மட்டக்களப்பு மாவட்ட தபால்மூல வாக்களிப்பு முதலில் - நள்ளிரவு 12.40க்கு வெளியானது.

முடிவுகள் வருமாறு:

| மட்டக்களப்பு | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | - | 2159 |
| ஐ.தே.க. | - | 1282 |
| த.ஐ.தே.க. | - | 454 |
| ஈ.ம.ஐ.க. | - | 135 |

## அமைச்சர்கள் குண்டர்களுடன் வந்து வாக்காளர்களை அடித்து விரட்டினர்

### முதன்மை வேட்பாளர் ஹக்கீம் முறைப்பாடு

திருகோணமலை, மே 11

நேற்று நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அமைச்சர்கள் கூட குண்டர்களுடன் நின்று வாக்காளர்களை அடித்து விரட்டிய சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், மாகாண சபை முதன்மை வேட்பாளருமான ரவூப் ஹக்கீம்.

நேற்றைய கிழக்கு மாகாணசபைத் தேர் (16ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெற்றது என்கிறார்கள் அமைச்சர்கள்

அம்பாறை, மே 11

நேற்றைய மாகாணசபைத் தேர்தலில் மோசடிகள், வன்செயல்கள், குளறுபடிகள் நடைபெற்றதாகக் கூறப்படுவதை அரசத் தரப்பினர் மறுத்துள்ளனர்.

ஒரு சில சம்பவங்களைத் தவிர தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெற்ற (16ஆம் பக்கம் பார்க்க)

## வன்செயல்கள், மோசடிகள் நிறைந்த தேர்தல் என்கிறது கண்காணிப்பு நிலையம்

அம்பாறை,மே11

நேற்று நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கொலை முயற்சி, தாக்குதல், பயமுறுத்தல், ஆள் மாறாட்டம், வாக்குச் சீட்டு மோசடி, முறை கேடுகள் போன்ற சுமார் 25 தேர்தல் வன் செயல்கள் இடம்பெற்றதாக தேர்தல் வன்செயல்களை கண்காணிக்கும் நிலையம் (சி.எம்.ஈ.வி) தேர்தலுக்குப் பிந்திய தனது அறிக்கையில் தெரிவித்தது.

இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 13 தேர்தல் வன் செயல்கள் மற்றும் முறைகேடுகளும் அம்பாறையில் 3 வன் செயல்கள் மற்றும் முறைகேடுகளும் திருகோணமலையில் 2 முறைகேடு மற்றும் வன் செயல்களும் பதிவாகியுள்ளதாக நேற்றிரவு வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிக் கொமாண்டோக்கள் கைவரிசை

# ஆயுதங்களுடன் திருமலையில் தரித்து நின்ற படையினரின் 'இன்விசிபிள்' கப்பல் மூழ்கடிப்பு!

## அதிகாலை வேளை நகரம் முழுவதும் அதிர்வு!!

திருகோணமலை, மே11

திருகோணமலை துறைமுகத்தில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் ஏற்றப்பட்ட நிலையில் நின்ற இலங்கைப் படையினரின் "இன்விசிபிள் - ஏ - 520" என்ற கப்பலை கடற்கரும்புலிக் கொமாண்டோக்கள் நேற்று அதிகாலை தாக்கி மூழ்கடித்துள்ளனர்.

சீனக்குடா, அஷ்ரப் இறங்குதுறையில் தரித்து நின்ற போதே படையினரின் வழங்கள் கப்பலான "இன்விசிபிள்" நேற்று அதிகாலை 2.23 மணியளவில் தாக்கி அழிக்கப்பட்டு அது மூழ்கடிக்கப்பட்டது.


[illegible]ப்புலிகளின் கங்கை அமரன் நீரடி [illegible] பிரிவின் கொமாண்டோக்கள் இந்தக் கருப்புலித் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற அதிகாலை வேளை திருகோணமலை நகரமே அதிர்ந்தது என்று ஏஜென்சிச் செய்திகள் தெரி வித்தன.

தாக்கி அழிக்கப்பட்ட இக்கப்பல் 80 (16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ். இந்து கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற, இந்துக்களின் போர் 50 ஓவர்கள் துடுப்பாட்டப் போட்டியில் கலந்துகொண்ட விருந்தினர்கள் வீரர்களுக்கு கைலாகு கொடுப்பதை முதல் படத்திலும் இரண்டு அணிகளின் தலைவர் களும் நாணயச் சுழற்சியில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் துடுப்பாட் டத்தின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# பரபரப்பான ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், மே 11

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற பரபரப்பான 50 ஓவர் துடுப்பாட்ட போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்று அமரர் சபாலிங்கம் வெற்றி கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்து 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கட்டுகளை இழந்து 222 ஓட்டங்களைப்பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து அணி 46.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 209 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றுக்கொண்டது. (1-86)

# இந்தியா தனது முடிவை மாற்றி இலங்கைக்கு அரிசி அனுப்பும்!

## இங்கு அதிகாரிகள் தரப்பில் நம்பிக்கை

கொழும்பு, மே 11

இலங்கைக்கு அரிசியை ஏற்றுமதி செய்வதில்லை என்ற முடிவை இந்தியா தளர்த்துவதன் மூலம் இலங்கை எதிர்கொள்ளவுள்ள அரிசி நெருக்கடியிலிருந்து அது தப்புவதற்கு இந்தியா உதவும் என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.பி. ரத்னநாயக்க நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை அரிசித் தட்டுப்பாட்டை எதிர்கொண்டால் இந்தியா நிச்சயம் உதவும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள அவர், இந்தியாவிடம் இருபத்தியைந்து லட்சம் தொன் அரிசிக் கையிருப்பில் உள்ளதால் அந்த நாட்டிற்கு இது பிரச்சினையாக இருக்காது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மாரில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக அந்த நாட்டிலிருந்து புறப்பட முடியாத நிலையில் பல கப்பல்கள் உள்ளன எனவும் -

இவற்றில் இலங்கைக்கு 17 ஆயிரம் தொன் அரிசியுடன் பயணிக்க வேண்டிய மூன்று கப்பல்களும் அடங்குகின்றன எனவும் -, அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சூறாவளி காரணமாக மியன்மாரின் துறைமுகப் பகுதியில் 23 சிறிய கப்பல்கள் மூழ்கியுள்ளன. இதன் காரணமாகத் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் செல்லும் பாதை மூடப்பட்டுள்ளதாக ஆ.ஏ.டி. ரத்னநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மியன்மார் அதிகாரிகளுடனான தொடர்பைத் தாங்கள் கொண்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா இலங்கைக்கு அரிசியை ஏற்றுமதி செய்வதில்லை எனத் தீர்மானித்துள்ள போதிலும் இலங்கை அதிகாரிகள் இது குறித்து வெற்றிகரமானபேச்சுகளைமேற்கொண்டுள்ளனர் எனவும், செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுடன் நாங்கள் மேற்கொண்டுள்ள பேச்சுகள் ஊடகங்களில் வெளியாகும் தகவல்களுக்கு மாறாகவுள்ளன. இலங்கையில் தற்போது அரிசி நெருக்கடியில்லை. அவ்வாறான நிலைமை உருவானால் இந்தியா நிச்சயம் நமக்கு உதவும். அடுத்த இரு மாதங்களில் இந்தியா தனது கொள்கையை மறுபரிசீலனை செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளது - என்றும் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்திலிருந்து அரிசியைக்கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுவதையும் அவர் நிராகரித்துள்ளார். (சி)

## கசிப்பு விற்பனை 25ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், மே 11

ஒரு லீற்றர் சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த நபருக்கு 25ஆயிரம் ரூபா சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் சாவகச்சேரி தபாற் கந்தோர் வீதியைச் சேர்ந்த கந்தையா சிவராசா என்பவர் ஒரு லீற்றர் கசிப்பு வைத்திருந்ததாக குற்றஞ் சாட்டி சாவகச்சேரி நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ் வழக்கினை கடந்த வெள்ளிக் கிழமை விசாரித்த நீதிவான் இந்த நபருக்கு 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதக் தொகை செலுத்த தவறின் ஆறுமாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (01-207)

## வலி. மேற்கில் கருத்தரங்கு

வலி. தென்மேற்கு, மே 11

பண்டத்தரிப்பு மற்றும் இளவாலை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலுள்ள உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கருத்த ரங்கு கடந்த வாரம் பண்டத்தரிப்பு பட்டின நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டினேஸ் ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மேற்படி பிரிவுகளைச் சேர்ந்த உணவகங்கள், தேநீர் கடைகள், பேக்கறிகள் மற்றும் இனிப்பு உற்பத்தி நிலையங்கள் ஆகியனவற்றின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த உணவு கையாளும் நிலையங்களில் சுகாதார விதிகள் சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் இக் கருத்தரங் குகளில் அறிவுறுத்தப்பட்டது. (01-135)

## மரண அறிவித்தல்கள்

### வீரகத்தி செல்லையா (புலோலி)



தென்புலோலி, புற்றளையைச் சேர்ந்த வீரகத்தி செல்லையா (ரக்மாஸ்ரர்) 09.05.2008 வெள்ளிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்பு கணவரும் பரமேஸ்வரி, மங்கையர்க்கரசி, சிவகுமார், விக்னேஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரி, கமலேஸ்வரி, இராதாகிருஷ்ணன் (இ.போ.ச., பருத்தித்துறைச்சாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வைரவிப்பிள்ளை, சண்முகராசா, ஆனந்தராசா, செல்வகுலசிங்கம் ஆகியோரின் மாமனாரும் கணபதிப்பிள்ளை (லண்டன்), சுப்பிரமணியும் (வெல்ப்பிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.05.2008) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புற்றளை,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.* (சி/552801)

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகரெட்ணம் பாலரெட்ணம்



புங்குடுதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகரெட்ணம் பாலரெட்ணம் 08.05.2008 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரெட்ணம், சின்னம்மா (கனடா) ஆகியோரின் அன்பு மகனும், ஜெயராணியின் (கௌரி) அன்புக் கணவரும் சுகன்ஜா, கௌதமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*56, அத்தியடி,*
*புது வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-552802)

*தகவல்:*
*ஜெயராணி*
*(கௌரி- மனைவி).*

### திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை 03.05.2008 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்- அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி - விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லத்துரையின் மனைவியும், லலிதா, கிரிதரன், முகுந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் விலங்கள் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பழைய ஆஸ்பத்திரி வீதி,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு.* (74024)

*தகவல்:*
பிள்ளைகள்.

### யோவாம்பிள்ளை மனுவேற்பிள்ளை



போயிட்டி, இளவாலையைச் சேர்ந்த யோவாம்பிள்ளை மனுவேற்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிசிலியா பரிமளத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சூசாணம், எலிசபேத்து, பெர்ணபேத் மற்றும் அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் தங்கறோஸ், செபஸ்தியாம்பிள்ளை (அதிபர், யா/புனித மரியாள் வித்தியாலயம் (O.L.R), ஜெயரட்ணம், துரைரட்ணம், ஜீவரட்ணம் (லண்டன்), குணரட்ணம் (லங்கா சிமெந்து லிமிட்டட்), மரியமலர் (கனடா), திரேசாமலர் (முகாமைத்துவ உதவியாளர், மேலதிக மாகாண கல்விப்பணிமனை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முடியப்பு, மேரியோசப்பின்-புஸ்பராணி, காலஞ்சென்ற மேரிமாகிறற் மற்றும் சுகுமாரி, கமலா, மேரிறாகினி, அருள்நேசன், யேசுமரியதாசன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.05.2008) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு புனித லூர்து அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் லூர்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*போயிட்டி,*
*இளவாலை.* (74025)

தகவல்:
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### பொ.செல்லத்துரை

*(சோடா செல்லத்துரை - முன்னாள் உரிமையாளர், யாழ். மெட்டல் வேக்ஸ்)*

புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பொ.செல்லத்துரை நேற்று (10.05.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், அஜந்தா (ஆசிரியர், கொழும்பு), வசந்தன் (பொறியியளாளர்-UK), அனுராதா (இத்தாலி), அனித்தா (முன்னாள் ஆசிரியை- கொழும்பு), உதயன் (கனடா), உதயகுமார் (கனடா), உதயகரன் (தபால் திணைக்களம் - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலிங்கம், வின்சன் (இத்தாலி), விஸ்வநாத், சுஜிதா, விஜித்தா (கனடா), ரூபி ஆகியோரின் அன்பு மாமனும், வின்சியா, லூட்சியா (இத்தாலி), சௌமியா, ஜதுக்கான், அபினயா (கனடா), லட்சாயினி, டிலக்சன் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணிக்கு பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*80/4, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்*

*தகவல்:*
சிவலிங்கம் (மருமகன்).

## 6 தமிழ் இளைஞர்கள் ஆலையடிவேம்பில் கடத்தப்பட்டனர்

கொழும்பு, மே 10

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றுப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலையடி வேம்புப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் 6 தமிழ் இளைஞர்கள் வெள்ளைவானில் வந்த இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தவறிவிட்டது

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த திருமதி கதிரமலைசிவம் என்பவரது தேசிய அ. அட்டை (526044827v) யாழ்ப்பாணத்திற்கும் அச்சுவேலிக்கும் இடையில் கை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்து சன்மானத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

க. கதிரமலை,
காட்டுமலை கந்தசாமி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மேற்குலகின் பொறுப்பற்ற போக்கு

இலங்கையில் மிகவும் மோசமடைந்துவரும் இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச சமூகம் மிகவும் மெத்தனப் போக்கில் செயற்பட்டு வருகிறது எனக் கனேடிய ஏடான ''த ஸ்ரார்'' தனது தலையங்கத்தில் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

தமிழர் தரப்பை - விடுதலைப் புலிகளை முற்றாகத் தோற்கடிக்கும் யுத்த வெறியோடு ஒரு போர் தமிழர் தேசம் மீது தொடுக்கப்பட்டிருக்கின்றது.

சுமார் இருபத்தியைந்து வருடகால கொடூரப் போரினால் சுமார் எழுபதாயிரம் மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டு விட்டன. பல லட்சக்கணக்கான தமிழர்கள் உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். கனடா உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் இலங்கைப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் வியாபித்து வாழும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஆனாலும் இந்த இலங்கை இனப்பிரச்சினையின் தீவிரம் மற்றும் ஆழம் குறித்து மெத்தனப் போக்கோடு சர்வதேச சமூகம் பொறுப்பற்று செயற்படுவதாக விசனம்- ஆதங்கம் - வெளியிட்டிருக்கின்றது அந்தக் கனேடியப் பத்திரிகை.

ஈரான், சிரியா போன்ற நாடுகளின் விடயத்தில் அதிக அக்கறை காட்டும் அனைத்துலகமும், சர்வதேச ஊடகங்களும் இலங்கை விடயத்தில் மட்டும் அசிரத்தையுடன் போக்குக் காட்டுவது ஏன் என்ற கேள்வி எழுவது இயல்பானதே.

இலங்கையில் மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்துப் பதிவாகின்றன. எனினும் அவற்றைத் தடுத்து நிறுத்தக் காத்திரமான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுவதாக இல்லை.

கடந்த வருடத்தில் இலங்கையில் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தோரின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. வேறு எந்த நாட்டிலும் இத்தகைய பயங்கரமான சூழ்நிலை இல்லவே இல்லை என்று ஐக்கிய நாடுகள் அமைப்பே சுட்டிக் காட்டியுள்ளது.

படுகொலைகள் மற்றும் கப்பம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் என்பவற்றோடு அரசுக்கும் அரசுடன் சேர்ந்தியங்கும் துணைப் படைகளுக்கும் நேரடித் தொடர்புகள் உள்ளன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் படுபச்சையாகவே - நேரடியாகவே - குற்றம் சுமத்தியுள்ளன.

எனினும் இந்த மிக மோசமான நிலைமை குறித்து சர்வதேச சமூகம் உரிய முனைப்பு - அல்லது கவனம் - அல்லது சிரத்தை - காட்டவில்லை என்று மேற்படி பத்திரிகை பெருவிசனத்தோடு சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை பற்றியெரியும் பெருந்தீயாக விஸ்வரூபம் எடுத்திருக்கையில், அது குறித்து அலட்டிக் கொள்ளாமல் - கவனமெடுக்காமல் - சிந்திக்காமல் - சர்வதேச சமூக உதாசீனப் போக்கைப் பின்பற்றுகின்றது என்பதே அந்த சஞ்சிகையில் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆனால் இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகத்துக்கு எதிரான குற்றச்சாட்டுப் பத்திரம் இவ்வளவு சிறிய அம்சத்துடன் அடங்கிவிடக் கூடியதல்ல.

இன்று மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் இலங்கைப் பிரச்சினை விடயத்தில் சர்வதேச சமூகம் பாராமுகமாக இருக்கின்றது என்ற குற்றச்சாட்டைவிட, இலங்கை இனப் பிரச்சினை விவகாரம் இன்றைய நிலையில் இவ்வாறு பெரும் போராக வியாபித்து விஸ்வரூபம் எடுத்தமைக்கான பொறுப்பிலும் சர்வதேச சமூகத்துக்குக் கணிசமான பங்கு உள்ளது என்பதே முக்கியமானதாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இரண்டும் இந்தப் பிணக்குக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தமக்குள் பேசி இணக்கம் காணும் நோக்குடன் 2002 இல் பேச்சு மேசைக்கு வந்தன. யுத்த நிறுத்த உடன்பாடு காணப்பட்டது. போர்ப் பேரழிவுகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

சமஷ்டி ஆட்சி முறைக் கட்டமைப்பின்கீழ் ஓர் இணக்கத் தீர்வு காண்பது குறித்து ஆராய்வதற்கு சம்மதிக்கும் அளவுக்குத் தரப்புகள் முன்நோக்கி நகர்ந்தன.

ஆனால் இச் சமயத்தில் சர்வதேச சமூகம் தனது கோணல் புத்தியைக் காட்டி அமைதி முயற்சிகளுக்கு ஒரேயடியாக ஆப்பு வைத்து எல்லாவற்றையும் குழப்பியது என்பதே உண்மை.

தமிழீழ விடுதலைப் புலிகளும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அப்போதைய இலங்கை அரசும் அப்போது ஆரம்பித்த அமைதி முயற்சிகளில் 'சமதரப்பு' என்ற அந்தஸ்து நிலைப்பாட்டுடனேயே களத்தில் இறங்கின. யுத்த நிறுத்த உடன்பாடாகட்டும், அமைதிப் பேச்சுகளாகட்டும், எட்டப்பட்ட உடன்பாடுகளாகட்டும் அவை அனைத்துமே, சமதரப்பு அந்தஸ்து என்ற உறவு நிலையிலேயே இரண்டு பக்கத்தினாலும் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் இந்த அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட காலத்திலேயே -

எமது ஊடகங்கள் போன்ற சம்பந்தப்பட்ட பிரிவினர் பலர் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டிய விளைவுகள் பற்றிய உண்மைகளை உதாசீனம் செய்து புறக்கணித்து விட்டு-

இரு தரப்புகளில் ஒன்றான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மேற்குலகம் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்து, அந்த அமைப்பைத் தடை செய்து அந்த அமைப்பின் சமதரப்பு அந்தஸ்தை அமைதி முயற்சிகளில் குழப்பி, சமாதான அந்தஸ்துக்கள் அடியோடு சீர்கெட கால்கோள் இட்டது.

அதன் விளைவைத்தான் கொடிய யுத்தமாக இலங்கைத் தீவு இன்று எதிர்கொண்டு நிற்கின்றது.

இப்போதும் கூட, இந்த நிலைமையைப் பயன்படுத்தி தமிழர்தேசம்மீது கொடூர - பேரழிவு - யுத்தம் ஒன்றைத் தென்னிலங்கைச்சிங்களம் கட்டவிழ்த்து விட்டிருக்கையில் அதைத் தடுத்து நிறுத்துவதற்குத் தனது அதிகாரத்தை யும், செல்வாக்கையும், பலத்தையும் அழுத்தத்தையும் தவறி -

'அமைதிப் பேச்சு மூலமே சமாதானத் தீர்வு காணலாம்' என்று வெறும் வாய்ப்பந்தல் அறிவிப்புகளை மட்டுமே விடுத்துக் கொண்டு -

மெத்தனமாக நடந்து கொள்வதன் மூலம் - பொறுப்பற்று - செயற்பட்டு - தொடர்ந்தும் பெரும் வரலாற்றுத் தவறிழைக்கின்றது - மேற்குலகம்.

# யாழ். மாவட்டத்தில் ஒப்பந்த அடிப்படை கடமை புரியும் வைத்தியர்களுக்கு சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம். மே 11

யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் சேவை புரிந்து வரும் வைத்தியர்கள் சிலருக்கு இவ்வருட இறுதி மாதம் வரை கடமைபுரிவதற்கான விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநரால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாண பொதுநிர்வாகச் செயலகம் அறிவித்துள்ளது.

யாழ். மலேரியா தடை இயக்கத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் க.த.சிவபாதம், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி என். கனகரத்தினம், கொக்குவில் மத்திய மருந்தகத்தின் பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் வை. சிவராசா, தொல்புரம் மத்திய மருந்தகத்தின் பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கே. நடராஜா, வேலணை பிரதேச வைத்தியசாலை பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன், இளவாலை மத்திய மருந்தக பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கணேசலிங்கம், சங்கானை சுற்றயல்கூறு வைத்தியசாலை பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.நடராஜா, சுன்னாகம் மத்திய மருந்தக பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் வி. மகேந்திரன் ஆகியோர்களுக்கே சேவை நீடிப்பு வடமாகாண ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் 2008 ஜனவரி மாதம் தொடக்கம் 2008 டிசம்பர் 31 வரை மட்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி சம்பளம் பெறுவதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைத்துள்ளது. (202-300)

## பண்டத்தரிப்பு கொலைச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைது!

வலி.தென்மேற்கு,மே11

பண்டத்தரிப்பு, காலையடி தெற்கில் நடைபெற்ற 72 வயது மூதாட்டியின் கொலைச்சம்பவம் தொடர்பாக முக்கிய சந்தேக நபர் ஒருவர் இளவாலைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பகுதியிலுள்ள பொதுமக்கள் வழங்கிய இரகசியத் தகவலை அடுத்து கைதுசெய்யப்பட்ட இந்த நபரை இளவாலை பொலிஸார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவரை அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்ட போது இவரிடமிருந்து ஐந்து கிராம் கஞ்சா, சிறிய கிறிஸ் கத்தி, திறப்பு கோர்வை என்பனவும் கைப்பற்றப்பட்டு நீதிமன் றில் சமர்ப்பிக்கப்பட்டன.

இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.ஜே.பி. விஜயரத்தினா, சப் இன்ஸ்பெக்டர் டி.ஜி.பிரேமஸ்ரீ மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான நஜிபுதீன், குமாரசிறி ஆகியோர் இவரை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

கடந்த மார்ச் மாதத்தில் பண்டத்தரிப்பு, காலையடி என்ற இடத்தில் இரவு வேளையில் வீட்டில் தனித்திருந்த பூலோகம் பூமணி என்ற (72 வயது) வயோதிப மாது கொலை செய்யப்பட்டார். இவர் அணிந்திருந்த நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-135)

## கருத்தரங்கு

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி கிறிஸ்தவ சமய சமூக மன்றத்தினால் ''நல்லாசிரியனே ஞானவிளக்கு'' எனும் தலைப்பில் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ள இக் கருத்தரங்கு கல்லூரி அதிபர் என்.ஏ. விமலேந்திரன் தலைமையில் நடைபெறும். சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கருத்துரை வழங்கவுள்ளார். (202-29)

## சாவகச்சேரி நீதிமன்றின் பொறுப்பிலுள்ள பெண் குழந்தைகள் தத்துக்கொடுக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம்,மே11

சாவகச்சேரி நீதிமன்றின் பொறுப்பில் உள்ள இரண்டு பெண் குழந்தைகள் தத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் நீதிமன்றப் பதிவாளரினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் 'பதிவாளர், நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நீதிமன்றுக்கு விண்ணப்பம் செய்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லையெனவும் இவர்கள் இக்குழந்தைகள் தத்துக் கொடுப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வயது பூர்த்தியடைந்த பெண் குழந்தையும் ஒரு மாதம் பூர்த்தியடையாத பெண் குழந்தையுமே தத்துக் கொடுக்கப்படவுள்ளதனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே11

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் கடந்த மாதம் நடத்தப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் நடைபெறவுள்ள திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் 23, 24ஆம் திகதிகளில் எழுத்துப் பரீட்சையில் தோற்றியோருக்கு நாளை திங்கட்கிழமையும், ஏப்ரல் 28ஆம் திகதி தோற்றியோருக்கு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமையும் ஏப்ரல் 30ஆம் திகதி தோற்றியோருக்கு எதிர்வரும் புதன் கிழமையும் செயன்முறைப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

அனைவருக்கும் முற்பகல் 10 மணிக்கே செயன்முறைப் பரீட்சைகள் இடம்பெறும் என்று மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் செயன்முறைப் பரீட்சைக்கான புதிய திகதி வழங்கல், புதிய மோட்டார் சைக்கிள் பதிவுக்கான வாகனப் பரிசோதனை என்பனவும் நாளை திங்கட்கிழமை தொடக்கம் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (203)

## நெடுந்தீவில் அபிவிருத்தி மையம்

நல்லூர்,மே11

நெடுந்தீவில் அபிவிருத்தி மையம் ஒன்று மத்திய சந்தை முன்பாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அருட்திரு. ஆர்.ஜோன் செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது. (202-111)

## பேச்சுத் திறன்காண் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே11

ஆறுகால் மடம் அறிவொளி மாணவர்களின் பேச்சுத் திறன்காண் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் ஏ.எம்.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கி.சத்தியலோகன் கலந்து கொள்வார். (202)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 30 | 12.05.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி:அட்டமி | பி.இ.2.28வரை |
| நட்சத்திரம் : | ஆயிலியம் |
| | மு.இ. 06.30வரை |
| [illegible] | 11.54 - 01.24 |
| [illegible] | 07.24 - 08.54 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் கல்வியில் சிறப்புற்று விளங்கிய யாழ்ப்பாணத்துப் பிரமுகர்கள்

**மே.1902**

1902 ஆம் ஆண்டு மே மாதம் சைவபரிபாலன சபைத்தலைவர் செல்லப்பாபிள்ளை காலமானார்.

பிரித்தானியர்கள் இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு முன்னர் உலகின் பெரும்பாலான நாடுகளை ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த வரலாறு அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

பிரிட்டனின் குடியேற்ற நாடுகளில் கல்வியறிவில் சிறந்து விளங்கியவர்கள் இலங்கையர்களே; அதுவும் யாழ்ப்பாணத்தவர்களே என்று சொன்னால் எத்தனை பேர் ஏற்றுக் கொள்வார்களோ தெரியாது, ஆனால் அதுதான் உண்மை. பழம் பெருமை பேசுவதற்காகவோ எம்மைப் பற்றி நாமே தம்பட்டம் அடித்துக்கொள்வதற்காகவோ இதை நான் எழுதவில்லை.

### திருவாங்கூர் பிரதம நீதிபதியாகப் பதவி வகித்த செல்லப்பாபிள்ளை

எம்மவர்களின் வரலாற்றையும் சாதனைகளையும் இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இதை பதிவு செய்கின்றேன். இந்தத் தொடரைத் தொடர்ச்சியாக வாசிப்பவர்கள் எனது கூற்றை ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்வார்களென நம்புகிறேன்.

### இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!

கல்வி, மருத்துவம், சட்டம், கணிதம், நிர்வாகம் போன்ற சகல துறைகளிலும் யாழ்ப்பாணத்தவர்கள் சாதனை புரிந்துள்ளனர். எலிசபெத் மகாராணிக்குக் கணித பாடம் போதித்தவர் உரும்பிராயைச் சேர்ந்த சாதாரண விவசாயியான செல்லப்பாவின் மகன் சுந்தரலிங்கம்.

### பிற்காலத்தில் இந்து சாதனத்தின் ஆசிரியராகவும் திகழ்ந்தார்

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலும் பல்வேறு இடங்களில் பல்வேறு உயர் பதவிகளை யாழ்ப்பாணத்தவர்கள் வகித்துள்ளார்கள். நீதிபதிகளாக, கலெக்டர்களாக (அரசாங்க அதிபர் பதவிக்குச் சமமானதே கலெக்டர் பதவி) பல யாழ்ப்பாணத்தவர்கள் பதவி வகித்துள்ளனர். இவ்வாறு தென்னிந்தியாவிலுள்ள திருவாங்கூரில் பிரதம நீதிபதியாக (Chief Justice) பதவி வகித்தவரே செல்லப்பாபிள்ளை. நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின் யாழ்ப்பாணம் வந்து சைவபரிபாலன சபைத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார் செல்லப்பாபிள்ளை.

தமிழ், சமஸ்கிருதம், கணிதம் போன்ற பல துறைகளிலும் ஆற்றல் பெற்றிருந்த செல்லப்பாபிள்ளை 'இந்துசாதனம்' பத்திரிகையின் ஆங்கிலப்பகுதியின் ஆசிரியராகவும் விளங்கினார். 'இந்து சாதனம்' பத்திரிகை ஆரம்பத்தில் ஒரு பத்திரிகையிலேயே இரு மொழி ஆக்கங்களையும் வெளியிட்டது. 1902 ஆம் ஆண்டு மே மாதம் சுகயீனம் காரணமாகச் செல்லப்பாபிள்ளை மரணமானார். ஏனையவர்களைப்பற்றி அவ்வப்போது பார்ப்போம்.

- தாண்டவன் -

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 02 ★ 08 ★ 1929



உதிர்வு 11 ★ 04 ★ 2008

(சு/552798)

### அமரர் தில்லையன் மயிலு

11.04.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கின் 31ஆம் நாள் நினைவு தினமான இன்று அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். இன்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

''மணிமகால்'',
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி **குடும்பத்தினர்.**

---

வடகோவை இலுப்பையடி விநாயகர் துணை

## 5ஆவது ஆண்டுப் பிரார்த்தனை

தவப்பேறு 21 ★ 12 ★ 1918



சிவப்பேறு 08 ★ 05 ★ 2003

கோப்பாய் - இணுவில்

### அமரர் கந்தையா ஆறுமுகம் (ஆசிரியர்)

*திதி: 11.05.2008*

அன்பால், பண்பால், ஆளுமையால் எம்மை ஆளாக்கிய எந்தையே!
இமைப் பொழுதும் மறவாது இறைஞ்சுகின்றோம்

திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
*(மனைவி - இளைப்பாறிய ஆசிரியர், )*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

28, கைலாசபிள்ளையார் வீதி,
நல்லூர். (74008)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி; அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 19 ★ 06 ★ 1922



மறைவு 10 ★ 04 ★ 2008

### திருமதி நடராசா யோகம்மா

கடந்த 10.04.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கின் வீட்டுக்கிருத்தியம் இன்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும், அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இல:09,2ஆம் ஒழுங்கை,*
*பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (74000)

தகவல்!
**குடும்பத்தினர்.**

---

## யாழ்.மாவட்ட மெய்வன்மை உத்தியோகத்தர்களுக்குப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே.11

யாழ்.மாவட்ட மெய்வன்மை உத்தியோகத்தர்களுக்கான பதவியேற்றப் பரீட்சை எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை சங்கத்தின் பொருளாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

---

## மரண அறிவித்தல்

### திருமதி அப்பாத்துரை திலகவதி



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மதவடியை (அசெம்பிளி ஒவ் கோட் அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை திலகவதி 07.05.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும் மேரி சந்திரநிதி, சந்திரகாந்தி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயசிங்கம், சுதாகரன், ராதா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

மதவடி, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
*(அசெம்பிளி ஒவ் கோட் அருகில்)* (74017)

---

## காணி விற்பனைக்கு

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் கிழக்கு எல்லையில் பாடசாலை, இருபாலைச் சந்தி என்பவற்றுக்கு மிக அண்மையில் அத்திவாரம், கிணற்றுப் பங்குடன் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 060 221 7888**
No.56, *செருக்கப்புலம் வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (73907)

---

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம்,**
**179/1, பிறவுண் வீதியில்**
**2 பரப்பு சதுரக் காணி**
**3 பக்கம் மதிலுடன்**
**விற்பனைக்குண்டு.**
**தொடர்புக்கு: 2582069**
(சு/552788)

---

## கிறிஸ்தவ சகோதரர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

- உங்கள் கிறிஸ்தவ ஆவிக்குரிய வாழ்வு உயர்வடைய கிறிஸ்தவ T.V சனல்களைக் கண்டு ஆசிர்வாதம் பெறுங்கள்.
- 5இற்கும் மேற்பட்ட தமிழ்ச் சனல்களும் மற்றும் ஆங்கில சனல்களும். (Dish Antena)
- குறைந்த செலவில் உங்களுக்கு டிஸ் அன்ரனா பொருத்தி தரப்படும்.
- இது சீர் சேவை மட்டுமே.

மேலதிக விவரங்களுக்கு:
MATHAN ELECTRONICS
SUTHUMALAI JUNCTION
MANIPAY
T.P 077 6571156
077 6699623 (74007)

---

## தென்மராட்சிக் குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், மே.11

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய நிறுவனத்தினர் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றனர்.

மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு, மந்துவில் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இப் பிரிவுகளைச் [illegible] 60 பேருக்கு சுயதொழில் முயற்சிக்கெனவும் தலா 20 ஆயிரம் [illegible] வீதம் வழங்கியுள்ளனர். (202-207)

---

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஆசிரியை செல்வி ஹரட்ஸ்மரியா
அவர்களின் பாசமிகு தந்தை
**தூசைப்பிள்ளை அமிர்தநாதர்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்,**
**புனித பத்திரிசியார் கல்லூரி,**
*யாழ்ப்பாணம்.* (74009)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அன்னரெத்தினம் அனுஷன்

தோற்றம்: 20.05.1985 மறைவு: 12.04.2008

12.04.2008 சனிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது புத்திரன் அன்னரெத்தினம் அனுஷன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.05.2008) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இக்கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
அன்னரெத்தினம் (செல்லக்கண்டு - அப்பா),
அண்ணன்மார் குடும்பம், அக்காமார் குடும்பம், மக்கள், மருமக்கள்.

தம்பாட்டி,
ஊர்காவற்றுறை.

---

## மரண அறிவித்தல்கள்



### கனகலிங்கம் ராஜன்

நீமாட்டி, கோப்பாய் மத்தி, கோப்பாயைச் சேர்ந்த கனகலிங்கம் ராஜன் (08.05.2008) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் கனகலிங்கம்- கமலாதேவி தம்பதியரின் மூத்த புதல்வனும் இராயுதன், கயூராஜ், சுபராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுப்பிரமணியம்- இராசம்மா, சின்னத்துரை- தங்கம்மா தம்பதிகளின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவு டல் இளங்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சு.கனகலிங்கம்**
*(தந்தை).*

*நீமாட்டி,*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (73982)

---

### செல்லத்துரை பாலசுப்பிரமணியம்

*(முன்னாள் சாரதி - யாழ்.மத்திய கல்லூரி, பால் கூட்டுறவு சங்கம், திருநெல்வேலி)*



வண்ணார்பண்ணை, நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாலசுப்பிரமணியம் 08.05.2008 வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (சாண்டோ) - நாகரத்தினம் தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசபூபதி, யோகதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீதரன், செந்தில்குமரன், விஜயலட்சுமி, சாந்தினி, கௌரி, திலீபன், ஜனனி ஆகியோரின் அன்புத் தந்தையும், புவிதாலட்சுமி, பபிதா, இரத்தினேஸ்வரன், கெங்காதரன், ரூபகரன் ஆகியோரின் அன்புமாமனாரும், சதுர்த்திகா, ஜனகன், பிரியங்கா, அஞ்சனா, பிரவீனா, சோபிதன், சுவேதன், சுகிர்தன், சாரங்கன், சாருஜன், சரண்யா, தனுசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று ந.ப. 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*555/7, K.K.S Road, Jaffna.*
*0777741117* (77005)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

---

Baraka

## இருமல், மூக்கடைப்புக்கு விரைவான நிவாரணி



ஆஷ்வா

உடையுங்கள் ஊற்றுங்கள் முகருங்கள்

பரக்கா ஆஷ்வா வில்லை பலநூற்றாண்டுகளாக பாவிக்கப்பட்டுவரும் கருஞ்சீரக எண்ணெய் மற்றும் பரிசோதனை செய்யப்பட்ட மூலிகைகளின் சேர்க்கையாலானது. கருஞ்சீரகமானது ஆஷ்வாவின் ஆற்றலை மேலும் மேம்படுத்துகிறது.
இம் மூலிகைகள் தடிமன், மூக்கடைப்பு, தலையிடி போன்றவற்றிற்கு பாவிக்கப்படுகிறது.




யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடம்
SIVA NARUMANAB POONGA
No:288, Hospital Road, Jaffna.
Tel: 0212222567

Manufactured By: Bio Extracts (Pvt) Ltd. 11A, Milepost Avenue, Colombo 3, Sri Lanka.
Tel: +9411 2810570 Fax: +94 11 2827126. E.mail: bioext@expo.slt.lk www.baraka.lk
Marketed By: Expolanka Pharmaceuticals (Pvt) Ltd.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்த 24 வருட காலத்தில் இந்த வருடத்திலேயே மார்ச் மாதத்தில் அதிக (290 m. m) மழைவீழ்ச்சி!

யாழ்ப்பாண குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும், காலநிலைக் காரணிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளன. விவசாயம், கடற்றொழில் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் மட்டுமன்றி, மக்களின் அன்றாட அசைவுகள் போன்றவற்றினைத் தீர்மானிக்கின்ற சக்திகளாக இவை உள்ளன. மேற்படி காலநிலைக் காரணிகளின் மாற்றநிலைமைகள் மக்களின் அன்றாட வாழ்வில் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் மாறுதல்களைப் பொறுத்து யாழ்ப்பாணக் குடாநாட்டினது காலநிலைமைகளும் மாறிக்கொண்டு வருகின்றன. இதனால் மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு உதவியாகத் தற்போதுள்ள காலநிலைப் போக்குகளை அறிந்து கொள்ள வேண்டிய தேவை அதிகமாகவே உள்ளது.

இந்தவகையில் கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையான (2008 மார்ச்) மழைவீழ்ச்சி வெப்பநிலைப் போக்குகள் யாழ்.குடாநாட்டில் எவ்வாறு உள்ளது என்பதனை நோக்கு




வோம். இதற்கான தரவுகளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் வெளியிடப்படும் புள்ளிவிபர கைந்நூல்களிலிருந்தும் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்திலுள்ள வானிலை அவதானிப்பு நிலையத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன. யாழ்ப் பாணத்தில் மேற்படி ஒரு நிலையம் மட்டுமே தற்போது இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப் பாண மாவட்டத்தின் வானிலைத்தரவுகளை இந்நிலை யமே கணிப்பிட்டு வருகின்றது.

### வழமையான மழைவீழ்ச்சிப் போக்கு

யாழ்ப்பாணக்.குடநாட்டுக்குக் கிடைக்கின்ற மழை வீழ்ச்சியின் பெரும்பகுதி வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றினாலேயே கிடைக்கின்றது. இதனைவிட ஒருங்கல் மேற்கா வுகைச் செயற பாட்டினாலும், சூறாவளி, அயனக் குழப்பங்கள் என்பனவற்றினாலும் இப் பிரதேசம் மழையைப் பெறுகின்றது.

## அண்மைக் காலங்களில் ஏப்ரலில் மழை அதிகரிக்க தென்மேல் பருவப் பெயர்ச்சியே பிரதான காரணம்

எனினும் நவம்பர் - பெப்ரவரி வரையான காலப்பகுதிகளிலேயே இப்பிரதேசம் தனது மொத்த மழைவீழ்ச்சியில் 80% இற்கு மேற்பட்ட மழையினைப் பெறுகின்றது. இதனைவிட ஒருங்கல் மேற்காவுகைக் காலங்களிலும், "இடைப் பருவப்பெயர்ச்சி" (Inter Monsoon) காலங்களிலும் 15% க்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியினைப் பெறுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மழைவீழ்ச்சி ஆண்டுதோறும் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டு அமைந்துள்ளது. இதற்குப் பருவகால ரீதியாக ஏற்பட்டுவரும் மாறுதல்களும், உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றங்களுமே காரணமாகும்.

### ஜனவரி – ஏப்ரல் வரையான சராசரி மழைவீழ்ச்சி

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆண்டு ரீதியாக குறிப்பிட்ட மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு குறைவடைந்து கொண்டு செல்கின்ற நிலைமையைக் காணலாம். இந்தவகையில் 1930ஆம் ஆண்டு தொடக்கம் 1960 வரையில் ஜனவரிமாத சராசரி மழைவீழ்சசி 91.2mm ஆகக் காணப்பட்டது. இது 1961 – 1990 வரையான காலப்பகுதியில் 67.1 mm ஆகக் குறை வடைந்துள் ளது.

மேலும 2000 – 2008 வரையான காலப்பகுதியில் இது 89.7 mm ஆகக் காணப்பட்டுள்ளது. 2000 – 2008 வரையான காலப்பகுதியில் 2002ஆம் ஆண்டு 144.5mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. ஆனால் 2004ஆம் ஆண்டு 2.5 mm அளவான மழைவீழ்ச்சியே கிடைத்துள்ளது. 2004ஆம் ஆண்டிலிருந்து ஜனவரியில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு குறைவாகவே உள்ளது. இதற்கு வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றினது செல்வாக்கு டிசம்பர் மாதத்தின் பிற்பகுதியிலேயே வலுவிழந்து காணப்படுவது ஒரு காரணமாக இருந்தாலும், இக்காலப்பகுதியில் யாழ்ப் பாணக் குடநாட்டினை சூழவுள்ள கடல்களில் காணப்படும் வெப்ப மாற்றங்களும் காரணமாகும். எனினும் 1030 – 2008 என்ற நோக்கில் ஜனவரி மாதத்தின் சராசரி மழைவீழ்ச்சி குறைவடை வதனைக் காணமுடியும்.

ஆனால் பெப்ரவரி மாதத்தில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. 1931 – 1960 வரையான காலப்பகுதியில் 34.8 mm மழைவீழச்சியும் 1961 – 1991 வரையான காலத்தில் 39mm மழைவீழ்ச்சியும், 2000 – 2008 வரையான காலத்தில் 42.7mm மழைவீழ்ச்சியும் சராசரியாகக் கிடைத்திருப்பதனைக் காணலாம். பெப்ரவரியின் பிற்பகுதிகளில் உகைப்பு செயன்முறையினால் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் அளவு அதிகமாகவிருப்பதுடன், ஜனவரி மாதத்தின் பிற்பகுதியில் அண்மையில் அதிகரித்து வருகின்ற வெப்பநிலையினால் வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற தாழமுக்கச் செயற்பாடுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவை அதிகரிக்கச் செய்துள்ளன எனலாம். எனினும் கடந்த 2000 – 2008 வரையான காலப்பகுதியில் 2000 ஆம் அண்டு பெப்ரவரி மாதம் 107 mm மழைவீழ்ச்சியைப் பெற்றுள்ள அதேசமயம், 2005ஆம் ஆண்டு 0.0 mm மழைவீழ்ச்சி கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### 24 வருடங்களில் 2008 மார்ச்சில் அதிக மழைவீழ்ச்சி

மார்ச் மாதத்தினைப் பெறுத்தவரையில் 1930 தொடக்கம் 1990 கள் வரை சராசரியாக 26.8 mm மழைவீழ்ச்சியே காணபபடுகின்றது. இதற்குப் பெரும்பாலும் மார்ச் மாதம் வரண்ட காலப்பகுதியாகவும், வடகீழ் "மொன்சூன்" பின்வாங்கும் காலமாகக் காணப்படுவதும் குறிப்பிடத் தக்கதாகும். இந்த வகையில் பல மார்ச் மாதங்கள் மழையற்ற காலமாகவே காணப்பட்டுள்ளன. 1987 மார்ச் 0.0 mm மழைவீழ்ச்சியும், 1991 மார்ச் 1.4 mm மழைவீழ்ச்சியும், 1999 2.6 mm மழை வீழ்ச்சியும், 2005ஆம் ஆண்டு மார்ச்சில் 0.0 mm மழை வீழ்ச்சியும் கிடைத்துள்ளது. ஆனால் 2008 மார்ச்சில் அயன இடை ஒருங்கல் வலயத்தின் செயற்பாட்டினால் ஏற்பட்ட தாழமுக்கத்தின் காரணமாக மார்ச் முதலாம் திகதியில் இருந்து 23ஆம் திகதிவரை 243.1 mm மழைவீழ்ச்சி கிடைத்தள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதிலும் 2008 மார்ச் 20ஆம் திகதி 47.4 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. கடந்த 24 வருடங்களாக மார்ச் மாதத்தில் கிடைத்த மழைவீழ்ச்சியில் 2008 மார்ச் மாதத்திலேயே அதிகளவான மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது.

அடுத்து ஏப்ரல் மாதத்தினை எடுத்துக்கொண்டால் மார்ச், ஏப்ரல் மாதங்கள் ஒருங்கல் மேற்காவுகைக்குரிய மாதங்கள் என்பதனால் இம்மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி அதனுடைய செல்வாக்கிற்குட்பட்டதாகவே அமைகின்றது. ஆனால் ஏப்ரல் மாதத்தில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு குறைவடைந்து கொண்டு செல்வதனைக் காணமுடியும். 1930 – 1960 களுக்கிடைப்பட்ட காலத்தில் ஏப்ரல் மாதத்தின் சராசரி மழைவீழ்ச்சி 66.2 mm ஆகக் காணப்பட்டது. ஆனால் 1961 – 1990 வரையான காலப்பகுதியில் 52.3 mm மழை வீழ்ச்சியே கிடைத்துள்ளது. பின்னர் 2001 ஏப்ரலில் 125.8 mm உம் 2002 ஆம் ஆண்டு ஏப்ரலில் 140.1 mm மழை வீழ்ச்சியும் கிடைத்துள்ளது. 2005 ஆம் ஆண்டு ஏப்ரலில் 150.1mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. எனினும் ஏப்ரல் மாதத் தினைப் பொறுத்தவரை ஓரளவுக்குச் சராசரியான மழைவீழ்ச்சி கிடைத்து வருகின்றது.

கடந்த 60 ஆண்டுகால யாழ்ப்பாண மாவட்டத்தில் மார்ச் மாதத்தின் மழைவீழ்ச்சியின் அளவு குறைவாக இருந்தால் ஏப்ரல் மாதத்தில் அதிக மழைவீழ்ச்சி கிடைத்து வருவதனைக் காணமுடிகின்றது. அதிலும் 2000 – 2008 ஆம் அண்டு வரையான காலப்பகுதியில் இதனைக் காண முடியும். 2000 ஆண்டு மார்ச்சில் 17.3 mm மழைவீழ்ச்சி கிடைக்க ஏப்ரலில் 62.0 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. அதுபோல் 2001 மார்ச்சில் 0.0mm மழைவீழ்ச்சி கிடைக்க ஏப்ரலில் 125.8 mm மழை வீழ்ச்சியும், 2002 மார்ச்சில் 11.11 mm மழைவீழ்ச்சி கிடைக்க, ஏப்ரலில் 140.1 mm மழை வீழ்ச்சியும், 2005 இல் மார்ச் மாதச் சராசரி மழைவீழ்ச்சி 0.0 mm ஆக இருக்க ஏப்ரல் மாதத்தில் 150.1 mm மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது. ஆனால் 2004 மார்ச்சில் 31.8 mm மழைவீழ்ச்சி கிடைக்க, ஏப்ரலில்26.8 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2006 மார்ச்சில் 45.7 mm மழைவீழ்ச்சி கிடைக்க ஏப்ரலில் 269 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது.

எனவே மார்ச் மாதத்தில் கிடைக்கும் மழைவீழ்ச் சியின் அளவு ஏப்ரல் மாதத்தில் கிடைக்கும் மழைவீழ்ச் சியின் அளவைத் தீர்மானிக்கின்றது. இதற்கு மார்ச்சில் ஏற்படும் கடுமையான வெப்பம் வங்காள விரிகுடாவில் தாழ முக்கத்தினை ஏற்படுத்தி, மழைப்பொழிவை ஊக்கு விப்பதுடன், ஏப்ரலின் பிற்பகுதிகளில் தென்மேல் "பருவப் பெயர்ச்சி" தோன்ற ஆரம்பிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இத னால் ஏற்படும் காலநிலை மாற்றங்கள் ஏப்ரல் மாதத்தில் கிடைக கின்ற மழைவீழ்ச்சியின் அளவை அதிகரிக்கச் செய்கின்றன எனலாம்.

### மே – செப்ரம்பர் வரையான மழைவீழ்ச்சி

மே தொடக்கம் செப்டம்பர் வரை கிடைக்கின்ற மழைவீழ்ச்சியானது யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தவரை குறைவாகும். ஏனெனில் இக்காலப்பகுதி தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்கிற்கு உட்பட்ட காலமாகக் கருதப்படுவதனால் அதன் செல்வாக்கு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றமையால் இக்காலத்தில் கிடைக்கின்ற மழையின் அளவு குறைவாகும். 1931 – 1960 வரையான காலங்களில் மேற்குறிப்பிட்ட மாதங்களில் சராசரி 164.6 mm மழைவீழ்ச்சியும், 1961 – 1990 வரையான காலங்களில் 189.9 mm மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளன. 2000 – 2008 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் மே – செப்டம்பர் வரை கிடைத்த மழைவீழ்ச்சியின் தன்மைகளை நோக்கினால், 2004 ஆம் ஆண்டு மே மாதம் 256.9 mm மழைவீழ்ச்சியும், 2003ஆம் அண்டு ஓகஸ்ட் மாதம் 145.8 mm மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளது. இவை கூடிய மழைவீழ்ச்சிகளாகக் காணப்பட குறைந்த மழைவீழ்ச்சிகளாக 2006ஆம் ஆண்டு மே மாதம் 1.0 mm உம், ஜுன் மாதம் 0.0 mm உம், ஜுலையில் 0.0 mm உம், ஓகஸ்ட் 0.0 mm பெறப்பட்டுள்ளன. 2006 ஆம் ஆண்டு மேயிலிருந்து ஓகஸ்ட் வரையான காலத்தில் 1.0 mm மழைவீழ்ச்சியே கிடைத்துள்ளது. 2005 ஆம் ஆண்டும் இக்காலப் பகுதியில் குறைவான மழைவீழ்ச்சியே கிடைத்துள்ளது. அதுபோல் 2000, 2002ஆம் ஆண்டுகளிலும் இம்மாதங்களில் குறைவான மழைவீழ்ச்சியே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


எனினும் ஓகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியில் அதாவது ஓகஸ்ட் 20ஆம் திகதிக்கு பின்னர் ஓரளவு மழைகிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### செப்ரெம்பர் மழைவீழ்ச்சியில் மாறுபடும் தன்மை

செப்ரம்பர் மாதத்தில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியில் மாறுபடுந்தன்மை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 1931 – 1960 வரையான காலத்தில் 44.8 அஅ மழைவீழ்ச்சியும், 1961 – 1990 வரையான காலத்தில் [illegible] mm மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளது. 2000 – 2008 வரை செப்ரம்பர் மாதத்தில் 94.1 mm என்ற அளவில் மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. இடைமொன்சூன் காலமாகிய இக்காலப்பகுதியில் ஒருங்கல் மேற்காவுகைச் செயற்பாட்டினாலும் மழைகிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு இக்காலமழை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இக்காலத்திலும், ஓகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியிலும் கிடைக்கின்ற மழையை விதைப்பு மழை என்று அழைப்பர். இம் மழைவீழ்ச்சி சீராக இருக்குமானால் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் குறிப்பாக விதைத்தல் செயற்பாடு சிறப்பாக அமைய வாய்ப்புண்டு. இம்மாதத்தில் மழைவீழ்ச்சி குறைவாக இருந்தால் அது யாழ்ப்பாண மாவட்டத்தின் பயிர்ச்செய்கை நடவடிக்கையிலும் பாதிப்பினை ஏற்படுத்தும் எனலாம்.

### ஒக்டோபர் – டிசம்பர் வரையான மழைவீழ்ச்சி

ஒக்டோபர் மாதத்தினைப் பொறுத்தவரையில் இம்மாதத்திலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடு சிறந்த மழைவீழச்சியைப் பெறத் தொடங்குகின்றது. வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்




றினது தொடக்க காலமாக இருப்பதனால் அதிக மழையைப் பெறுகின்றது. வங்காள விரிகுடாவில் இக்காலப்பகுதியில் தாழமுக்கம் காரணமாகச் சில சமயங்களில் சூறாவளியின் செயற்பாடுகளும் அதிக மழைவீழ்ச்சிக்குக் காரணமாக உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டினது மாரிப் பருவம் பெரும்பாலும் இக்காலப்பகுதியிலேயே தொடங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1931 – 1960 வரையான காலப்பகுதியில் ஒக்டோபர் மாதத்தின் சராசரி மழைவீழ்ச்சியாக 239.75 mm மழை வீழ்ச்சி கிடைத்தள்ளது. 1961 – 1990 வரை 2428 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2000 – 2008 வரையான காலத்தில் 257.8 mm மழை வீழ்ச் சியும் சராசரியாகக் கிடைத்துள்ளன. 2000 – 2008 வரையான காலப்பகுதியில் ஒக்ரோபர் மாதத்தில் கிடைத்த மழை வீழ்ச்சியில் 2001 ஒக்ரோபர் இல் 460.3 mm மழைவீழ்ச்சி, அதிகூடிய மழைவீழ்ச்சியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மிகக் குறைந்த மழைவீழச்சி 2000 ஒக்ரோபரில் 83.5 mm மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது. 1931 இலிருந்து 2007 வரை யான காலப்பகுதியில் ஒக்ரோபர் மாதத்தில் கிடைக்கப் பெற்ற மழை வீழ்ச்சியின் அளவு அதிகரித்துக்கொண்டு வருவதனைக்/ காணமுடிகின்றது. எனினும் பெரும்பாலான ஒக்ரோபர் மாதங்க ளில் சராசரியாக 174mm இற்கு மேலேயே மழைவீழ்ச்சி கிடைத துள்ளமையைக் காணலாம்.

### நவம்பரிலேயே அதிகூடிய மழைவீழ்ச்சி

அடுத்து நவம்பர் மாதங்களில் கிடைத்திருக்கின்ற மழைவீழ்ச்சி யாழ்ப்பாணக் குடாநாட்டில் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். ஜனவரி – டிசம்பர் வரையான 12 மாதங்களிலும் நவம்பர் மாதத்திலேயே அதிகளவான மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்கிற்கு உட்பட்ட இம மாதமே யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஈரப் பருவத்தில் மிக உச்சமான மழை வீழ்ச்சியைப் பெறுகின்ற மாத மாகும். நவம்பர் மாதங்களில் சரா சரியாக 404.85 mm மழை வீழ்சசி கிடைத்துள்ளது. 1961 – 1990 வரையான காலப்பகுதியில் நவம்பர் மாதங்களில் 336.1 mm மழைவீழ்ச்சியும் 2000 – 2008 வரையான காலப்பகுதியில் 427.2 mm மழை வீழச்சியும் கிடைத்துள்ளது. ஆண்டு தோறும் நவம்பர் மாதங்களில கிடைக்கின்ற மழை



நா.பிரதீபராஜா
உதவி விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

வீழ்ச்சியில் மாறுதன்மை காணப்படுகின்றது. 1931 – 2008 வரையான காலப்பகுதியில் நவம்பர் மாதங்களி டையே கிடைக்கின்ற மழைவீழ்ச்சியில் மாறுபடும் தன்மை காணப்பட்டாலும் அனைத்து ஆண்டுகளிலும் நவம்பர் மாதமே அதிகூடிய மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது. 2000 – 2008 வரையான காலப் பகுதிகளில் 2005ஆம் ஆண்டு நவம்பர் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 554.9 mm மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ள அதேசமயம் 2000ஆம் ஆண்டு நவம்பரில் 286.8mm மழைவீழ்ச்சி குறைந்த மழைவீழ்ச்சியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் நவம்பர் மாதத்தில் கிடைக்கும் அதிக மழையினால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தால் பாதிக் கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

டிசம்பர் மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி சராசரியாக 200 mm இற்கு மேலேயே உள்ளது. 1931 – 1960 வரையான காலப் பகுதிகளில் 262.5mm மழைவீழ்ச்சி கிடைத்தள்ளது. 1961 – 1990 வரையான காலப்பகுதிகளில் 278.2 mm மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளது. 2000 – 2008 வரையான காலப்பகுதியில் 219.4 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2000 – 2008 வரையான டிசம்பர் மாதங்களில் 2001 டிசம்பரில் 321.1mm அதிகூடிய மழைவீழ்ச்சியும், 2003 டிசம்பரில் 56.5mm குறைவான மழைவீழ்ச்சியாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1930 தொடக்கம் 2008 வரையான டிசம்பர் மாதங்களில் டிசம்பர் 5ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் பெரும்பாலும் மழைவீழ்ச்சி ஒப்பீட்டளவில் அதிகமாகக் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர்
குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
✱ராஜீவ்-நவாலிவீதி,
ஆனைக்கோட்டை.
(73573)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 33 வயது, ரேவதி நட்சத்திரம், பாவம் 14½, உயரம் 5'8", U.K. P.R உடைய கொம்பனியில் Supervisor ஆகத் தொழில் பார்க்கும் மணமகனுக்கு, U.K.இல் இருக்கும், அங்கு செல்ல விருப்பமுடைய தகுந்த ஓரளவு படித்த, அழகான மணமகள் தேவை. முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 3093
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(73986)


## மாவட்ட கூடைபந்தாட்ட சங்கத்தின் கூட்டம் இன்று

வலி.வடக்கு,மே11

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் பொதுக்கூட்டம் இனறு ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட கூடைபந்தாட்ட விளையாட்டுக் கழகங்களின் மூன்று அங்கத்தவர்களைக் கலந்து கொள்ளும்படி கூடைபந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (202-86)


## WANTED

M.O/R.M.O.
FULL TIME / PART TIME
APPLY:
DIRECTOR,
CENTRAL NURSING HOME (PVT),
[illegible], PALALY ROAD, JAFFNA.
(73873)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறெயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
(73741)

## வேலை ஆள்கள் தேவை

கையடக்கத் தொலைபேசி
விற்பனையாளர், கணக்காளர்,
கணனி அனுபமுள்ளவர்
இருபாலாரும் நேரில் வரவும்.
தொடர்பு:யாழ்.போன் சொப்,
இல.10, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 3817
(சி/552787)

## கலாலயா

பயிற்சியகம்

( பெருமாள் கோயிலுக்கு அண்மையில் )

### மகளிருக்கான துரித 3 மாதகால பயிற்சிகள்

**கேக் அலங்காரம் :** பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மண்ட் ஐஸிங், Frosting Icing, மாச்சீனி மலர்கள் (Sugar Flowers). Fondant ஐசிங், Water Icing.

**உணவு தயாரித்தல் :** பலவகையான உணவுகள், சிற்றுண்டிகள் சர்பத், ஐஸ்கிறீம், புடிங், சுப், மேசை அலங்காரம் செய்தல்.

**கூந்தல் அலங்காரம் :** பல வகையான கொண்டைகள் போடுதல், Dressing.

**பப்றிக் வர்ணம் தீட்டுதல் :** கைக்குட்டை, தலையணை உறை, கதிரை விரிப்புக்களில், சேலையில் (Saree Painting) கண்ணாடியில் வர்ணம் தீட்டுதல்.

**கை வேலை :** கம்பளி நூல் வேலை, பஞ்சில் பொம்மைகள் செய்தல் (Soft Toys) கழிவுத் துணிகளில் வேலைப்பாடுகள், றிபன் வேலை, மற்றும் பல.

**பூ வேலை :** கடதாசியினாலும் Paper Ribbon ஆலும் மலர்கள் செய்தல், மலர்ச் செண்டுகள் (Bouquet) செய்தல், கயாபா றிபன் மலர்கள் செய்தல்.

Facial : அடிப்படை முக அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் (அடுத்தமாத நடுப்பகுதியில் ஆரம்பமாகிறது.)

### 6 மாதகால உடை தயாரித்தல் (தையற் கலை) பயிற்சிகள்

அடிப்படைத்தையலுடன் குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடை.கள், சாரிபிளவ்ஸ், சுரிதார் தைத்தல், பூப்போடுதல்.

- 3 பாடங்களுக்கு மேல் பயில்பவர்கள் தவணைமுறையில் கட்டணம் செலுத்தலாம்.
- இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.
- பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**சனி ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 18-05-2008**
**கிழமைநாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 19-05-2008**

*மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*

பதிவாளர்.

## மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

பிரபல இலத்திரனியல் உற்பத்தித் தொழிற்சாலையில் பொறியியல் உதவியாளர்கள்/Diploma பட்டதாரிகள் உடனடித் தேவை.

உதவியாளர்கள் வெற்றிடங்கள் ஆண்கள் - 100
பெண்கள் - 150

சாதாரண ஆங்கில அறிவுடைய 18-35 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் உதவியாளர்கள் தேவை

சம்பளம் ஆண்கள் RM 800-1000RM Rs 25400-Rs 33000/=
பெண்கள் RM 700- 800RM Rs 23100-Rs 25400/=


Diploma பட்டதாரிகள் வெற்றிடங்கள் - 50 (ஆண்கள்)
சம்பளம் RM 1000-1400RM Rs 33000-Rs 46200/=

★ தங்குமிடம் ★ மருத்துவ சேவை
★ பிரயாணச்சீட்டு இலவசம்

கடவுச்சீட்டும், கடவுச்சீட்டு பிரதி 3, 10 நிழற்படங்களும் (10 Passport Size Photo), சுயவிவரத்துடன் கீழ்க்காணும் முகவரிக்குச் சமூகமளிக்கவும்.

No.49A, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(73988)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
## குமாரலிங்கம் இரகுநாதன்

**மண்ணில்: 14.04.1948 விண்ணில்: 11.04.2008**

கடந்த 11.04.2008 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் குமாரலிங்கம் இரகுநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். குடும்பத்தினர்.

(சி/552782)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் வெறும் "ஷோகேஸ்" காட்சிப் பொருள்களே!

இம் மாதம் (மே) மூன்றாம் திகதி பத்திரிகைச் சுதந்திரதினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்திலேயே பத்திரிகை அறிமுகம் செய்யப்பட்டது. பிரிட்டிஷாரே இலங்கையிலும் பத்திரிகைகளை வெளியிட்டனர். இந்தப் பத்திரிகைகள் இலங்கைப் பதிப்பு, ஐரோப்பியப் பதிப்பு என இரு பதிப்புக்களை வெளியிட்டுவந்தன. அந்தப் பத்திரிகைகள் உள்ளூர் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. இதனால் சட்ட சபையின் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாகப் பதவிவகித்த சிங்கள உறுப்பினர்கள் சிலர் ஒன்று சேர்ந்து 'கண்டி றெரால்ட்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். தமிழர்கள் உதயதாரகை, இந்து சாதனம், கத்தோலிக்க பாதுகாவலன் என்ற பெயர்களில் சமயப்பத்திரிகைகளை ஆரம்பித்தார்களே அன்றி பொதுவான சமூக விழிப்புணர்ச்சி அல்லது அரசியல் விழிப்புணர் வூட்டும் பத்திரிகைகளை ஆரம்பிக்கவில்லை என்றே கூறலாம்.

### இலங்கையின் முதலாவது பத்திரிகை ஆசிரியர்

இலங்கையில் பத்திரிகை ஆசிரியராகப் பதவி வகித்த முதலாவது இலங்கையர் என்ற பெருமையை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஹென்றி மார்ட்டின் என்பவரே பெற்றுள்ளார். இவரும் ஒரு சமயப் பத்திரிகையான உதயதாரகையிலேயே (MORNING STAR) ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

இலங்கை பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் உன்னதமான நிலையில் இருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்தக் காலத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளே இதற்குச் சான்று பகர்கின்றன.

விக்ரோறியா மகாராணி இலங்கை உட்பட பிரிட்டனின் குடியேற்ற நாடுகள் அனைத்துக்கும் மகாராணியாக விளங்கினார். பாடசாலைகளில், எமது அரசியார் எங்கே இருக்கிறார் என்ற வினாவுக்கு எமது அரசி விக்ரோறியா மகாராணி; எமது அரசி இங்கிலாந்தில் இருக்கிறார் என்றே மாணவர் களுக்குப் போதிக்கப்பட்டது.

இலங்கையில் இருந்து வெளிவந்த 'ஒப்சேவர்' பத்திரிகை விக்ரோறியா மகாராணியையும் விமர்சிக்கத் தவறவில்லை. விக்ரோறியா மகாராணிக்கும் யாழ்ப்பாணத் தமிழர் ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாக 'ஒப்சேவர்' பத்திரிகை ஒருமுறை செய்தி வெளியிட்டது. அது இருக்கட்டும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின் பதவிக்கு வந்த இரண்டு அரசியல் கட்சிகளும் – அரசாங்கங்களும் – பத்திரிகையாளர்களையும் பத்திரிகைகளையும் தமது எதிரிகளாகப் பார்க்கத் தொடங்கினர். இன்று வரை இது தொடர்கிறது. ஐ.தே.க, சிறீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டுமே ஊடகங்கள் மீது கடும் போக்கையே கடைப்பிடித்து வந்துள்ளன; வருகின்றன.

### பத்திரிகையாளர் மீதான முதலாவது அச்சுறுத்தல்

சுதந்திர இலங்கையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மீதான முதலாவது அச்சுறுத்தல் சம்பவம் 1958ஆம் ஆண்டு இடம்பெற்றது. 'டெய்லி நியூஸ்' பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய தார்சி வித்தாச்சி 1958ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் பற்றி அவசரகால நிலை 58(Emergency-58) என்ற ஆங்கில நூலை வெளியிட்டார். அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா இந்த நூலைத் தடை செய்ததுடன் தார்சி வித்தாச்சியையும் 24 மணித்தியாலங்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார். தார்சி வித்தாச்சி பின்னர் லண்டன் சென்று அங்கு வைத்து நூலை வெளியிட்டார். அடங்காத்தமிழன் என அழைக்கப்பட்ட பேராசிரியர் சுந்தரலிங்கம் இந்த நூலை நாடாளுமன்றத்தில் வாசித்துக் காட்டினார். அதன் பின்னர் பண்டாரநாயக்காவின் துணைவியார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 'லேக்ஹவுஸ்' நிறுவனத்தைத் தேசியமயமாக்கியதுடன் 'தவச' பத்திரிகை நிறுவனத்தை மூடிச் 'சீல்' வைத்து மூன்று வருடங்கள் செயலிழக்கவைத்தார்.

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே. ஆர். தான் ஊடகசுதந்திரத்திற்கு மதிப்பளிப்பதாகக் கூறி 'தவச' நிறுவனம் மீண்டும் செயற்படுவதற்கு அனுமதி வழங்கினார். ஆனால் ஜே. ஆரின் ஆட்சிக் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வார ஏடான 'சுதந்திரன்' பத்திரிகை அலுவலகம் பலதடவை 'சீல்' வைக்கப்பட்டதுடன் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனும் நாலாம் மாடியில் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இது சிறீமாவின் ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்தது.

### ஈழநாடு அலுவலகம் எரிக்கப்பட்டது

ஜே. ஆரின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'சற்றர்டே றிவியூ' பத்திரிகை அலுவலகமும் பல தடவை 'சீல்' வைக்கப்பட்டது. யாழ். நூலகம் எரிக்கப்பட்ட அன்று (31.05.01981) ஈழநாடு பத்திரிகை அலுவலகமும் எரிக்கப்பட்டது.

பின்னர் ஒரு சமயம், விமானக்குண்டு வீச்சுச் செய்தியைத் தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்தமைக்காக ஜே.ஆர் ஜெயவர்த்தனா, 'வீரகேசரி' நிறுவனத்தின் அதிபர் ஞானத்தை அழைத்து இவ்வாறான செய்திகளுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டாமெனவும் இது படையினரின் மனோ நிலையைப் பாதிக்குமெனவும் அறிவுறுத்தினார்.

பிரேமதாசாவின் ஆட்சிக்காலமும் இலங்கைப்பத்திரிகையாளர்களைப் பொறுத்த வரையில் இருண்ட யுகமாகவே கருதப்படுகிறது.

'சண்டே ஐலண்ட்' பத்திரிகை ஆசிரியராக இருந்த விஜிதயாப்பாவை எழுத்துக்களைச் சீரணிக்க முடியாத நிலையில் அவரை, பகிரங்கமாகவே விமர்சித்து வந்தார் பிரேமதாஸ. இதனால் பத்திரிகை நிர்வாகம் கொடுத்த அழுத்தம் காரணமாகத் தனது பதவியை இராஜிநாமா செய்தார் விஜிதயாப்பா. இதே காலப் பகுதியில் றிச்சார்ட் டீ சொய்சா உட்பட வேறும் சில பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர்.

### யாழ்ப்பாணத்தில்....

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பத்திரிகையாளர்களும் பத்திரிகை நிறுவனங்களும் பல்வேறு அழுத்தங்களின் மத்தியிலேயே தமது பணியை தொடர்ந்து வந்துள்ளனர், வருகின்றனர். அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினை கூர்மையடையத் தொடங்கிய பின் குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் அளவிடமுடியாதவை.

இலங்கை இராணுவம், இந்திய இராணுவம், தமிழ்ப்போராளிகள் போன்ற பலதரப்பட்ட சக்திகளின் அழுத்தங்களுக்கும் முகம் கொடுத்தே தமது பத்திரிகைப் பணியை மேற்கொண்டு வருகின்றனர். குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் முகம் கொடுத்த பிரச்சினைகளை மிகச் சுருக்கமாகப் பார்ப்போம். இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முந்தியகாலம் யாழ்ப்பாணம் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலம். அப்போதைய நிலவரம் பற்றி ஈழநாட்டுப் பத்திரிகை ஆசிரியராக இருந்த கோபால ரத்தினம் (கோபு) கூறியதைப் பார்ப்போம்: "நான்கு இயக்கக்காரர்களும் நான்கு அறிக்கையுடன் வருவார்கள் எல்லோரும் 'பிஸ்டல்'லுடன்தான் வருவார்கள். அறிக்கையைத் தந்து விட்டு நாளைக்கு தலைப்புச் செய்திகள் வரவேண்டும் என்று சொல்லி விட்டு போவார்கள். நான் என்ன செய்வது நான்கு தலைப்புச் செய்தியாக போட முடியும்?" என்றார்.

இந்திய இராணுவ காலப்பகுதியில் புலிகள் இந்திய இராணுவ யுத்தம் ஆரம்பித்த பின் சில மாதங்கள் குடாநாட்டுப் பத்திரிகைகள் யாவும் தடை செய்யப்பட்டன. ஈ. பி. ஆர். எல். எவ். வெளியிட்ட 'விடுதலை' என்ற பத்திரிகை பலவந்தமாக விற்பனை செய்யப்பட்டது.

ஓரிரு மாதங்களின் பின்னர் குடாநாட்டுப் பத்திரிகைகளை வெளியிடுவதற்கு இந்திய இராணுவம் அனுமதி வழங்கிய போதிலும் கடுமையான தணிக்கை இந்திய இராணுவத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 'புலி' என்ற எழுத்தைக் கூட பிரசுரிக்கக் கூடாது என இந்திய இராணுவம் தடை விதித்திருந்தது. இந்திய இராணுவத்தினரின் காலப்பகுதியில் சில பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டும் பலர் தாக்கப்பட்டும் சிறை வைக்கப்பட்டும் உள்ளனர். தமிழ்ப் பத்திரிகைகளின் பத்திரிகையாளர்கள் மட்டுமன்றி ஆங்கிலப் பத்திரிகைகளுக்குச் செய்தியாளர்களாக கடமையாற்றியவர்கள் கூட இந்திய இராணுவத்தால் இம்சைப் படுத்தப்பட்டனர்.

அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் தனது "உண்மை, நடுநிலமை, அஞ்சாமை" என்ற மகுட வாசகத்தை பிரசுரிப்பதை நிறுத்த வேண்டிய இக்கட்டு உதயனுக்கு ஏற்பட்டது. ஈழநாடு, ஈழமுரசு போன்ற பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய கோபாலரத்தினம் (கோபு) மருதனார் மடத்திலிருந்த இந்திய இராணுவ முகாமில் சிறை வைக்கப்பட்டிருந்தார். இவரது சிறை அனுபவங்கள் "ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை" என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் 'உதயன்' அலுவலகம் விமானக் குண்டு வீச்சுக்கு உள்ளானதுடன் சில தடவைகள் 'சீல்' வைக்கப்பட்டது. உதயன் நிறுவனத்தினுள் 2006 மே இரண்டாம் திகதி அன்று ஆயுததாரிகள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை உச்சக்கட்ட ஊடக சுதந்திர பறிப்பு.

இலங்கை முழுவதும் தமிழர் சிங்களவர் என்ற பாகுபாடின்றி ஊடகவியாலாளர் கள், ஊடகப் பணியாளர்கள், பத்திரிகை விற்பனையாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் கொலை தொடர்பாக இது வரை யாரும் கைது செய்யப்பட்டதாகவோ, தண்டிக்கப்பட்டதாகவோ இல்லை. கடந்த ஆண்டு இலங்கையில் ஆறு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனங்களின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதில் இலங்கைக்கு 156 ஆவது இடம் கிடைத்துள்ளது. சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கைப்படத்தில் யாழ்ப்பாணத்திற்கு நேரே சிவப்புப் புள்ளி இடப்பட்டு ஊடக வியலாளர்களுக்கு ஆபத்தான பிரதேசம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் அவை இரண்டும் "சப்பாத்து"க்காலால் மிதிக்கப்படும் நிலை தொடர்கிறது

தமிழ்ப் போராளிக்குழுக்கள் பல அவ்வவ்போது பத்திரிகைகளுக்குத் தீ வைக்கும் பணியையும் நிறைவேற்றியிருக்கின்றன. இது யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு என மாவட்ட வேறுபாடின்றி பரவலாள அவ்வவ்போது இடம்பெற்றிருக்கிறது.

இலங்கையை பொறுத்த மட்டில் இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டாலென்ன பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் என்பன காட்சிப் பெட்டிப் ('ஷோகேஸ்') பொம்மைகளே!.

யாழ்ப்பாணத்திலோ அவை இரண்டும், கடந்த பல ஆண்டுகளாக சப்பாத்துக் கால்களால் தொடர்ந்து மிதிக்கப்பட்டு வருகின்றன. ★

-ந. பரமேஸ்வரன்

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | ■ | 5 |
| 6 | | | | ■ | 7 | | |
| 8 | | ■ | 9 | 10 | | | |
| | ■ | 11 | | | ■ | | |
| 13 | 14 | | | | 15 | | |
| ■ | 16 | | | 17 | | ■ | 18 |
| 19 | ■ | 20 | | | ■ | | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:......................................

விலாசம்:......................................

......................................

கையொப்பம்:......................................

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 10**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன்கிழமைக்கு (21.05.2008) முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 10 இல் வெற்றிபெற்றோர் விவரம் 25.05.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.

**இடமிருந்து வலம்**

1. சார்பானது.
6. நிச்சயம்.
7. குரு.
8. பாகஞ்செய்.
9. அளவு.
11. குதிரை கட்டும் இடம்.
12. தொடக்கம்.
14. நீர்த்தன்மையான ஊடகம்.
15. இடமிருந்து வலம் 17 இலிருந்து இதனைப் பெறலாம்.
16. பலம்.
17. வீட்டுக்குச் செல்வம் எனக் கருதப்படும் மிருகம்.
20. ஒரு அரசன்.
21. விலை உயர்ந்தது; கடினமானது.
22. பாலம்.

**மேலிருந்து கீழ்**

1. கூடிய வலு.
2. கூர்மை.
3. ஒரு பயிர்; இதிலிருந்து நூல் எடுக்கலாம்; ஆனால் இறுதியின் "ல்" இழந்து நிற்கிறது.
4. அழகான தன்மை.
5. கெட்ட எண்ணம்.
7. இவ்வாறு சொல்லவேண்டியதை பேச்சு வழக்கில் 'ஓம்' என்பதுண்டு.
10. 'அவர்களுடைய' என்ற அர்த்தமுள்ளது.
11. சௌந்தர்யம்.
12. நிழல் தரும் பெரு விருட்சம்.
14. மன்மதனின் காதலி.
15. ஆழ்வார்கள் பாடியது.
18. வாகனத்தைச் செலுத்துபவன்.
19. கோர்த்துச் சேர்ப்பதனால் உருவாவது.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 08 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) தன்னவன். (3) துதி. (6) ரசிகன். (9) தகா. (11) தவளை. (12) இயல்பு. (14) தடாகம். (15) இல். (16) அமை. (17) இரா. (18) கரணம். (19) வைகுண்டம். (20) புவி.

**மேலிருந்து கீழ்**

(1) தசரதன். (2) வரன். (4) திரை. (5) இதயம். (7) சிவ. (8) களைதல். (10) கால். (12) இகபரம். (13) புதுமை. (15) இராகு. (16) அம்பு. (17) இவை. (18) கட.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 08 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு** இ. குகானந்தன், மின்மாற்றிக்கு அருகில், சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

**2 ஆம் பரிசு** ந. ஞானோதயன், செல்லப்பா விடு, தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை.

**3 ஆம் பரிசு** இ. சந்திரசேகரன், மாசியப்புலம் வீதி, ஏழாலை வடக்கு, ஏழாலை.

பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) அ. கரிந்தன், இல.620, நாவலர் வீதி, அரியாலை.

(2) திருமதி இ. பேரம்பிரம், இல.33, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) பா. கார்த்திகா, பொதுநூலகம், கட்டைவேலி ப.நோ.கூ.சங்கம், நெல்லியடி.

(4) வை. சிவப்பிரகாசம், [illegible] வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(5) செல்வி வாணிசிறி செல்வகணேசபிள்ளை இல.72/26, பணிக்கர் வளவு, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகமாகத் தரம் உயரும் யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரி

யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரி தொழிநுட்ப நிறுவகமாகவும் தரம் உயர்த்தப் பட்டுள்ள நிலையில் தொழில்நுட்ப பல் கலைக் கழகமாக மிக விரைவில் தரம் உயர்த் தப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குரிய முன்னெடுப்பும் அனுமதியும்வாழ்க் கைத்துறை தொழிற் பயிற்சி அமைச்சரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதன் முதல் கட்டமாகக் கொரியாவில் இருந்து அதி நவீனமான இயந்திரங்களை கொண்டு வந்து பொருத்துவதற்கு வசதி யான கட்டடங்கள் ஒரு வருடத்தின் முன் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் நிலையை அடைந்துள்ளன. தென் கொரிய நாட்டிலிருந்து நவீன தொழில்நுட்ப இயந் திரங்களும் உபகரணங்களும் 12 கொள் கலன்களும் கொழும்புத்துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இந்த வேலைத் திட்டத்திற்கென அந்த நாட்டு அரசாங்கம் 23 மில்லியன் அமெரிக்க டொலர்களை ( நிதி உதவியாக வழங்கி இருக்கின்றது. இயந் திரங்கள் இணைப்பதற்கான நிபுணத்துவ உதவியையும் (நிபுணர்களை) வழங்கிவரு கின்றது.

அண்மைக் காலத்தில் இங்கு ஏற்பட்ட கட் டட நிர்மாணப் பொருள்களின் விலை உயர்வு, நாணய மாற்று வீதத்தில் ஏற்பட்ட தளம்பல்கள் மின்சாரம் வழங்கல் தொடர் பான மேலதிக தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தொழில் நுட்பவியல் அமைச்சர் பிய சேன கமகேயின் நிதியில் இருந்து 6 லட்சத்து 31 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டு கட்டட நிர்மாணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இத் தகவல்களைத் தெரிவித்தார் தொழில் நுட் பக்கல்லூரி நிறைவேற்றுப் பணிப்பாள ரும் அதிபருமான ந.யோகராஜன்.

உதயன் பத்திரிகை சார்பில் அண்மை யில் அவரை அவரது காரியாலத்தில் சந் தித்து உரையாடிய பொழுது அவர் மேலும் தெரிவித்த விவரங்கள் வருமாறு :-

## கொரிய நாட்டு அனுசரணை: கருவிகளும் நிபுணத்துவமும் அங்கிருந்து கிடைக்கும்

**கல்விப் புலத்தில் ஒரு புதுப்பாய்ச்சல்**

இந்தக் கல்லூரியின் தர உயர்வும் புதி தாக அறிமுகப்படுத்தவுள்ள தொழிற்துறை களின் பயிற்சியும், பட்டமும், செய்முறையும் குடாநாட்டின் கல்விப் புலத்தில் குறிப்பாக தொழில் நுட்பவியல் துறையில் ஒரு பாரிய



புதுப்பாய்ச்சலாக இருக்கும் என்று எதிர் பார்க்கலாம்.

புதிதாக அமைக்கப்படவுள்ள இயந்திரங் களை இயக்குவதற்கான பயிற்சியும், விளக் கங்களும் கொரிய தொழிநுட்ப வல்லுநர் களால் எமது விரிவுரையாளர்களுக்கு வழங் கப்பட்டுள்ளன. இங்கிருந்து கல்லூரி அதி பர் தலைமையில் கொரிய நாட்டுக்குச் சென்ற 11 பேர் கொண்ட விரிவுரையாளர்குழு இரண்டு மாத சிறப்பு பயிற்சியை நிறைவு செய்து நாடு திரும்பியுள்ளது.


தரம் உயரும் இந்த நிறுவகத்தில் பின் வரும் புதிய துறைகள் அறிமுகப்படுத்தப் படவுள்ளன.

1) பொறிமுறை இயந்திரவியல் (Mechanical Engineering)
2) தன்னியக்க இயந்திரவியல் (Automobile Engineering)
3) மின்னியக்க இயந்திரவியல் (Electrical Engineering)
4) கணனியியல் (Computer and Computer Automation)

இந்தத் துறைகளில் தொழில் நுட்பவியல் பட்டச் சான்றிதழ் வழங்கும் பயிற்சி நெறிகள் இந்த வருடம் ஆரம்பிக்கப் படவுள்ளன. எமது இந்த நிறுவகம் தொழில்நுட்ப பல் கலைக் கழகமாக உயர்ந்த பின் மிகவிரை வாக மேலும் பல புதிய துறைகள் இணைத் துக் கொள்ளப்படவுள்ளன.

சீனா, ஜேர்மனி ஆகிய நாடுகளின் உதவி யுடன்

1) புடைவைக் கைத் தொழில் நுட்பவியல் (Textical technology)
2) விவசாயத்தொழில் நுட்பவியல் (Agri culture Technology)
3) உணவு பாதுகாப்பு தொழில் நுட்பவி யல் (Food preservation).
4) இலத்திரனியல் தொழில்நுட்பம் (Elec



tronic Technology).

மற்றும் இவை தொடர்பான உற்பத்தி களை மேற்கொள்வதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. பல்கலைக்கழ கத் திறப்புவிழாவின் ஆரம்ப நடவடிக்கை கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**அழிவில் இருந்து எழுச்சி பெறல்**

யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி 1959 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நியூ சிலாந்து அரசின் உதவியுடன் 40 மாணவர் களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. வளர்ச்சி யடைந்து வந்த இந்த நிறுவனம் உள்நாட்டு யுத்தத்தால் பாரிய இழப்புகளைச் சந்தித்தது.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் இங்கு வந்த பொழுது கல்லூரியின் வளங்கள் பேரழிவைச் சந்தித்தன. உபகரணங்கள், கருவிகள், தளபாடங்கள் என்பன முற்றும் முழுதாக அழிந்து போயின.

திணைக்கள உதவியுடன் மீண்டும் ஆரம் பிக்கப்பட்ட பொழுதும் 1995 ஆம் ஆண்டு குடா நாடு சந்தித்த மாபெரும் இடப்பெயர்வின் பின் திரும்பிவந்த பொழுது முற்று முழுதான அழி வையே காணமுடிந்தது. அதை மீண்டும் ஞாபகப் படுத்துவது கடினமான தாகும். 1997 ஆம் ஆண்டு U N D P உதவியுடன் மறுசீரமைக்கப்பட்டது. இடப்பெயர்வு தந்த அழி வால் பின் தங்கியிருந் தோம். யாழ்ப்பாணத்துக் கான ஏ-9 பிரதான வீதி சமாதான ஒப்பந்த காலத்தில் திறக்கப்பட்ட பொழுது அதன் மூலம் எடுத்து வரப்பட்ட உபகரணங்களால் நிவர்த்தி செய்யப் பட்டது.

**இராணுவ அனுமதி கிடைத்துள்ளது**

தற்பொழுது கொரியாவில் இருந்து 12 கொள்கலன்களில் (CONTAINER) கருவி உப கரண மற்றும் இயந்திரத் தொகுதிகள் கொழும் பிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை அடுத்த வாரமளவில் இங்கு வந்து சேர்ந்து விடும். இவற்றை இங்கு எடுத்து வருவதற்கு, பாதுகாப்புத் தரப்பினரின் உத்தரவாதம் பெறப் பட்டுள்ளது.

புதிய கருவிகளை இணைப்பதற்கும் பொருத் துவதற்கும் கொரிய நிபுணர்கள் 20 பேரைக் கொண்ட குழுமம் இங்கு இவற்றை எடுத்து வரவுள்ளது. அவர்களுடன் கொரிய பயிற்சி பெற்ற எமது 10 உத்தியோகத்தர்களும் இணைந்து கொள்வர். இவர்களுடன் கல் லூரி மாணவர்களும் சேர்த்துக் கொள் ளப்படுவர். இணைப்பு தொடர்பான அறி வைப் பெற்றுக்கொள்வதற்கான விருப்புடைய மாணவர்கள் [illegible] இயங்குவர். இந்த அழிவிலிருந்து மீண்டும் எழுச்சி பெறும் நிகழ்ச்சி என்பதில் சந்தேக மில்லை.

இன்று இந்த நிறுவனம் தனது ஐம்ப தாவது ஆண்டு முடிவில் பொன் விழாவை அணுகிக் கொண்டிருக்கும் வேளையில், சர்வதேச தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப தனது வளர்ச்சிப் போக்கை மாற்றி நவீன தொழில்நுட்ப வளர்ச்சியை எதிர்கொள்ளக் கூடியதாக, தென்னாசியாவில் ஒரு தொழில் நுட்ப பல்கலைக்கழக மாக உயர்ந்து நிற்கப் போவது யாழ்மண்ணிற்கு பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும்.

பல்வேறு சவால்களை எதிர் கொண்ட தென் கொரிய நாடு இன்று தொழில்நுட்ப வளர்ச்சி யில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாகும். ஜப்பானின் தொழிநுட்பத் துக்கு அறை கூவல் விடுக் கும் வகையில் தென்கிழக்காசி யாவில் முன்னணியில் திகழ்கிறது. தூரகிழக்காசி யாவில் அசுர வளர்ச் சியைக் கண்டு வரும் சீன தேசத்திலும் மேம்பட்டு நிற்கிறது.

கார் கட்டும் தொழில் வளர்ச்சிகண்டு (HYUNDAI) கியுன்டால், கியா (KIA) ஆகிய மோட்டார் கார் உற்பத்தி செய்யும் நிறுவ னங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கொரிய தொழில் நுட்ப நிறுவனங்களின் மாணவர்கள் "ஒப் படைக்காக" தனி ஒருவர் பயணிக்கும் வித் தியாசமான சிறிய கார்களை உற்பத்தி செய்து வருகின்றனர். (இத்தகைய ஒரு காரை அதிபர் பார்வையிடுவதை படத்தில் காணலாம்)

மேலும் Computer Control System எனும் அமைப்புதொழில் நுட்பக்கல்லூரி ஆசிரியர் களும் மாணவர்களும் ஒன்று சேர்ந்து உரு வாக்கி அறிமுகப்படுத்திய ஒரு பிரதான தொழில் நுட்பமாகும். இத்தகைய பல்வேறு பட்ட தொழிநுட்ப விஞ்ஞான கண்டு பிடிப் புக்களை அந்த நாட்டு மாணவர்கள் தொடர்ச் சியாக தமது விஞ்ஞான தொழில் நுட்ப புலத்தில் சேர்த்து வருகின்றனர்.

**மாணவர் எண்ணிக்கை - பெறுபேற்றில் முன்னணியில் திகழ்கிறது**

இலங்கையில் 37 தொழில் நுட்பக் கல் லூரிகள் உள்ளன. இவற்றுள் மாணவர் எண் ணிக்கையிலும் அவர்களின் அடைவு மட்டத் தேர்ச்சியிலும் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியே முன்னணி யில் உள்ளது. அத்துடன் தொழில் நுட்பப் பல்கலைக் கழகமாக தரம் உயர்த்தப் பட உள்ள ஒரே ஒரு கல்லூரியும் இதுவாகும்.



கருவி, உபகரண வளம், ஆள் அணி என்பவற்றை பொறுத்தளவில் மருதானை, காலி, தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு அடுத்த படியாக இருந்த கல்லூரிக்கு கொரிய நாடு கட்டடம் தளபாடம், கருவி உபகரணம் தொழிநுட்ப அறிவு என்பன போன்ற சகல துறைகளி லும் தனது முழு உதவி யையும் வழங்கியுள்ளது. எனது முயற்சியும் ஆசிரிய குழாத்தினது ஒத்துழைப்பும், மந்திரி யின் (கமகே) ஆதரவுமே இதற்குக் காரணம் எனலாம்.

மருதானை, காலி போன்ற (11) பதினொரு கல்லூரிகள் தரமுயர்த்தப்படவுள்ளன. ஜி.ரி. இசற் மற்றும் நிறுவனங்கள் இதற்கான நிதி, பௌதீக வளம் , கருவி உபகரணம் என் பவற்றை வழங்கிவருகின்றன.

காலிக்குக் கொரிய நாடு உபகரணங்களை மட்டும் வழங்கியுள்ளது. ஜப்பான் நாடு மருதானை தொழில் நுட்பக்கல்லூரியை தொழில்நுட்ப நிறுவனமாக தரமுயர்த்து வதற்கு உபகரண வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

இந்தக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்ட கால் இலக்கு சுயதொழிலை ஆரம்பித்து நடத்து வதற்கு உதவுவதாகவே பெரும்பாலும் இருந் தது. தற்கால இலக்குகள் வித்தியாசமானவை. (யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் 2005, 06,07ஆம் ஆண்டுகளில் 3449 பேர் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர்)

**இலட்சிய நோக்கும் இலக்குகளும்**

நூல் இழையில் பல்கழைக்கழக அனுமதி யைத் தவறவிட்ட யாழ்.மாவட்டத்தின் சகல மாணவர்களுக்கும் உலகின் நவீனதுறை களான தொழில்நுட்பத் துறைகளை அறிமுகப் படுத்தி பயிற்சி கொடுத்தல், பட்டச் சான்றி [illegible] பல்வேறுபட்ட தொழில் வாய்ப்பை ஏற்படுத்தல் அரச, தனியார் துறை களிலும் தொழில்தகுதி பெறுவதுடன் சுய தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்துமளவிற்கு கல்வி தருதல் பிரதான நோக்கமாகும்.

பிரதேசத்தின் மூலவளங்களைக் கண்ட றிதல், கண்டறிந்தவைக்கு ஏற்ப அவற்றை பயன்படுத்த பல்வேறு உலக நாடுகளில் கையாளப்படும் தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல் சமுதாய மட்டத்தில் நில வும் வேலை வாய்ப்பின்மையை நீக்குதல். குறுகிய காலத்தில் யுத்தத்தால் பாதிக்கப் பட்ட கொரிய நாடு குறைந்த வசதிகளைக் கொண்டு நவீன தொழில் வளர்ச்சியை மேம் படுத்தியது போல் அருமையாக உள்ள எமது வளங்களைப் பயன்படுத்தி எம்மிடம் அபரிமி

**வெளிநாடு சென்று திரும்பிய அதிபர் தரும் தகவல்கள்**

தமாக காணப்படும் மனிதவளத்திற்குத் தொழில் நுட்ப அறிவை வழங்கி பொருளாதார விருத் தியை ஏற்படுத்தல்.

★ சந்தித்தவர்-கை.பேரின்பநாயகம் ★

வட புலத்தில் எமது நாட்டின் குடாநாட் டுப்பகுதியிலும் அதை சார்ந்தும், பல மூலப் பொருள்கள் உண்டு. இல்மனைற், சிலிக்கா (நாகர் கோவில்,முல்லைத்தீவு) உப்பு- சுண் ணக்கல், செங்களிமண் (ஓடுதயாரித்தல்) மூலப் பொருள்களைப் பயன்படுத்தி, காங் கேசன் துறை , பரந்தன் தொழிற்சாலைகளை மீண்டும் அமைப்பதுடன், புதிய பொருத்த மான தொழிற்சாலைகளை அமைத்தல்,

சிலிக்காவில் இருந்து கண்ணாடிப் பொருள் கள் போன்றனவும் மற்றும் சுண்ணக்கல்லில் சிமெந்தும், உப்பில் இருந்து அது தொடர் பான இரசாயன தொழில்களும் ஆனையி றவை விருத்தி செய்வதன் மூலம் தென்கிழக் காசியாவுக்கான உப்பைப் பெறலாம்.

அக்கராயன் சீனித்தொழிற்சாலை, ஒட்டு சுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையைப் பெருப்பித்தல். விவசாயத்தோடு தொடர் பான இயந்திரங்களை திருத்தும் ஆலைகளை ஏற்படுத்தல். கடல் தொழிலோடு தொடர்பு டைய வலை,படகு செய்தல், திருத்தல் தொழில் தொடர்பான பாடநெறிகளை அறி முகப்படுத்தலும் பயன்பெறுதலும்.

இங்கு கூலி குறைவாக இருப்பதுடன் துறைமுக வசதிகள் இருப்பதால் மோட்டார் சைக்கிள், ஆட்டோக்கள் போன்றவற்றின் பாகங்களை பொருத்தும் (Assembling) தொழில்களை ஊக்குவித்தல், உடுபுடைவை கைத்தொழில், பால்பண்ணை, கோழி வளர்ப்பு மற்றும் பல தொழில் வாய்ப்புக்களை ஏற்ப டுத்தல் இலக்குகளுள் அடங்கப்பட்டுள்ளன.

இங்கு பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு வெளிநாடுகளில் பிரதானமாக கொரியாவில் வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுத்தலும் நோக்கமாகும்.

இங்கு புதிய தொழில் பயிற்சிகள் ஆரம் பிக்கும் பொழுது கொரிய நாட்டு நிபுணர்களே வளவாளர் அணியினராக தொழில்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவில் நடந்தது

இலங்கையின் ''ஸ்கொட்லந்தர்'' என்று பெயர் பெற்றவர்கள் யாழ்ப்பாணத்து மக்கள். அவர்களுடைய சிக்கனமும் கண் டிப்பு வாழ்க்கையும் அப்படி. ஆனால் சிறைச் சாலையிலிருந்து விடுதலையான கைதி களைப் போன்று யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியிடங்களுக்கு உழைக்கச் செல்லும் வாலிபர்கள் கட்டறுத்த காளை மாடுகளைப் போல் திரிவதில் என்ன மந்திரமும் மாயமும் இருக்கிறது என்பதை நான் அறிய மாட்டேன்.

என்ன இருந்தாலும் என்னுடைய பெற்றோர் களோ புத்திசாலிகள். நான் என்னுடைய படிப்பை முடித்துக்கொண்டதும் எனக்கு ஒரு உத்தியோகம் பெரிது என்று அவர்கள் கருத வில்லை. யாழ்ப்பாணத்தில் பெயருக்குக் கூட மலையோ ஆறோ கிடையாது. இதன் காரணமாகத்தான் அங்குள்ள எல்லோருக் குமே உத்தியோக மோகம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு விதிவிலக்காக எனக்கு என் தந்தை மணம் முடித்து வைத்ததில் அவருடைய சாணக்கியம் கலந்திருக்கின்றது. நான் சொத் துள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பது ஒருபுறம் இருக்கட்டும். நான் உத்தியோகம் பார்க்கப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டு, குடும்பத்தின் கௌரவத்தைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என்பது தான் அவர்களு டைய கவலையாக இருந்தது. எங்கள் கிராமத் தில் படித்து உத்தியோகம் பார்க்கக் கொழும் புக்குச் சென்றவர்கள் ''காதல் கீதல்'' என்று சொல்லிக் கொண்டு ''ஊர் பெயர் தெரியாத பெண்களை''த் தங்கள் மனைவிமார்களாக அழைத்துக் கொண்டு, வந்து விடுகிறார்கள். அவர்களைத் தறுதலை என்று என்னுடைய தந்தை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டி யிருக்கின்றார். எனக்கு ''முடிச்சு''ப் போட்டு வைக்காது உத்தியோகத்திற்கு அனுப்பி வைத்தால் எங்கே நானும் அவர்களுடைய பாதையில் சென்று விடுவேனோ என்ற பயம். என் மீது அவ்வளவு அவநம்பிக்கை என்று சொல்லி விட இயலாது. ஆனாலும் எத்தனையோ மிதித்த இடத்துப் புல்லுச் சாகாத அப்பாவிகளே நிலை தடுமாறியிருக் கும் பொழுது............

பெரியோர்கள் நிச்சயித்த பெண்ணை, சாதகப் பொருத்தம் பார்த்து சுப வேளையில், அம்மி மிதித்து, அருந்ததி காட்டி, தாலிகட்டி, என் மனைவியாக ஏற்றுக்கொண்டேன். கல் யாணமான ஆறு மாத காலத்திலேயே எனக்கு மனைவியின் நட்சத்திரப் பயனாக நிச்சயமாக உத்தியோகம் கிடைக்கும் என்று ஜோதிடர் சொல்லியிருந்தார். எப்படியோ அவருடைய வாக்குப் பலித்தது. எனக்கு நாலாம் மாதமே உத்தியோகம் கிடைத்தது. என்னை மட்டக் களப்புப் பகுதிக்கு விவசாய அதிகாரியாக நியமித்தார்கள்.

நான் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்தேன். வசதியான ஒரு வீட்டை வாடகைக்கு எடுத் துக் கொண்டு குடியும் குடித்தனமுமாக வாழ லாம் என்பது தான் முதலில் ஏற்பாடாக இருந் தது. ஆனால் அதற்கிடையில் என் மனைவி 'தாயாக' அவசரப்பட்டு விட்டாள். தலைச் சன் முன் பின் தெரியாத இடத்தில் எப்படித் தனியாக வாழ்வது? பிரசவம் எல்லாம் முடிந்த பிற்பாடு யோசிக்கலாம். இப்பொழுது மாப் பிள்ளை உத்தியோகத்தில் கவனத்தைச் செலுத்தட்டும் என்று எனக்குப் பெண் தந்த மாமியார் அபிப்பிராயம் தெரிவித்தார். முப்ப தினாயிரம் ரூபா வரதட்சணையாகத் தந்தவள் அல்லவா? எப்படி எதிர்த்துப் பேச முடியும்? அதன் பலன் இப்படி மாறும் என்று எனக்கு ஒருவருமே முன்கூட்டிச் சொல்லவில்லை.

அன்று போசன் விடுமுறை. நமது நாட் டிற்குச் சுதந்திரம் கிடைத்ததில் உள்ள நன்மை தீமைகளை நான் ஆராயப் போவதில்லை. ஆனால் அதன் பிரதிபலனாக ஒவ்வொரு பௌர்ணமியையும் விடுமுறை நாளாக மாற்றியிருக்கிறார்கள். விசாகப் பௌர்ணமி என்றால் அதன் சிறப்பே வேறு. வீதியெல் லாம் பிரமாதமான பந்தல்கள், சோடனைகள் எல்லாம் இடம் பெற்றிருக்கும். இவற்றைப் பார்த்து மகிழ்வதிலேயே பொழுது போய் விடும். காலையில் ''கிரிபத்'' சாப்பாட்டிற்கு என் பௌத்த நண்பர்கள் என்னை அழைத் திருந்தார்கள். ஆனால் காலையில் எழுந் திருந்து பல்லைக் கூடத் தேய்க்காமல் என்ன வெல்லாமோ யோசனைகளில் ஆழ்ந்திருந் திருந்தேன். என் உள்ளத்திலே அமராவதி யின் சிந்தனைகள் அலையுண்டன.

இந்தப் பட்டிக்காட்டில் பெண்களுக்குச் சில சமயங்களில் எவ்வளவு துணிச்சல் வந்து விடுகின்றது. ''துரை'' இந்தப் பௌர்ணமி யில் உங்களை எதிர்பார்ப்பேன். சென்ற பௌர் ணமி உங்களுக்கு ஏமாற்றத்தைத் தந்திருக் கலாம். நான் கோழை. உங்கள் மீது சந்தேகம் கொண்டவளல்ல. உங்களை நான் நம்பாது வேறு யாரை நான் நம்புவேன்? உங்களைக் காணத் தவியாகத் தவிக்கிறேன். இந்தப் பௌர்ணமி வீண் போகாது என்று இலக்கிய மல்லவா எழுதியனுப்பியிருக்கிறாள். ''லிப்ஸ் டிக்'' நாகரிகம் நுழையாத இந்தக் கிராமத்துப் பெண்களின் உள்ளத்திலேதான் உருவம் பெறாத கவிதைகள் எத்தனை கும்மாளம் போடு கின்றன?

மாமாங்கப் போடியார் மிக நல்ல மனிதன். சொன்ன சொல் மீறவே மாட்டார். நேர்மை என்றால் அவ்வளவு நேர்மை. அபூர்வமாகக் குடிப்பழக்கம் உண்டு. உயர் நிலைப் பள்ளி யில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர் களே காதற் கடிதங்கள் எழுதத் தொடங்கி விடும் இந்தக் காலத்தில் அவர் கட்டைப் பிரமச்சாரியாக வாழ்ந்து வந்தது எனக்குப் புதுமையாக இருந்தது. இந்தப் பகுதியில் ''போடியார்'' என்று சொன்னால், 'நான், நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு அதிக வயதைக் கூடக் கவனிக்காமற் பதினாறு வயதுக் கன்னியைக் கொடுக்க முன் வரு வார்களே! இதைப் பற்றி நான் அவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ள ஆசைப்பட்ட துண்டு. ஆனால் ஊர் வம்பு நமக்கு ஏன் என்று பேசாமல் இருந்துவிட்டேன். அவர் தன்னு டைய உயிரையெல்லாம் மருமக்களில் -அக்கா பிள்ளைகளில் - வைத்திருந்தார். அவர் களுடைய அன்பினாலே உலகத் துன்பங் களை எல்லாம் மறந்தார். மூத்த பெண்ணுக்கு கல்யாணமாகிவிட்டது. அந்தக் கிராமத் திலேயே நில புலன்களைப் பார்த்துக் கொண் டிருந்த ஒருவனுக்குக் கட்டிக் கொடுத்திருந் தார். இரண்டாவது பெண்தான் அமராவதி. ஆங்கிலமும் கொஞ்சம் படித்திருக்கிறாள். பட்டினம் சென்று தையற் கலையிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறாள். ஒரு உத்தியோ கத்தனை கல்யாணம் செய்துகொள்ளச் சகல யோக்கியாம்சங்களும் அவள் பெற்றிருக் கிறாள் என்பது அவளது கெட்டியான நம் பிக்கை. இந்த நம்பிக்கையின் பயனாகத்தான் அவர் தன் மருமகளுக்கு ஒரு உத்தியோக மாப் பிள்ளையை வேட்டையாடிக் கொண்டிருந் தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பிரம்மாவின் எழுத்துப்படியோ என்னவோ நான் இந்தப் பகுதிக்கு விவசாய அதிகாரியாக வந்தேன்.



ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறையில் தனிச் சிறப்புடையவர் எஸ்.பொ. என்று அறியப்பட்டுள்ள எஸ்.பொன்னுத்துரை. அவரது சிறுகதைகள், நாவல் கள், குறுநாவல்கள், உருவகக் கதைகள் நாடகங்கள், விமர்சனங்கள் புதுமை யானவை, புரட்சிகரமானவை என்று முத்திரை பதிந்தவை. ஐம்பதுகளின் ஆரம்பத்திலேயே தனது படைப் பாற்றலை வெளிப்படுத்திய மூத்த எழுத்தாளர் இவர்.

ஆனந்தபோதினி, பிரசண்ட விகடன், கலைமகள், கல்கி, ரஸிகன் உட் படப் பல தமிழகத்தின் பிரபல சஞ்சிகைகளிலும், ஈழத்தின் பத்திரிகைகள் (அநேகமாக) எல்லாவற்றிலுமே புனைபெயர்கள் பலவற்றிலும் எழுதிக் குவித்தவர். அவரது எழுத்தின் நடை - அழகு - தனித்துவமானது. அதற்கு நிகராக எதனையும் ஒப்பிடமுடியாது என்றவாறு பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளர் ஏ.ஜே. கனகரத்தினா 1968 ஆம் ஆண்டிலேயே இனங்காட்டியவர்.

எஸ்.பொ.தமது படைப்புகளின் கரு, உத்தி, கற்பனை, நடை ஆகியவற்றின் மூலம் புதிய பரி மாணங்களை அறிமுகப்படுத்தியவர்; அவற்றின் மூலம் பிரபல்யம் பெற்றவர். இவரது ''தேர்'' என்ற சிறுகதை ஈழத்துச் சிறுகதைகளில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

தனது எழுத்து நடையைச் சந்தர்ப்பத்துக்கு, கதைகளுக்கு ஏற்ற முறையில் மாற்றக்கூடிய விசேட திறமையும் இவருக்கு உண்டு. அக் காலத்தில் இளம் எழுத்தாளர்கள் மிகப் பலருக்கு வழிகாட்டியாக விளங்கியவர். இப்போது ஆஸ்திரேலியாவில் வாழும் இவர், தமது நூல்களை மட்டுமன்றி, ஈழத்து எழுத்தாளர்கள் பலரினது சிறுகதைகளையும் தொகுத்து ''பனையும் பனியும்'' என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறார். மூத்த எழுத்தாளர், யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்தவர். வயது76. பட்டதாரி ஆசிரியராக இலங்கையில் பணிபுரிந்தவர்.

விவசாயம் சம்பந்தமாகத்தான் எனக்கும் மாமாங்கப் போடியாருக்கும் இடையில் முத லில் தொடர்பு ஏற்பட்டது. அவர் தன்னுடைய கிழக்கு மேட்டுக் காணிக்குத் தண்ணீர் பாய்ச் சுவது சம்பந்தமாகப் பேட்டி கண்டார். நான் மிடுக்கொன்றும் காட்டாமல் உடனேயே அவரு டைய கோரிக்கையைக் கவனித்தேன். நான் வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும் பும் சமயம் தங்கள் வீட்டிற்கு அவசியம் வந்து போக வேண்டும் என்று வற்புறுத்தினார். நானும் அவருடன் சென்றேன்.

நமது உத்தியோகத்திற்கு அரசாங்கம் மாதா மாதம் சம்பளம் தருகின்றது. இதனை வேளாண் மைக்காரர் அறியாததைப் போல 'கிம்பளம்' தர முன் வந்து விடுவார்கள். இதை இலஞ் சம் என்று நான் வர்ணனை செய்தால் என் வர்க்கத்தினருக்கு மூக்கிற்கு மேலே கோபம் வந்துவிடும். 'அது சந்தோஷம்: நாங்கள் கேட்காமலே அவர்கள் தருகின்றார்கள்' என்று தான் அவர்கள் விளக்கம் தருவார்கள். இந்தக் கிம்பளத்தைப் பணமாகப் பெற்றுக் கொள்வதில் எத்தனையோ அசௌகரியம் இருக்கின்றது. அது நெல்லு, கோழி, சாரா யம், இத்தியாதிப் பொருள்களாக இருக்க வேண்டும் என்று என்னுடைய முன்னோடி கள் இந்த வேளாண்மைக்காரர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மாமூலைத் தருவதற்காகத் தான் மாமாங்கப் போடியார் தன் வீட்டிற்கு அழைத் திருக்கிறார் என்பதை நான் நன்றாக அறிவேன்.

வீட்டை அடைந்ததும்; 'பிள்ளை, அமரி ஐயாவுக்கு வாங்கி வைத்த சாமான்களை எடுத்து வா!' என்று சொன்னார்.

என்ன போடியார்? என்னையும் மற்றவர் களைப் போல என்று தப்புக் கணக்கு போட்டு விட்டீர்கள் போலிருக்கிறது. இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. நான் நேர்மையாக ஊழி யம் செய்ய விரும்புகிறேன். அரசாங்கம் தரும் சம்பளமே எனக்குப் போதும்.

போடியார் வாழ்க்கையில் இது ஒரு புதிய அனுபவமாக இருக்க வேண்டும். அவர் அப் படியே மலைத்துப் போனார். என்ன செய்வ தென்றே புரியவில்லை. நான் கடைசி தங்கள் வீட்டில் விருந்து சாப்பிட்டாவது செல்ல வேண்டும் என்று வற்புறுத்தினார். மறுத்துச் சொல்ல அவர் அனுமதிக்கவேயில்லை. வேண்டா வெறுப்பாக நின்றாலும், அந்த அமராவதியைக் கண்டதும்.........

''சேற்றில் மலரும் செந்தாமரைக்கு'' ஏதேதோ உவமை தேடுகின்றீர்களே! இந்த அமராவதி தான் அந்தச் செந்தாமரை. ஒரே பார்வையில் என் உள்ளத்தை அப்படியே உலுப்பி விட்டாள். எனக்கு நெப்போலிய னுக்கிருந்த நெஞ்சுறுதியுண்டு என்று பெருமைப் பட்டிருக்கிறேன். ஆனால் இந்த மங்குளிப் பெண்ணை நான் 'வாட்டலூ'வில் சந்திக்க நேர்ந்து விட்டதோ என்று நினைக் கலானேன். மோகம் என்பது சபல மனிதரின் உள்ளத்தை உறிஞ்சும் அட்டை. அந்த அட்டை என் உள்ளத்தில் ஊர்வதை உணரலானேன். இல்லாதவனும் உள்ளவனும் சந்தித்த கதை யாகி விட்டது.

அன்றிலிருந்து ஏதாவது சாட்டு வைத் துக் கொண்டு மாமாங்கப் போடியார் வீட்டுக் குச் செல்லத் தலைப்பட்டேன். விழியோடு விழி பேசிற்று. இள நகைகள் கலந்தன. கடிதங்கள் தூது சென்றன. அப்புறம்?

* * *

சென்ற போசன் விடுமுறைக்கு மாமாங் கப் போடியார் வீட்டுக்குச் சென்றிருந்தேன். என் அதிட்டம் என்றே சொல்ல வேண்டும். மாமாங்கப் போடியார் நல்ல குடிவெறியில் படுத்துக்கிடந்தார். ''வாருங்கள் ஐயா!'' என்று வரவேற்றதுடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து படுத்து விட்டார்.

வீட்டிலிருந்த பாட்டி, அந்த ஐயாவும் வந் திருக்கும் பொழுது இவன் இப்படிச் செய் கிறானே! ''பிள்ளை, நீ ஐயாவுக்குச் சாப்பாடு கொடு'' என்றாள்.

அமராவதி எனக்கு உணவு பரிமாறினாள். அவளுடைய அழகையெல்லாம் நான் பரு கிக் கொண்டிருந்தேன். குனிந்து பரிமாறிய போதெல்லாம், அவளுடைய கனமான மூச்சு என் மீது முட்டி மோதியது. இந்திரன் அகலிகை மீதும் விசுவாமித்திரன் மேனகை மீதும் இச்சைப்பட்டதில் என்ன தவறு? கற்பைப் பற்றி வானளாவப் பேசுபவர்கள் எல்லாம் சந்தர்ப் பங்கள் கிடைக்காத கையாலாகாத பேர் வழி கள், தனிமையும் இளமையும் அழகும் சேரு மிடத்தில் நிச்சயம் மன்மதன் தன்னுடைய மலர் கணையுடன் நிற்கின்றான். நான் அந்த மலர்க்கணையால் அவள் பக்கமாக வளைக் கப்பட்டேன். உடம்பில் விஷம் ஏறுவதைப் போன்று அவளைப் பற்றிய ஆசைகள் என் உள்ளத்தில்.......... (10 ஆம் பக்கம் பார்க்க)

# இன் சொல்லோடு வழங்கும் உபசாரம் நிகரற்றது

வாழ்வின் அடிப்படைத் தேவையென யாவரும் அறிந்தவை உணவு, உடை, உறையு ள் என்பன. அந்த மூன்றில் உணவு முதலில் வேண் டப்படுவது. அதனாலேயே தமிழர் பண் பாட்டில் அதற்கு முதலிடம் தந்தார்கள். வீட்டுக்கு வருவோர்க்கு உணவு கொடுத்தல் முதனிலை. அது இல்லாத இடத்து ஆகக் குறைந்தது நீராகார மாகுதல் கொடுக்க வேண்டியது அடுத்த நிலை. உபசாரமாகிய இதுவே, இல்லறத்தானின் முதற் கடமையெனவும் தெளிவுபடுத்தினர்- நடை முறையிலும் கடைப்பிடித்தனர். இது நிகழாது விடில், கவனிப்புக் குறையாகவும் ஏன்? மனநிறை வற்றதாகவுங் கூட நேர்வதைக் காணலாம். உப சாரங்களில் உள்ளக் கலப்புடன் கூடிய இனிய வார்த்தைகள் இல்லாது, தொலைக்காட்சிப் பெட்டி மீதுள்ள காட்சிகளில் ஒன்றியிருந்து வெறுமனே உம்,ஆம் என வரும் அசட்டையான உபசார வார்த்தைகளால் இனிமை குன்றிப் போனால் அது பயனற்ற வெறுஞ் சம்பிர தாயமாகி விடுகின்றது. பயனுள்ள சம்பிரதாயம் பயனற்ற சம்பிரதா யமென அதனை வேற்றுமைப் படுத்திப் பார்க்குமிடத்து, பய னுள் ள சம்பிரதாயங்கள் சடங்குகளா கி வைபவங்களில் செறிந்து கலாசாரங்களாகின்றன.

# இலக்கியப் பொழில்

பயனுள்ள சம்பிரதாயங்களிலே உள்ளன்பு இல்லாமற் போலியாகச் செய்யும் சில சம்பிரதா யங்கள் நன்மை விளைவிப்பதால் அந்தப் போலி கூடப் பயனுள்ளதாகி நன்மை விளைவிப்பது முண்டு. இது சிறுபான்மை. உதாரணமாக, ஒரு வன் நல்லவனாகத் தன்னைக் காட்டுவதற்கு நல்ல வார்த்தைகளையும் சில நல்ல செயல் களையுஞ் செய்வான். அவனது போலியை அறி யாத சமூகம் அவனைப் போற்ற முற்படும் அதற் காகவேனும் அவன் நல்லவனாக வாழ முற்படு வான். இதனால் மனம் நாளடைவிற் பண்படுவ தற்கு வாய்ப்பும் உள்ளது. எனவே, போலியா கக் கூடத் தீயன செய்தல் ஆகாது என்பது இதன் மாறுதலை. தீயனவாகிய சம்பிரதாயங் கள்-பயனற்ற சம்பிரதாயங்கள் போலித்தன் மையை வளர்த்துப் போலியாகி, உறவுகளைத் தருவதற்குப் பதிலாக வெறுப்பைக் கூட வரவ ழைக்கும். எனவே, பயனுள்ள சம்பிரதாயங்க ளையும் நல்லுபசாரங்களையும் யார் செய்ய லாம் - எவர் செய்வது அதிக நன்மை பயக்கும். நலந்தருவதான நல்லுறவுகள் கலக்கும் போது, உளங் கலந்த இன்சொற்கள் பிறக்கும். அந்த இன்சொற்கள் ஒப்புயர்வு இல்லாது, உலகை வசப்படுத்தி ஈர்க்கும். அவ்வுளங்கலந்த இன் சொல் அன்பாகி ஆதரவளிக்கும். அவ்வன்பான இனிய சொல்லுக்கு ஈடிணையேது.

கம்பன் காட்டுஞ் சீதை, தன்கொழுநனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்ற முடியாத அல்லல் தனக்கு வந்துற்றதை, அறிவால் ஓர்ந்து எண்ணியெண்ணி [illegible] தான் சிறை[illegible] தன் துய ரைப் போக்க வழியில்லாது துடிக்கும் அந்த நிலையிலும் இராமனுக்கு உறுதுணையாகத் தன்னால் இருக்க முடியவில்லையே என்றேங்கி, விருந்துவரின் என் செய்வார் என்று ஏங்க வைக் கின்றார் ஏன்? விருந்தே வாழ்வு அந்த நல் உபசாரமே வாழ்க்கை எனக் கம்பன் கருதியதாலேயே சீதை வாயிலாக விருந்தைச் சிறப்பிக்கின்றான்.

'அருந்து மெல்லட காரிட வருந்துமென்
நழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறுமோ வென்று
விம்மும்
மருந்து முண்டுகொல் யான் கொண்ட நோய்க்கென்று
மயங்கும்

இன்னொன்று, இளங்கோ கண்ணகி ஊடாக மனையறத்தைக் காட்டுகின்றான்.

கோவலன் பிரிந்த போதும் தான் தனித்தி ருந்து விருந்தைச் செய்தனராயினும் கண்ணகி யின் கற்புள்ளம் அமைதியடையவில்லை. கோவ லனுடன் மதுரைக்குச் சென்று அக் கோவலனை உண்பித்து இனிதிருக்கையில் தன்னுள்ளக் குறிப் பைக் கண்ணகியார் ஒருவாறு வெளிப்படுத்து கின்றார்.

''அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை...''

என்று கூறுதலால் இஃது அவர் உணர்வாதல் தெரிகின்றது. இது புரையறம் தெளிதல் எனத் தொல்காப்பியம் சுட்டும் கற்புநெறி. விருந்து புறந்தரு தலைப் பெற்றோரும் கண்ணகியாரும் நன்கு கடைப் பிடித்தலால் அவர் காலத்துக் கற்பு நெறி இப்பே ரறத்தைப் போற்றுதல் என்பதும் தெரிகின்றது. [illegible] கற்புடை மகளிரைப் போற்று [illegible]

''விருந்து புக்க பெருந்தோள் கணவரொடு
உடனுறை மரிஇ ஒழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனையுறை மகளிர் ''என்பார்.

வரவெதிர் கொண்டு மலர்ந்த மனத்தினராய் தலைவன் தலைவி ஆகிய இருவரும் சேர்ந் தளிப்பதே உவப்புக்குரியது. குடும்பங்கள் அன் பாற் கலக்கும்போது, இன்சொல் நிகழுமாதலால், உளங் கலந்த உபசாரத்துக்கு ஒப்புயர்வு ஏது?

இன்னும் நோக்கினால், வில்லிபுத்தூரர் விது ரன் வாயிலாக விருந்தைச் சுட்டுகின்றார்.

''என்னில் நின்னிலொரு பேத மில்லை
இதுவனல் நின்னிலது என்னிலும்
மின்னின் முன்னிலகு விறல்நெ டும்படைவி
தூரன் வந்தெதிர் விளம்பினான்
உன்னி லின்னமுன தொன்று பஞ்சவரு
ரைக்க வந்ததொரு தூதன்யான்
நின்னி லின்னடிசி லுண்டு நின்னுடன்வெ
றுக்க வெண்ணுவது நீதியோ!''

ஒருவரோ டொருவர் உண்டு உறவாடினால் அதனால் வந்த சேர்க்கையை வெறுக்க முடியாது. அது சமூக இசைவாக்கத்தை நல்கி சமூக மேம் பாட்டுக்குத் துணை செய்யும்.

''சேர்ந்தா ரொருவரைச் சேர்ந்தொழுகப் பட்டவர்
தீர்ந்தாராய் கொண்டு தெளியினும் -தேர்ந்தவர்க்குச்
செல்லாமை காணாக்கால் செல்லும்வாய்
என்னுண்டாம்
எல்லாம் பொய் அட்டுணே வாய்''

''தம்மை அடைந்தவராகிய ஒருவரை, அவரால டைந்து ஒழுகப்பட்டவர், தொடர்பு இல்லாதவ ராகக் கொண்டு தெளிய அறியினும் ஆராய்ந்து, விட்டு நீங்குதலில்லா வறுமையை நீக்க அறி யானாயின் அவனுக்குச் செல்லும் நெறியா துளது? உணவு அளித்தலை நோக்க, ஏனைய எல்லா அறங்களும் பொய். சமைத்துச் செய்த உணவை இடும் அறமே மெய்''.

எனவே, எல்லாம் பொய்யானாலும் உண்ட வாய் உறவை மேம்படுத்தும் என்பது தெளிவு. அதுவும் இனிய சொல்லாலாகி அமையுமானால் அவ்வுபசாரத்துக்கு ஒப்புயர் வேது! ★

காப்பியதாசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசட்டை ஆகாது; பறவைக் காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு எல்லோரிடமும் தேவை

அயல்நாடுகளில் ஏற்பட்டுள்ள பறவைக் காய்ச்சலின் பரவுகையினாலும் (out breaks) கண்டம் தாண்டும் பறவைகள் இளைப்பாறிச் செல்வதாலும் இலங்கையும் பறவைக் காய்ச்சலுக்கான அபாயத்தை எதிர்நோக்கி உள்ளது. எனவே "வருமுன் காப்போம்" என்ற விழிப்புணர்விற்காக.......

சென்றவாரத் தொடர்ச்சி...

அடிப்படை முதலுதவிக்கான மருத்துவ சாதனங்களைக் கொண்ட ஒரு சிறு பெட்டியை (Travel health Kit) தம்முடன் எடுத்துச்செல்ல



Bird flu kit

வேண்டும். அதில் உடல் வெப்பமானி மற்றும் அற்ககோல் கொண்ட, கைகளை சுத்தமாக்குவதற்கு பயன்படுத்தக்கூடிய பொருள்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்தவும். தற்போது இங்கிலாந்தில் நான்கு மாஸ்க் (mask) கிருமிகளிற்கெதிரான ஜெல (anti septic gel) என்பவற்றைக் கொண்ட பறவைக்காய்ச்சலுக்கான முதலுதவிப்பை (Bird flu kit) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பறவைக் காய்ச்சல் நோய்பற்றிய விடயங்களை அறிந்து கொள்வதோடு, பயணம் செய்யும் ஏனையோரையும் இந்நோய் பற்றி அறியச்செய்யவும்.



பறவைக் காய்ச்சல் நோய காணப்படுகின்ற ஒரு நாட்டில் உள்ளபோது..............

பறவைகள் வளர்க்கப்படும் இடங்கள், பண்ணைகள் மற்றும் விற்கப்படும் சந்தைகள் போன்ற இடங்களுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள். சவர்க்கார நீரினால் அல்லது அற்ககோல் கொண்டு கைகளை சுத்தம் செய்யும பதார்த்தங்களினால் அடிக்கடி உங்கள் கைகளை சுத்தம செய்யுங்கள். வளர்ப்பு பறவைகளிலிருந்து தயாரிக்கப்படும் உணவுகள், முட்டைகள் என்பன நன்றாக சமைக்கப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்தியபின் உண்ணுங்கள். சுவாசத்தொகுதி சம்பந்தமான நோய் அறிகுறிகள் அல்லது வேறு ஏதாவது நோய்கள் ஏற்படும்

சுகநலம்

சந்தர்ப்பத்தில் வைத்திய ஆலோசனையை பெற்றுக்கொள்ளுங்கள்.

பிரயாணத்தின் பின்....................

- உடல் நிலையை 10 நாட்களுக்கு கண் காணித்து கொள்ளவும்
- காய்ச்சல் அல்லது சுவாசநோய் சம்பந்தமான அறிகுறிகள் இந்தப் பத்து நாள்களுக்குள் ஏற்படின் சம்பந்தப்பட்ட சுகாதார சேவை

## வருமுன் காப்பதற்கு மனங்கொள்ளுங்கள்

வழங்குநரின் அல்லது வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவும். அவ்வாறாயின் உங்களுக்கு ஏற்பட்டுள்ள நோய் அறிகுறகளுடன் உங்கள் பிரயாணம் பற்றியும் அவர்களுக்கு தெரிவித்தல் வேண்டும்.

பறவைக் காய்ச்சல் நோயுள்ள ஒருவரை வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது கவனிக்க வேண்டியவை

- வைத்தியசாலைகளில் பறவைக் காய்ச்சல் நோயாளிகள் அனுமதிக்கப்படும் போது அவர்களை ஏனைய நோயாளிகளிலிருந்து

### 05 உலகை வலம் வரும் பறவைக்காய்ச்சல் இங்கும் வருமா?

தனிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

- அங்கு வேலைசெய்யும் சுகாதார உத்தியோகத்தர்கள் பறவைக் காய்ச்சல் நோய்க்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கவனமாக பின்பற்ற வேண்டும்.
- நோயாளி எப்போதும் வாயையும் மூக்கையும் மறைக்கக்கூடியதான Mask அணிந்த வண்ணம் இருக்க வேண்டும்.
- மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான உத்தியோகத்தர்களை நோயாளிகளுக்கான சேவையில் அமர்த்துதல்.
- நோயாளி சுவாசிப்பதில் சிக்கல் ஏற்படின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கும் பொழுதும் ஏனைய நோயாளிகளுடன் தொடர்புறுவதை தவிர்த்துக் கொள்ளவும்.
- நோயாளியை ஓர் வைத்தியசாலையில் இருந்து இன்னொன்றிற்கோ அல்லது ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கோ வாகனங்களில் கொண்டு செல்லும்பொழுது அதில் நோயாளியுடன் செல்பவர்கள் அல்லது உத்தியோகஸ்தர்கள் தகுந்த தற்காப்பு நடவடிக்கைகளைக் கையாள வேண்டும்.
- இந்நோயாளி பற்றி உரிய வைத்திய அதிகாரிகளுக்கு அறிவித்தல் வேண்டும்.

பறவைக் காய்ச்சல் நோயினால் மரணம் ஏற்பட்ட ஒருவரின் உடலை அகற்றும் முறை **(Disposal of dead body)**

- இறந்த உடலில் உள்ள அனைத்து துவாரங்களையும் 5% லைசோலில் (lysol) அமிழ்த்திய பருத்தி பஞ்சினால் அடைத்தல் வேண்டும்.
- 5% லைசோலில் ஊறவைத்த துணியினால் இறந்த உடலானது சுற்றபபடுதல் வேண்டும்.
- இறந்த உடலானது பிரேத அறைக்கு கொண்டு செல்லப்படுமுன் பிளாஸ்ரிக் பையினுள் அடைக்கப்படல் வேண்டும்.
- உடலில் இருந்து திரவக் கழிவுகள் பையிற்கு வெளியில் கசியவிடாமல் பார்த்து கொள்ளுதல் வேண்டும்.
- விரைவாக பிரேத அறைக்கு உடலை அனுப்புதல் வேண்டும்.
- உடலை புதைக்கும் இடத்திற்கு கொண்டு செல்லும்போது பொது சுகாதார உத்தியோகஸ்தர்களின் மேற்பார்வையுடன் கொண்டு செல்ல வேண்டும். பறவைக் காய்ச்சல் சம்பந்தமான எந்தவொரு பதிவுசெய்யப்பட்ட தரவுகளும் இது வரையில் இலங்கையில் இல்லாதபோதிலும் அயல் நாடுகளில் ஏற்பட்டுள்ள பறவைக்காய்ச்சலின் பரவுகையினால் எமது நாடும் எதிர்



காலத்தில் இந்நோயினை எதிர்கொள்ளக்கூடிய பாரிய அபாயத்தினை கொண்டிருப்பதனால் அரசாங்கம் ஏற்கனவே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளபோதிலும் ஒவ்வொருவரும் பறவைக் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வுடன் இருப்பதுடன் உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கைகளை கையாளுவதன் மூலம் எதிர்வரும் காலங்களில இந்நோயினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

எங்கள் நாட்டுக்கு, பிரததேசத்துக்கு இந்தக் காய்ச்சல் வராது என்று எவரும் நினைக்கக்கூடாது. இது விடயத்தில் அசட்டை காட்டக்கூடாது. இக் காய்ச்சல் குறித்து நம் எல்லோரிடமும் விழிப்புணர்வு மிகவும் தேவை.

அந்நோய் வந்த பின்னர், அந்தரப்படாமல் என்ன செய்வது என்று அந்தரிக்காமல், விழிப்பாக இருந்து வருமுன் காப்பதற்கு - எம்மையும எமது மக்களையும் காப்பாற்றுவதற்கு- மனங்கொள்வது காலத்தின் தேவையாகும். [முற்றும்]

ஞானகலா ஞானகுரு
4 ஆம் வருடம்,
சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம்.

# நிலவில் நடந்தது....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தவழ்ந்து வந்த தென்றல் மேசை மீது இருந்த குப்பி லாம்பை அவித்துவிட்டது. சாரளத்தின வழியாக உள்ளே நுழைந்த நிலவொளி அவள் மீது விழுந்தது....... நீல மணி மாடத்து நெடியதொரு சாரளதகை தொட்டுத் தடவி வந்து தோயும் நிலாப்பிழம்பை, எட்டி எடுத்து இடை சுற்றிச் சேலையென, ஒல்கி நடக்கும்.... கனவுப் பெண்ணைப் போலத் தோன்றினாள். என் உடம்பு பூராகவும். இனம் தெரியாத வலிப்பு,

அவள் கையைத் தொட்டு என் பக்கமாக இழுத்தேன். இப்படியான சந்தர்ப்பத்தை எத்தனை காலமாக எதிர்பார்திருந்தேன்! 'அமரி' என்று இதயம் ஒலித்தது.

அவள் உடல் கைகளுக்கிடையில் துவண்டு கிடந்தது. அவள் கனமாக மூச்சு விட்டாள். அவளுடைய குரலில் நடுக்கம் காணப்பட்டது. அவள் மெதுவாகச் சொன்னாள்........

''பாட்டி ஏதாவது நினைத்துக் கொள்வார்கள். முதலில் சாப்பிடுங்கள். நான் இதோ விளக்கேற்றி வைத்து விடுகிறேன். அப்புறம் எல்லோரும் தூங்கியதும் நாம் அந்த மரத்தடியில் சந்திப்போம்.......... விளக்கு ஏற்றப்பட்டது.

''அமரி! என் இதயத்தில் இன்றிரவு விளக்கேற்ற மறக்க மாட்டாயே?'' அவள் முறுவலித்தாள்....... முன்னேற்பாட்டின்படி மரதத டியில் சந்தித்தோம்.

''அமரி''

''நான் எவ்வளவு பாக்கியசாலி? நான் உங்கள் சொத்து. என்னைக் கைவிட்டு விடாதீர்கள்''.

''அசட்டுப் பெண்ணே! முழங்காலளவு நீரிலே நின்று கொண்டும் அது நீர் நிலை என்று நம்ப மறுக்கும் மானைப் போலவல்லவா காட்சி தருகின்றாய். என் இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் நீ வானத்திற்கு ஒரு நிலா என்பது தான் நியதி. அது போல ஆணுக்கு ஒரு பெண் தான் இருக்கிறாள்''.

இப்படி என்னவெல்லாமோ பிதற்றிக் கொண்டிருந்தேன். காதல் சுரம் சில சமயங்களில் சன்னியாக மாறி விடுகின்றது. அதன் வேகத்தில் என்ன பேசுகின்றோம் என்பதை அறியாமல் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருப்போம்.

பௌர்ணமி இரவு, பயிர்களைத் தழுவி வரும் தென்றல். தனிமையில் ஆணும் பெண்ணும்! ஒழுக்கமாவது நெறியாவது!

''அமரி'' என்றழைத்து அணைத்துக் கொண்டேன், ''வேண்டாம், நமது தூய அன்பைக் களங்கப்படுத்த வேண்டாம். இந்த இரவெல்லாம் உங்களுடன் பேசிக் கொண்டிருப்பதே சகல இன்பமுமாக இருக்கிறது. வீண் வேட்கைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம்''.

''என் மீது உனக்கு நம்பிக்கையில்லையா?''

அவள் மௌனமாக தலையைக் கவிழ்ந்து நின்றாள். நான் அவளுடைய தலையை நிமிர்த்தி நிலாவெளியில் பார்த்தேன். அவளுடைய கண்களில் நீர் தேங்கியிருந்தது. அந்தக் கண்ணீர்த் துளிகள், காதல் வேகத்தில் உந்தப்பட்டு, தங்கள் வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்ட ஆயிரம் பெண்களின் சோகக் கதையை ஒரே கணத்தில் சொல்லி முடித்தன.

மனச்சாட்சி என்னை உறுத்தியது. பல நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பால் என் காதலைத் தன் இதயத்தில் புதைத்து வைத்திருக்கும் என் மனைவி இதயத்தில் இரகசியம் பேசினாள்.

''போய்ப் படுத்துக் கொள் அமரி.''

அதற்கு மேல் எனக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. நான் படுக்கைக்குச் சென்றேன். படுக்கையா அது? அக்கினி மீது உறங்குபவனைப் போன்ற தவிப்பு.

* * *

அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் அவளை மறந்து விடுவதாகத் தான் இருந்தேன். ஆனால் பெண்கள் சாமர்த்தியசாலிகள். நமது இதயக் கதவைப் பூட்டி வைத்திருப்போம். மனைவியைத் தவிர வேறு யாரும் அதில் வாசம் செய்யக் கூடாது என்பதற்காக. ஆனால் அவர்கள் கள்ளச் சாவியால் அதை எப்படியும் திறந்து, திருட்டுத்தனமாக வாசம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். அந்தக் கள்ளச் சாவி தான் அவள் அனுப்பி வைததுள்ள கடிதம்.

''உங்களைக் காணாது தவியாய்த் தவிக்கின்றேன். இந்தப் பௌர்ணமி வீண் போகாது.''

காமம் என்பது வெளவாலைப் போன்றது. பகல் நேரத்தில் இதயக் குகையில் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. இரவில் சந்தர்ப்பம் என்ற இரை தேடி அலைகின்றது.

இப்போது தான் மாமாங்கப் போடியாரும் வந்து சென்றிருக்கிறார். நிச்சயம் போகத்தான் வேண்டும்...... நெறியாவது, கற்பாவது, மண்ணாவது? மனித குலத்தைப் படைதத கடவுள் ஏன் ஆண், பெண் என்ற இருபாலாரைப் படைத்தான்? அப்படித் தான் ஆணையும் பெண்ணையும் படைத்த ஈஸ்வரன் ஏன் காமத்தைப் படைத்தான்....?

* * *

''ஐயா என்று அழைத்த என் வாயால் மகனே என்று அழைததுச் சொல்கிறேன். இவ்வளவு பெரிய இடத்துச சம்பந்தம் என் அமரிக்கு வருமென்று கனவிலும் நான் நினைக்கவில்லை. அவள் கார்த்திகை நட்சத்திரக்காரி. மாப்பிள்ளை வீடு தேடி வருவான் என்று தான் சாதகம் சொல்லும். ஆனால்.......

அமரியும் உங்க கண்களுக்குச் சாதாரணமான பெண்ணாகத் தான் தோன்றும். ஆனால் அவள் என் உயிர். என் இன்பங்கள் எல்லாம் சுடலைக்கு அனுப்பித்தான் என் அக்கை குழந்தைகளை வளர்த்தேன். நாங்கள் சொத்துள்ள குடும்பத்தில் பிறந்தவங்க. அப்பா இறந்து போகவே என் அக்கையைக் கட்டிய மச்சான் குடும்பத் தலைவனானான். நானும் அப்பொழுது சிறிசு. அது தான் அவன் முழுவதையும் பார்த்து வந்தான். அவன் புறத்தியானுமல்ல. ஒன்றுக்குள் ஒன்று. அவன் எங்க வழிகாட்டியாக, எங்க குடும்பததை இன்னும் மேல் நிலைக்குக் கொண்டு வருவான் என்று பரிபூரணமாக நம்பியிருந்தோம். ஆனால் நம்பி மோசம் போனோம். என் அப்பன் விட்டுச் சென்ற சொத்து அவ்வளவற்றையும் குடியிலேயே செலவு செய்தான். என் அக்கையைக் கொடுமைப்படுத்தினான். எனக்கு மூத்தவனாக இருந்த படியால் ஒன்றும் தட்டிக் கேட்க முடியவில்லை. இதையெல்லாம் பார்த்து அழுது அழுது உக்கினாள் என் அக்கை. கடைசியில் வாழ்ந்து கெட்டது போதும் என்று நினைத்தோ என்னவோ இந்தக் குழந்தையை - அமரியைப் பெற்றதும் தன் கடனை எல்லாம் தீர்த்துக் கொண்டு போகின்றோம் என்ற நிம்மதியுடன் செத்துப் போனாள். மரணப் படுக்கையில் அமரியையும் அவளுடைய அக்கையையும் தந்து ஒப்பு வாங்கினாள். அவள் அப்ப சொன்ன வார்த்தைகளை இண்டைக்கும் மறக்க மாட்டேன். தம்பி! நீதான் இதுகளுக்குத் துணை. நீதான் இதுகளுக்கு தாயும் தந்தையும். அவாகளை அப்பனிடம் மட்டும் கொடுத்து விடாதே. இதுகளை உன்னால் பார்க்க முடியாது என்றால் இதுகளின் கழுத்தை நெரித்துக் கொன்று விடு. இதுகளின் அப்பனின் முகத்தில் மட்டும் காட்டி விடாதே. அந்தப் பாவியின் கண்கள் பட்டாலும் இதுகளுக்கு நரகம் தான் கிடைக்கும். உன்னை நம்பித்தான் நான் சாகிறேன். இதுகளை மாமிக் கொடுமைக்கும் ஆழாக்கிவிடாதே. இந்த வரத்தை நீ கட்டாயம் அருளவேண்டும். இரண்டு உசிர்களின் வாழ்வும் தாழ்வும் உன்னுடையதே. இதுகளைத் தான் என் அக்கை சொல்லிச் செத்துசசு. ஆறு மாத காலத்திலேயே அந்தப் பாவி இன்னொரு பெண்டாட்டியுடன் எங்கேயோ போய்த தொலைந்தான். விட்டது சனி என்று சுமக்க முடியாதசுமையுடன்வாழ்க்கையைத் தொடங்கினேன்.

அவன் விட்டுச் சென்ற முதிசம் ஆக இரண்டு ஏக்கர் நிலந்தான். இருபத்திரண்டாவது வயதில் அந்த இரண்டுஏக்கரில்உழைத்து நான்கு சீவன்களுக்கு சோறு போட்டு மிச்சமும் பிடிக்கவேண்டியிருந்தது. மிகவும் பாடு பட்டு உழைத்தேன். விவாகமே வேண்டாம் என்று பீசும விரதம் பிடித்தேன். பட்டதற்குப் பலன் கிடைத்தது. நான் இன்று போடியாராக இருக்கிறேன். என் மூத்த மருமகளுக்கு கலியாணமும் செய்து, மனது குளிரச் சீரும் செய்தேன். இப்பொழுது இருப்பது அமரி ஒருத்தி தான். அவளையும் உங்க கைகளில் ஒப்படைச்சுவிட்டேன், எண்டால் என் கடமை முடிஞ்சிடும். நிம்மதியாகச்சாவேன்''

மாமாங்கப் போடியாரின் கண்களில் நீர் மல்கியிருப்பதை நான் அவதானித்தேன். என் பதிலுக்காகக் காத்திருப்பவராகக் காணப்பட்டார். இங்கே ஒரு மனித தெய்வம் வாழ்நாள் பூராகவும் தியாகம் செய்து அபூர்வமாக வளர்ந்த இன் மலர். அதை ஒரே நிமிசத்தில் கசக்கியெறியத் துடிக்கும் அரக்கனான நான் பக்கத்தில் நின்றேன். எனக்கு மட்டும் ஒரு மனைவி இல்லாமல் இருந்திருந்தால்...... அத்தைக்கு மீசை முளைததால் சித்தப்பா என்ற ஆராய்ச்சியிலல்லவா ஈடுபட்டிருக்கின்றேன்?

நான் விளையாட்டு என்று நினைத்திருந்தேன். எங்களில் எத்தனையோ பேர் காதலை கடற்கரை மண் விளையாட்டு என்று நினைக்கின்றோம். உண்மையில் காதல் என்பது மனிதன் அமரனாவதற்குச் சிலை யெடுப்பதுதான். காதல் மனித வாழ்க்கையில் ஒரேயொரு முறை ஏற்படும் எழுச்சி, தத்துவ விசாரம் என்னை நெரிசலாக மொய்த்துக் கொண்டது. சன்னல் வெளியே என் பார்வையைச் செலுத்தினேன். அங்கு அமராவதி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கண்களை நேருக்கு நேராகச் சந்திக்கும் துணிவு எனக்கு ஏற்படவில்லை. அவள் உள்ளத்தில் வாஞ்சை என்ற பால், என் உள்ளத்தில் வஞ்சகம் என்ற விஷம், இரண்டும் கலந்தால்? பால் விஷமாக மாறிவிடும். அவள் விலை போகாத பண்டமாகி விடுவாள்.

''எல்லாம் ஆண்டவன் இஷ்டப்படியே நடக்கும். அமரியின் நல்ல குணத்திற்கு அவள் எண்ணம் ஈடேறும்'' நான் ஏதோ சொல்லி வைத்தேன்.

அவளை உத்தியோகக்காரரின் மனைவியாகத் தகுந்தவளாக வளர்த்து வந்தேன். மேலும் ஏதோ சொல்வதாக இருந்தார். ஆனால் அதற்கிடையில் அமராவதி குறுக்கிட்டாள்.

''கண்ணகி அம்மன் கோயிலில் பூசை மணி கூட கேட்டுவிட்டது மாமா! உங்களுக்கு நேரமாகவில்லையா''

அவர் வெளியேறிய பின்னர் அவள் என்னல்லாமோ பேசினாள். என் உள்ளம் ஒன்றிலுமே பதியவில்லை. சாப்பாடு ஆயிற்று. படுக்கையில் புரண்டேன். நித்திரை கொள்பவனைப் போல பாவனை செய்தேன்.

சிறிது நேரத்தில் எல்லோருமே தூங்கி விட்டார்கள். மாமாங்கப் போடியாரின் குறட்டைச் சத்தம் நன்றாகக் கேட்டது. அமராவதி மாமரத்தடிக்குச் செல்வது நிலவொளியில் நன்றாகத் தெரிந்தது. இந்தப் பௌர்ணமி வீண் போகாது!

அவள் உள்ளத்தில் எவ்வளவு ஆசை? எவ்வளவு நம்பிக்கை?

''நான் தாலி கட்டிய மனைவி ஊரில் இருக்கின்றாள்.நான் கூடிய சீக்கிரமே தந்தையாகப் போகின்றேன்'' இந்த உண்மையை அவளிடம் சொல்லி விடலாமா? என் மனச்சாட்சி தன் இரும்புக் கரங்களினால் என்னுடைய தொண்டையைப் பலமாக அமுக்குவதைப் போன்று அவஸ்தை.

நான் எழுந்து அவளிடம் சென்றேன்.

''அமரி!''

''இந்தப் பௌர்ணமியை நான் ஒரு மாத காலமாக எதிர்பார்த்திருந்தேன். அன்று என் மீது கோபமா? பெண்களுக்கு கற்புததானே அணிகலம்? அதனால் தான் நான் உங்கள் உள்ளம் நோகும்படி நடந்திருக்கலாம். நீங்களில்லாத நானா? உங்களை நமபுகின்றேன்''!

என்னை அணைத்துக் கொண்டாள். அவளுடைய உடலின் வெப்பத்தை அனுபவித்தேன்.

இந்தப் பௌர்ணமி வீண் போகாதா?

அவள் வெட்கத்துடன் முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

''என்னை மன்னித்து விடு அமரி. நீ நிரம்பவும் நல்லவள். ஆகவே இந்தப் பௌர்ணமியும் வீண் போகட்டும். உனக்கு விவாகம் நடந்தேறும் மட்டும் எல்லாம் அமாவாசை இரவுகளாகவே இருக்கட்டும்.''

நான் வெறி பிடித்தவனைப் போல அவ்விடத்தை விட்டு வெளியேறினேன். அவள் சிறிது தூரம் பின் தொடர்ந்தாள்.அப்புறம் அவளுடைய விம்மல் சத்தமே என்னைப் பின் தொடர்ந்தது.

* * *

கண்ணகி அம்மன் கோயில் குளுத்தி நடைபெறுகின்றது: அமராவதி என்ன செய்வாள்? என்னைப் போன்ற புல்லுருவிகள் நாட்டில் நல்ல மனிதர்களென்று நடமாடும் வரை, நாட்டிலே இன்னொரு கண்ணகி தோன்றவே மாட்டாள்.

இந்த விசாகப் பௌர்ணமி தினத்திலே தான் சித்தார்த்தர் புத்தராக வேண்டும் என்ற வெறியுடன், தன் அழகு மனைவி யசோதரையையும் அன்புக் குழந்தை ராகுலனையும் விட்டுப் பிரிந்து, சந்நியாசம் வாங்கிக் கானகம் ஓடினார்."கட்டைப் பிரமச்சாரி" என்ற வேசம் புனைந்த நான் என் வேடத்தைக் கலைத்தெறிந்து விட்டேன். யாழ்ப்பாணத் திலே உள்ள என் மனைவியும் அவள் வயிற் றிலே வளரும் என் குழந்தையும் என்னை அழைத்தார்கள். நான் என் உள்ளத்திலே புத்தரானேன்.

(1957.நன்றி - ஈழகேசரிச் சிறுகதைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட யானையின் நிலையில் தமிழர் இனம்!

யாராவது ஒருவர் தனக்குத்தானே அழிவைத் தேடிக்கொண்டால், யானை தனது தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல் என்று சொல்வார்கள். இலங்கைத் தமிழர்களின் நிலையும் இதுதான். இன்று இலங்கைத் தமிழர்கள் அடிமைகளாக, நாடோடிகளாக, குந்தியிருப்பதற்கோ, உறங்குவதற்கோ கூட இயலாத நிலையில் அலைந்து திரிகிறார்கள் என்றால் அதற்கு நாமே காரணம், வேறு யாரையும்குறைசொல்லிப்பிரயோசனமில்லை.

எம்மூதாதையர்களும்தமிழர்களின்தலைவர்கள் என்றுகூறிக் கொண்டவர்களும் இழைத்த தவறுகளின் பலனை இன்று

## சிங்கள இனத்தைக் காப்பாற்றிய தமிழ்த் தலைமையின் பரம்பரை இன்று அழிவின் விளிம்பில்

நாம் அனுபவிக்கின்றோம் என்பதே ஆழமான உண்மை. தங்களைப் புத்திசாலிகள் எனவும் சிங்களவர்களை மோட்டுச் சிங்களவர்கள் எனவும், வர்ணித்த கல்விமான்களும், சட்டத்தரணிகளும் விட்ட தவறுகளின் பலனே இன்று எமக்கு இந்த நிலை.

எம்மிடையே காணப்படும் ஒற்றுமையின்மையும் நானா, நீயா என்ற அதிகாரப் போட்டியுமே எமது அழிவுக்குக் காரணம். சேர, சோழ, பாண்டியர் மூவரும் தங்களுக்கிடையில் போர் புரிந்து மாண்டார்களேயொழிய அண்டை நாட்டைக் கைப்பற்றும் எண்ணம் யாருக்கும் வரவில்லை. மூவேந்தர்களும் ஒற்றுமையாக இருந்திருந்தால் பிரித்தானியர்கள் உலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்ததுபோல் தமிழ் இராச்சியமும் ஜாவா, சுமாத்திரா தீவுகளுக்கு அப்பாலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கும். நீயா, நானா என்ற போட்டியே பிரதேசவாதத்திற்கு அடிப்படைக் காரணம். இந்த நீயா, நானா என்ற போட்டி அடிமட்டத்திலிருந்து அதியுயர் மட்டம் வரை சகலரிடமும் காணப்படுகிறது.

சிங்களவர்களைக் காப்பாற்றும் படி அவர்களுக்காக யாழ்ப்பாணத்தவர்கள் - தமிழர்கள் - குரல் கொடுத்த காலம் போய் மகிந்த ராஜபக்ஷவிடம் முதலமைச் சர் பதவிக்குச் சண்டை பிடிக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதற்கு யார் காரணம்? நாமே தான் காரணம்!

**பிரிட்டிஷ் ஆட்சியில் நடந்த சம்பவம்**

1915 ஆம் ஆண்டு சிங்கள, முஸ்லிம் கலவரம் இடம்பெற்றபோது, அவ்வேளை இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் சிறுபான்மையினரைப் பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் முஸ்லிம்களிற்குச் சார்பாகவே நடந்து கொண்டனர். இதனால் முஸ்லிம்களின் கை ஓங்கியது. சிங்கள மக்கள் எம்மைக் காப்பாற்ற யாருமே இல்லயைா என எண்ணினர்.

செய்வதறியாது விழித்த சிங்களத் தலைவர்கள் சேர். பொன். இராமநாதனிடம் சென்று மண்டியிட்டனர். இராமநாதன் துரை நீங்கள் எப்படியாவது சிங்கள மக்களைக் காப்பாற்ற வேண்டும் என சிங்களத் தலைவர்கள் இராமநாதனிடம் கேட்டுக் கொண்டனர். இலங்கையில் சிங்கள இனமே அழிந்து விடும் போலிருக்கிறது; நீங்கள்தான் எப்படியாவது சிங்களவர்களைக் காப்பாற்ற வேண்டும் என அப்போது இருந்த சிங்களத் தலைவர்கள் இராமநாதனிடம் மன்றாடினர்.

படித்தவரான சேர்.பொன். இராமநாதன் 1917இல் கப்பலேறிலண்டனுக்குச் சென்றார். (அப்போது விமானப் பயணம் கிடையாது; இல்லாவிட்டால் விமானத்தில் சென்றிருப்பார்கள்.) லண்டனில் வைத்து பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் சிங்கள மக்களைக் காப்பாற்றும் படி வாதாடினார் இராமநாதன். பிரித்தானிய அரசாங்கம் இராமநாதனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. இலங்கையில் கண்ட இடத்தில் சுடும் மார்ஷல் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சிங்கள மக்கள் காப்பாற்றப்பட்டனர், நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

**குதிரைகளை அவிழ்த்துவிட்டு வடம் பிடித்து இழுத்தனர்**

நாடு திரும்பிய இராமநாதனை வரவேற்பதற்காகக் கொழும்புத் துறைமுகத்தில் சிங்களத் தலைவர்கள் காத்திருந்தனர். இராமநாதனை அழைத்துச் செல்வதற்காக குதிரைகள் பூட்டப்பட்ட இரதமும் தயாராக இருந்தது. இராமநாதன் வந்து இறங்கியதும்தேரில்பூட்டப்பட்டிருந்தகுதிரைகளை அவிழ்த்து விட்டு, சிங்கள மக்களுக்காக குரல் கொடுத்த இராமநாதனை நாமே வடம் பிடித்து இழுத்துச் செல்வது தான் அவருக்கு நாம் செய்யும் கைமாறு எனக் கூறி தாமே வடம் பிடித்து பொரளையிலிருந்து இராமநாதனின் இல்லம் வரை இழுத்துச் சென்றனர்.

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தென்னிலங்கையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இச்சம்பவத்தை நினைவு கூர்ந்துள்ளார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க இராமநாதனை சிங்களத் தலைவர்கள் பல்லக்கில் சுமந்து சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். இங்கே பல்லக்கிலா, தேரிலா அழைத்துச் சென்றார்கள் என்பதல்ல பிரச்சினை, இராமநாதன் லண்டனுக்குச் சென்று சிங்கள மக்களுக்காக வாதாடினார் என்பதே நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய விடயம்.

இராமநாதன் சிங்களவர்களைத் தட்டியெழுப்பிய இன்னொரு சம்பவத்தையும் இங்கு குறிப்பிடலாம். கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் ஒருமுறை பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய இராமநாதன், சிங்களவர்கள் ஆங்கில மோகத்தில் மூழ்கியிருப்பதைக் கண்டு "சிங்களவர்கள் சிங்கள மொழியைப் பேசாவிட்டால் வேறு யார்தான் சிங்கள மொழியைப் பேசுவார்கள் எனக்கூறினாராம். என்னே! இன்றுதமிழர்கள் கட்டாயம் சிங்களம் பயில வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

1926 ஆம் ஆண்டு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கல்வியை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய எஸ். டபிள்யூ. ஆர். டி.பண்டார நாயக்கா இலங்கை ஐரோப்பியர் வருவதற்கு முன்பு இருந்தது போல மூன்று மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு சமஷ்டி ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று கூறியபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் தமிழர்களே. (ஆதாரம் தந்தை செல்வா நினைவுப் பேருரை - 2008. முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் வி.விக்கினேஸ்வரன் )

இதன் பின்னர் ஜி. ஜி. பொன்னம்பலம் 50 / 50 என்ற இலங்கை நாடாளுமன்றத்தில் சிறுபான்மையினருக்கு அரைவாசி ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்த போது டி. எஸ் சேனநாயக்கா 60 / 40 ஆசனங்கள் பற்றி பரிசீலிக்கத் தயாராக இருந்தாராம். ஆனால் ஜி.ஜி அதற்குச் சம்மதிக்கவில்லையாம்.

## தொலைநோக்கு இல்லாதவர்களால் ஏற்பட்ட விளைவுகள்

பாகிஸ்தான் பிரிக்கப்பட்ட போது ஜின்னாவிடம் நேரு சொன்னாராம். நான் இருக்கிறேன், காந்தி இருக்கிறார் முஸ்லிம்களுக்கு எந்தவித பிரச்சினையும் வராது என்றாராம். அதற்கு ஜின்னா "இப்பொழுது நீங்கள் இருக்கிறீர்கள். இனி வரப்போகும் தலைவர்களும் எங்களைப் போல் நேர்மையாகச் செயற்படுவார்கள் என்பதற்குத் என்ன உத்தரவாதம்" என்றாராம்!

ஜின்னாவிடம் இருந்த தூர நோக்குச் சிந்தனை ஆசியாவிலேயே புகழ் பூத்த கல்விமான்களிடம் இல்லாமல் போனது கவலைக்குரிய விடயம். இன்று சமஷ்டி என்ற சொல்லே சாதாரண பாமர சிங்களவருக்கும் வேப்பங் காயாகக் கசக்கிறது. செல்வநாயகம் பட்டுத் தெளிந்த பின் கூறியது போல் இலங்கைத் தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று விதி வழியே நடப்பதைத் தவிர வேறென்ன செய்ய என்றல்லவா, இப்போது தமிழர்களின் நாளாந்த வாழ்க்கையே நகருகிறது!!!

- அம்பலவன்.

## அன்னைக்கொரு புகழ்மாலை!

இன்று அன்னையர் தினம்



அம்மா என்ற உறவை நாம்
வாய் நிறைய வாழ்த்திடவே
ஆண்டு தோறும் வைத்திட்டார்
அன்னையர் தினம் எனும் நன்நாளை!

உள்ளம் அதில் அன்பை ஊற்றி
உதிரத்தைப் பாலாக்கி, உருவம் தந்த
தாயவள் பெருமைதனை இந் நாளில்
போற்றி, நன்றிகள் கூறிடுவோம்!

உலகத்து தெய்வங்களை அறியுமுன்னே
கண்முன்னே தோன்றிய முதல் தெய்வம்
தாய் என்று அன்புடன் வாழ்த்தி
என்றும் உள்ளமதில் அன்னைக்கு
புகழ்மாலை சூட்டிடுவோம்!

- நளாயினி சற்குணசிங்கம்.
(சுன்னாகம்).

## அம்மா! உன்னை வணங்கவேண்டும்!

அன்னை, என்னைச்
சுமந்தாய்!
என்னைப் பெற்ற போது
நீயும் மலர்ந்தாய்

தொட்டில் கொடியில் முடிந்து
தூளி போட்டுப் படித்தாய்!
தொப்புள் கொடியில் மலர்ந்த
பூவாய் என்னை வளர்த்தாய்!

வெள்ளை உள்ளம் உருக்கி
பாலாய் பருகக் கொடுத்தாய்!
தியாகம் என்னும் தீயில்
தினமும் உன்னை எரித்தாய்!

உந்தன் மடியில் எனக்கு
துன்பம் என்றும் இல்லை!
உன்னை மறந்து போனால்
இன்பம் எதிலும் இல்லை!

கல்லை வணங்கும் கைகள் - உன்
காலை வணங்க வேண்டும!
கடவுள் போன்ற உனக்கு
கோவில் கட்ட வேண்டும்!

எஸ்.அனோஜ். (வண்ணார் பண்ணை).

## நூல் வெளியீட்டு விழா




எழுத்தாளர் இ.சிறீஸ்கந்தராசாவின் "நகைச்சுவைத் தோரணம்" நூல் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றபோது சட்டத்தரணி ஆ.[illegible] எழுத்தாளருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன் சிறப்புப் பிரதியையும் பெற்றுக் கொண்டார். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.அரசரத்தினம் அருகில் காணப்படுகிறார். (சி/552778)

## இறைவனோடு இணைய தூய ஆவியின் துணை வேண்டும்

இறை வார்த்தை வாயிலாக நாம் பல முறை கேட்டுள்ள உண்மை தான் கடவுள் அன்பாய் இருக்கிறார் என்பது. இறைவனே இதை வெளிப்படுத்தியுள்ளார். இறை வாக்கினர் எரேமியா வழியாக இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். "என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன். அதை அவர்களது இதயத்தில் எழுதிவைப்பேன். நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன். அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள் என்கிறார் ஆண்டவர்." (எரே 31 : 33) நம்மை அன்பு செய்யும் ஆண்டவர் தமது அன்பு எனும் நியமத்தை நம் இதயத்தில் எழுதி வைத்துள்ளார்.

நம்மீது அளவற்ற அன்பு கொண்டுள்ள இறைவன் நமக்களித்துள்ள கட்டளைகள் வாயிலாகத் தம் அன்பை வெளிப்படுத்தியுள்ளார். எதையெல்லாம் செய்ய அனுமதியுண்டு, எதைச்செய்ய அனுமதியில்லை என்று மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுலகில் இரு விதமான மகிழ்ச்சிகள் உள்ளன. தூய ஆவியால் மகிழ்ச்சி, தூய ஆவி இல்லாத மகிழ்ச்சி. அதாவது ஆண்டவர் அளிக்கும் மகிழ்ச்சி, ஆண்டவரிடமிருந்து வராத மகிழ்ச்சி. ஆண்டவரிடமிருந்து வராத மகிழ்ச்சியின் மீது நாட்டம் கொள்வது தான் பாவம். விலக்கப்பட்ட கனியை உண்ணக்கூடாது என்று




இன்று தூய ஆவியின் பெருவிழா

ஆண்டவர் கூறியிருந்தபோதும் அதை உண்டது தான் முதல் பெற்றோர் செய்த பாவம். அது ஆண்டவரிடமிருந்து வராத மகிழ்ச்சியை நாடிய தாகும். அவ்வாறான மகிழ்ச்சியை நாம் நாடக் காரணம் அது தற்கால சுகம் அளிப்பதால் தான்.

இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தது பாவம் செய்த நம்மைத் தண்டிப்பதற்காக அல்ல. மாறாக பாவத்திலிருந்து நம்மை மீட்பதற்காகவே. கடவுள் நம்மை தண்டிப்பதுமில்லை சோதிப்பதுமில்லை. "சோதனை வரும் போது 'இச் சோதனை கடவுளிடமிருந்து வருகிறது' என்று யாரும் சொல்லக்கூடாது. ஏனெனில் கடவுள் தீமையின் தூண்டுதலுக்கு உள்ளாவதில்லை. அவரும் எவரையும் சோதிப்பதில்லை. ஒவ்வொருவரும் தம் சொந்தத் தீய நாட்டத்தினாலே சோதிக்கப்படுகின்றனர்" (யாக் 1:13-14). நமது பாவங்கள்தான் நமது அழிவுக்குக் காரணம். நமது தீய நாட்டங்கள் தான் நமது ஏமாற்றத்துக்கான காரணம். இறைவன் தமது உருவிலும் சாயலிலும் மனிதனைப் படைத்தார். தமது ஆவியை அளித்து அவனுக்கு உயிர் கொடுத்தார். அவனோடு வாழ விரும்பினார். இறைவன் வாசம் புரிந்த போதே மனிதனை இறைவனிடமிருந்து பிரித்த தீய சக்தி தான் அலகை விலக்கிய கனியை உண்ணுமாறு அலகை தூண்டியது. மனிதனும் பாவம் செய்து இறைவனின் சாயலை இழந்தான்.

இன்று நாம் அனுபவித்திருக்கும் துன்பங்கள் இறைவனிடமிருந்து வந்தவையல்ல. நமது பாவம் தான் அதன் காரணம். பாவம் செய்பவன் பாவத்திற்கு அடிமையாகின்றான். அலகை தான் எல்லாத் துன்பங்களுக்கும் ஏமாற்றத்திற்கும் காரணம். அலகையின் செயல்களை அழிப்பதற்காகத்தான் இறைமகன் இவ்வுலகிற்கு வந்தார் என்று திருவிவிலியம் கற்பிக்கின்றது. "கடவுளிடமிருந்து பிறந்தவர் எவரும் பாவம் செய்வதில்லை. ஏனெனில் கடவுளின் இயல்பு அவரிடம் இருக்கிறது" (1யோவா3:9). எனவே நாம் பாவம் செய்யும் போது அலகையின் செயலைத்தான் நாம் செய்கின்றோம்.எனவே நாம் இறைவனோடு இணைந்த நிலையில்தான் இருக்க வேண்டும். பாவத்தையும் அலகையும் விட்டு விலக வேண்டும். தூய ஆவியரால் இயக்கப்பட வேண்டும். அதற்கான அருளை ஆண்டவன் நமக்கு அளிக்க வேண்டுமென்று மன்றாடுவோம்.

- க. அருள்நேசன், குருநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சங்கரப்பிள்ளை
கதிர்த்தம்பி

மலர்வு:
1927.05.26

உதிர்வு:
2007.04.23

திதி: 11.05.2008

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
என வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
அன்னை வடிவமே! பண்பின் சிகரமே!
சிந்தனைக்கும், செயலுக்கும் பார் புகழ
வாழ்ந்த உங்களை என்றும் மறவோம் ஐயா!

37, மேதர் லேன், மாவிட்டபுரம். (73905) - குடும்பத்தினர்.

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 11

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த எஸ்.திருநாவுக்கரசு (வயது 50) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (202-207)

## வீடு வாடகைக்கு

கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கு அண்மையாகக் கோயில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு:
சிவராசா சிவானந்தநாதன்,
இல.16/3, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 0776146434 (73903)

## இந்தியாவில் பிருந்தாவன் கல்லூரியில் கற்கும் வாய்ப்பு

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

க.பொ.த.உயர்தரம் 2 பாடங்களில் சித்தியுடன்

பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன

கற்கை நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

சந்திப்புக்கான கால நேரத்தை முற்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 0777- 317043
Company Secretarial Services (Pvt) Ltd.
285c1/1, Stanley Tillakaratne Mawatha,
Jubilee Post, Nugegoda.

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு, உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்!

- ஓர் அடியான்.


நீங்கள் தற்போது வேலைசெய்துகொண்டு இருக்கிறீர்களா?
நீங்கள் ஒரு பட்டதாரியாகவேண்டியது அவசியம்
உங்களுக்காகவே விடுமுறை நாட்களில் மட்டும்.....
சங்கானையில் அல்லது யாழ்ப்பாணத்தில்
பயிலக் கூடிய புதிய பிரிவு ஆரம்பம்!

After Degree! After Degree? After Degree? After Degree?

நீங்கள்
Trinity University இனது
சான்றிதழுடன் காமராஜர் பல்கலைக்கழகத்தின்
Post Graduate Diploma in Computer Application
கற்கைநெறியை 1 வருடத்தினுள்
யாழ்ப்பாணத்திலேயே கற்று MCA
போன்ற உயர்கல்வியை
கற்க முடியும்

எமது Administrative Advisor களான
Dr P .Balasundarampillai
(முன்னாள் துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)
Prof A.Sanmugadas

நீங்கள் எமது நிறுவனத்தில் வேலைசெய்துகொண்டு
Trinity University இனது
B. Sc. in Comp. Sc. கற்கைநெறியை
எமது நிறுவனத்திலேயே
பயிலக் கூடிய புதிய பிரிவு ஆரம்பம்!
உங்கள் கற்கைநெறிக்கான கட்டணத்தை
உங்கள் உழைப்பிலேயே செலுத்துங்கள்!
நீங்கள் வேலைசெய்யும் வாய்ப்பை
3 இந்திய முன்னணி Software Company களுடன் இணைந்து
North Lanka IIT வழங்குகிறது
2 வருடங்களில்
உங்கள் திறமைக்கேற்ற சம்பளம்
நீங்கள் பட்டதாரியாகும் அதே நேரம்
Software Developer ஆகவும்
Work experience உடையவராகவும்
ஆக கூடியதாக வடிவமைக்கப்பட்டது

அவர்களின் வழிகாட்டலில் இக்கற்கைநெறிகள் ஆரம்பம்

மேலதிக விபரங்கட்கு-North Lanka IIT
Main Street, Chankanai.0602214305
New College of Higher Studies
No 95, Ariyakulam, Jaffna


## நாய்க்குட்டிக் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் கறுப்பு நிற நாய் குட்டிகள் விற்பனைக்கு உண்டு
தொடர்பு:
வ.சிவசுப்பிரமணியம்
பொன்னாலை வீதி, மானிப்பாய்.
(துர்க்கா மில், முனியப்பர் கோயிலுக்கு அருகாமையில்)
T.P. 0602217819 (73980)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், ஆயிலியம் நட்சத்திரம் உடைய 42 வயதுடைய அழகான மணமகளுக்கு நல்ல குணமுள்ள அரச அல்லது தனியார் துறையில் தொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு:
விள.இல.: 3091, மே/பா உதயன்.யாழ்.

## திருமண சேவை

புதுமணமா; மறுமணமா?... எவ்வகைத் திருமணத்திற்கும் எம்மை நாடுங்கள்! விவரங்களைத் திங்கள், புதன், வெள்ளி மாலை சுயதெரிவுமுறை முன்னோடி தனிமனித நிறுவனர் மூத்த புகழ்பூத்த திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனிடம் விசாரித்தறிக!
வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 30.06.1936

மறைவு: 23.04.2007

### அமரர் வல்லிபுரம் சிவபாக்கியநாதன்

[ஓய்வு பெற்ற பிரதம மருந்தாளர்]

திதி:- பூர்வபக்க ஸப்தமி (11.05.2008)

அவனியிலே அவதரித்த அன்புத் தெய்வம் அப்பா!
ஆண்டொன்று ஓடியே மறைந்தாலும்
ஆறுமா எங்கள் ஆறாத்துயர்.
இன்புறவே நாம் வாழ இனிது பல செய்தீரே
இப்போது எமை விட்டு எங்கு தான் சென்றீரோ
ஈசனடி போற்றி, எந்தையடி போற்றியென
எமை ஏங்க வைத்துச் சென்றீரோ
உறவுகள் ஆயிரம் இருப்பினும் - அப்பா
உங்கள் அன்பினை உள்ளம் தேடுதே
எழிலாக எமை வளர்த்து ஏற்ற முற வைத்தீர்
ஏணியாய் இருந்தெம்மை ஏற்றி வைத்து மகிழ்ந்தீரே
ஐங்கரனோடு சாயியை அனுதினம் தொழுதீரே
ஒற்றுமையாய் வாழ எமை நாளும் பயிற்றுவித்தீர்
ஓடோடி வருவீர்களா? உங்களை நாம் பார்க்க
ஔடதமாய் எமைக் காத்த அப்பா- இன்று
ஆறாத துயருடனே உமை ஆண்டவனாய் தொழுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய அரன் பாதம் தொழுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (73851)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வைத்தியசாலை அருகாமை,
[illegible] மத்தி, கோப்பாய்.

## தொண்டர்களை ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பம்

யாழ்.மாவட்டத்தில் வசிக்கும் சமூகசேவை மனப்பாங்கு உடைய பகுதி நேரமாக வேலை செய்ய ஆர்வமுடைய 18 தொடக்கம் 25 வயதிற்கு இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

- ★ க.பொ.த.சாதாரணம் அல்லது உயர்தரம் சித்தி பெற்றிருத்தல்.
- ★ மது, புகைத்தல், போதைப்பொருட் பாவனை மற்றும் துர்நடத்தைகள் அற்றவராக இருத்தல்.
- ★ சமூகமட்ட நல்லொழுக்க/ இளைஞர் கழகங்களில் அங்கத்துவமும், சமூக சேவைச் செயற்பாடுகளில் அனுபவமும் உடையவராக இருத்தல் வரவேற்கத்தக்கது.

**சேவையின் தன்மை:**

தெரிவுசெய்யப்படுவோர் தமது பகுதியிலுள்ள முன்பள்ளிகளில் போரூட் நிறுவனத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் உணவு விநியோகத்திட்டத்தை அமுல்படுத்துதல், மேற்பார்வை செய்து அறிக்கைகளைச் சமர்ப்பித்தல், தொடர்ந்தும் எதிர்வரும் காலங்களில் மது, புகைத்தல், போதைப்பொருள் பாவனை தடுப்பு மற்றும் சிறுவர் கழகம் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும். இதற்கான பிரயாண வசதியுடன் ஏற்புடைய படியும் வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் முழுப்பெயர், முகவரி, பால், பிறந்த திகதியுடன் வயது, கல்வித் தகைமை, அனுபவச் சான்றிதழ் மற்றும் கிராம சேவை அலுவலரின் வதிவிட மற்றும் நல்லொழுக்கச் சான்றிதழ்களையும் இணைத்து தங்கள் விண்ணப்பங்களை நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு எதிர்வரும் 22.05.2008ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

திருமதி ம.வசந்தகுமாரி, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம். (சி/552773)

## மரண அறிவித்தல்

### வைத்தியன் இன்னாசி மனுவல்தாசன் (நசரேத்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் இல.20, புனித பத்திரிசியார் வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியன் இன்னாசி மனுவல்தாசன் (நசரேத்) அவர்கள் 07.05.2008 ஆம் திகதி இறைபதமடைந்தார்.

அன்னார் அமரரான வைத்தியன் இன்னாசி - பிரான்சிஸ்கம்மா தம்பதியரின் அருமை மகனும் திருமதி நீக்கிலஸ் கத்தரீனா, காலஞ்சென்ற அல்பிறட், தியோனியஸ் (பட்டுத் துரை), திருமதி நீக்கிலஸ் மொனிக்கம்மா, காலஞ்சென்ற சந்திரா, திருமதி பிரான்சிஸ் மரியபுஸ்பம், அந்தோனிப்பிள்ளை, திருமதி யேசுதாசன் றோஸ்மலர் ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற அலெக்ஸாண்டர் (சூசை), அன்னம்மா, தம்பதியரின் அன்பு மருமகனும் சிசிலியா (லில்லி) வின் அன்பு கணவரும் யோண் பிறிற்றோ, எஸ்பீரியர், அருட்பணி டொன்பொஸ்கோ (செ.தா), மேரி பெறடோவினா (கிறிஸ்ரலா), மேரி கொலஸ்ரிக்கா (ஜெயராணி), அலக்ஸான்டர் (கொலம்பஸ்), றோகினி (வதனா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்தியாபிள்ளை (செபமாலை (யா.மா.ச)), திருமதி தேவதாசன் எமல்டா, திருமதி பிரான்சிஸ், சவரியம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி யோன் பிறிற்றோ சகாயமலர், திருமதி எஸ்பிரியா பரலோகசீலி, ஜான்சன், சர்ச்சில், திருமதி அலக்ஸான்டர் மேரிநிஷாந்தினி, ஜெயவர்த்தனா ஆகியோரின் அன்பு மாமனும் சோபியா, சில்வியா, றிபோட்சன், சுதர்சன் (யூட்சன்), அன்ரனிடயஸ், இமன்சியா, செல்சியா, கௌசியா, டென்சியா, அன்ரனிராஜ், மெரிநொச்சியா, மேரி செல்சியா, ஜனார்த்தன், ஜொய்சன், யுஸ்ரின், தொரான்சிஸ், அருண்சன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.05.2008) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் இல.60/37, மதகுவைத்தகுளம், வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு தோணிக்கல் புனித வேளாங்கன்னி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்பு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு: நாளை (12.05.2008) திங்கட்கிழமை 11 மணிக்கு யாழ்.அருள் ஆச்சிரமத்தில் இரங்கல் திருப்பலி நடைபெறும்.

தகவல்:
அருட்பணி டொன் பொஸ்கோ செ.தா (மகன்),
றோசரி ஆச்சிரமம்.

மதகுவைத்தகுளம், வவுனியா.
0242221541, 0773450659. (சி/552795)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது இலக்கை நோக்கி இணைந்து பணியாற்றுகிறது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு

வருடம் தோறும் மே மாதம் 8 ஆம் திகதி உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினமாகக் கொண்டாடப்பட்டு வரு கின்றது. இயற்கை அனர்த்தங்கள், ஆயுத மோதல்கள் மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்ப துயரங்கள் தொடர்பாக உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக இது நிகழ்த்தப்படுகின்றது.



செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு ஐ.சி.ஆர்.சியின் யாழ்.வதிவிடப் பிரதிநிதி வலோறி ஒபர்ட் உட்பட பலர் இரத்ததானம் வழங்கியபோது...

நாம் எதிர்கொள்ளவிருக்கும் எண்ணிறைந்த சவால்கள் மற்றும் மனித இனத்துக்காக நாம் ஒன்றாக அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டிய பணிகளைப் பற்றி மீள் உறுதிசெய்து கொள்வதற்கும் இது ஒரு சந்தர்ப்பமாக அமைகின்றது.

மற்றவர்களுக்கு உதவும் வகையிலான பொது இலக்கினை நோக்கி ஒன்றாகப் பணியாற்றுகின்ற இந்த ஒருமித்ததன்மையான அம்சம்தான், அனர்த்தங்கள், மோதல்கள், ஏழ்மை மற்றும் ஆரோக்கிய இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலில் உண்மையானதொரு மாற்றத்தை செய்ய உதவுகின்றது.

ஒவ்வொரு நாளும் உலகம் முழுவதும் உள்ள எமது அர்ப்பணிப்புமிக்க தொண்டர்கள் மற்றும் அலுவலர்களின் பணிகளில் இந்த விதமான ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தையும் தாக்கத்தையும் நாம் கண்டு வருகின்றோம் - அனர்த்தங்களை எதிர்நோக்குவதற்கான ஆயத்தம் முதற்கொண்டு குடும்ப உறவுகளை இணைக்கும் செயற்பாடுகள் வரையில் -

புயலுக்கு முன்னதாக மக்களை அப்புறப் படுத்துவதிலிருந்து போரினால் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்ட பிள்ளைகளை ஒன்றிணைப்பதுவரை தேசிய சங்கங்கள், சர்வதேச ஒன்றியம், மற்றும் செஞ்சிலுவை சர்வதேசக்குழு ஆகியவை ஒன்றாக இணைந்து செயல்படுவதன் மூலமே தேவைகளை எதிர்நோக்கியுள்ளவர்களுக்குப் பாதுகாப்பு உதவி, மற்றும் ஆறுதலை வழங்க முடிந்துள்ளது.

**150 ஆவது வருடாந்த தினம் வருகிறது**

அடுத்த ஆண்டு சொல்பெரினோ போரின் (Battle of Solferino) 150 ஆவது வருடாந்த தினத்தைக் கொண்டாடவிருக்கின்றோம். செஞ்சிலுவை மற்றும் செம்பிறை அமைப்பின் வரலாற்றில் அன்றைய தினமே தீர்க்கமான தேர்ந்த முடிவையெடுக்க காரணமான தினமாகும். அன்றைய தினம்தான் சொல்பெரினோ போர்க்களத்தில் வைத்து ஹென்றி டுணான்ட் (Henry Dunant) காயமடைந்து கிடந்த போர்வீரர்களுக்கு உதவி புரியத் தொடங்கினார். ஒரு நிறுவனத்தை உருவாக்கும் முன் உணர்வைப் பெற்றார். 1828 மே மாதம் 8 ஆம் திகதி அவர் பிறந்தநாளாகும்.

2009 ஆம் ஆண்டு இந்த சிறப்புமிக்க தினத்தை கொண்டாட நாம் உத்தேசிக்கும் வேளையில் நாம் செய்யும் காரியங்கள், எமது நிலைப் பாடுகள் யாவற்றிலும் மக்கள் - அவர்களின் தற்காப்பு, ஆரோக்கியம், கண்ணியம் மற்றும் சேமநலன் ஆகியவை நடுநாயகமாகத் திகழ வேண்டும் என்பது கருத்தில் கொள்வோம்.

மற்றவர்களுக்குஉதவும் எமது தகைமைக்கு ஒத்துழைப்பும் குழும உணர்வும் அவசியம் என்பதை அனுபவத்தின் மூலமாகக் கண்டறியப்பட்டுள்ளது. சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை தினத்தைக் கொண்டாடும் வேளையில் மனித இனத்துக்காக ஒன்றுபட்டு உழைப்பதன் மூலம் வரும் பலத்தையும் கொண்டாடுவோமாக -

2007 ஆம் ஆண்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழு மேற்கொண்ட இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிய உதவிகளின் சுருக்கம் வருமாறு:-

✱ இலங்கை படையினருக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையிலான போரில் பாதிக்கப்பட்டவர்களின் நிலைகளை மேம்படுத்துவதில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் ஏறத்தாழ 600 பணியாளர் ஈடுபட்டிருந்தார்கள். இவர்களில் 70 பேர் சர்வதேச சமூகத்தினர். மோதல்கள் இடம் பெற்ற வடக்கு கிழக்கு பகுதிகளில் இவர் கள் பணியாற்றினார்கள்.

✱ சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 23 நாடுகளிலிருந்து செஞ்சிலுவை மற்றும் செம்பிறை அமைப்புக்களின் பணியாளர்கள் பணியாற்றினார்கள்.

## மோதலில் பாதிப்புறும் மக்களுக்கு மகத்தான சேவை ஆற்றுகிறது

**செஞ்சிலுவை - செம்பிறை தினத்தையொட்டி ஐ.சி.ஆர்.சி விடுத்துள்ள அறிக்கையிலிருந்து**

✱ அரசாங்கக் கட்டுப்பாட்டிலும் புலிகள் கட்டுப்பாட்டிலும் உள்ள பிரதேசங்களுக் கிடையில் ஏறத்தாழ 260 ஆயிரம் மக்கள் போய் வருவதற்கான ஆள் அணி அனுசரணையைச் செஞ்சிலுவை அமைப்புகள் வழங்கியுள்ளன. இவர்களில் ஏறத்தாழ 8 ஆயிரம் நோயாளி களும் அடங்குவர்.

இருதரப்பின் கோரிக்கையின் பேரில் மோதலில் கொல்லப்பட்ட 250 பேரின் சடலங்கள் எடுத்துச் செல்லப்படுவதற்கும் அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.

✱ நாடு முழுவதும் சர்வதேச மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான கண்காணிப்புக்களையும் ஐ.சி.ஆர்.சி மேற்கொண்டது. சட்டத்துக்கு மாறான கொலைகள் சிறுவர்களை படைகளில் இணைத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் சேகரிக்கப்பட்டதுடன், இவைபற்றி சம்பந்தப்பட்ட தரப்புகளுட னும் விவாதிக்கப்பட்டது. காணாமல் போனவர்கள் பற்றிய விவரங்கள் அறியப்பட்டு சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்குத் தகவல் கொடுப்பதிலும் ஈடுபட்ட னர்.

✱ மோதல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு அனேகமாக 160 இடங்களில் வைக்கப்பட்டுள்ள 2,700 பேருக்கு மேற்பட்டவர்களின் நிலைமை பற்றி ஐ.சி.ஆர்.சிப் பணியாளர்கள் கண்காணிப்புக்களை மேற்கொண்டனர். அரசாங்கத்தின் அல்லது புலிகளின் காவலிலுள்ள இவர்களில் 2,100 பேரின் விவரம் பதியப்பட்டுள்ளது. முதற் தடவையாக 2007 ஆம் ஆண்டு இவர்களைப் பார்த்து வரவும் அனுமதி கிடைத் துள்ளது.

✱ இலங்கையில் 4 லட்சத்து 16 ஆயிரம் பேருக்கு மோதலால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த பல்வேறு பகுதிகளில் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

✱ 86 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

✱ வருடம் முழுவதும் 23 ஆஸ்பத்திரிகளுக்கு ஐ.சி.ஆர்.சி உதவி புரிந்துள்ளது. யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 50 இற்கும்மேற்பட்ட சுகாதார மேம்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஷேச மருத்துவ கவனிப்புக்குரிய 1500 பேர் ஐ.சி.ஆர்.சி விமான அனுசரணையுடன் கொழும்பு சென்று திரும்பியுள்ளனர்.

✱ ஐ.சி.ஆர்.சி. அனுசணையின் பேரில் யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் மையத்தைச் சேர்ந்த 400 நோயாளிகள் உடல் உறுப்பு உதவிகளைப் பெற்றுக் கொண்டனர். சுமார் 70 புதிய நோயாளிகள் செயற்கை உறுப்புகள் பொருத்திக் கொண்டனர். மேலும் 20 பேருக்கு மேல் உடல் உறுப்பு மருத்துவத்துக்குள்ளானார்கள்.

✱ இலங்கை செஞ்சிலுவை சங்கத்தைச் சேர்ந்த அலுவலர்கள் இலங்கை நிலைமைகளுக்கேற்பப் பணிபுரியும் வகையில் ஐ.சி.ஆர். சியினால் பயிற்சியளிக்கப்பட்டனர். ✱

---

# சம்பள உச்சவரம்பு நீக்கப்படுவதால் இந்தியன் பிறிமியர் லீக் வீரர்களின் வருமானம் 10 மடங்காக உயரும்?

ஐ.பி.எல் வீரர்களுக்கான சம்பள உச்ச வரம்பு அதிரடியாக நீக்கப்படுகிறது. அடுத்த சீசனில் ஒரு வீரர் 61 கோடி ரூபாவரை சம்பளம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது டோனி தான் அதிகபட்சமாக 6 கோடி ரூபா பெறுகிறார். இவரது சம்பளம் 10 மடங்கு உயர வாய்ப்புள்ளது.



டோனி

இந்திய கிரிக்கெட்சபை புரட்சிகரமான முறையில் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பை தொடக்கியது. இதன் சார்பில் "ருவென்ரி - 20" தொடர் வெற்றிகரமாக நடந்து வருகிறது. சென்னை, மும்பை உள்ளிட்ட 8 அணிகள் விளையாடி வருகின் றன. இந்த அணிகளை "ரிலையன்ஸ்" முகேஷ் அம்பானி முதல் நடிகர் ஷாருக்கான் வரை கோடிகளை கொடுத்து வாங்கினர்.

பின்னர் வீரர்களை ஏலம் மூலம் ஒவ்வொரு அணிகளும் வாங்கின. இதில் சென்னை "சுப்பர் கிங்ஸ்" அணிக்காக டோனி அதிகபட்சமாக 6 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்டார். போட்டிக்கான ஒளிபரப்பு உரிமை (ரூ.4,330 கோடி) சேர்த்து ஒட்டுமொத்தமாக 7 ஆயிரம் கோடி ரூபாவுக்கு ஐ.பி.எல். வர்த்தகம் நடந்தது.

தற்போது ஐ.பி.எல். "ருவென்ரி - 20" தொடருக்கு நாடு முழுவதும் அமோக வரவேற்பு காணப்படுகிறது. சர்வதேச அளவிலான வீரர்கள் பலர் தங்களது தேசிய அணிகளை உதறித் தள்ளிவிட்டு இவ்வமைப்பில் சேரக் காத்திருக்கின்றனர். இந்தச் சூழலில் அடுத்த சீசனில் வீரர்களுக்கான சம்பள உச்சவரம்பு நீக்கப்பட வாய்ப்பிருப்பதாக ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி தெரிவித்தார்.


இதுபற்றி அவர் கூறுகையில், இந்த ஆண்டு வீரர்களை ஏலம் எடுக்க அதிகபட்ச தொகையாக 20 கோடி ரூபா நிர்ணயித்திருந்தோம். இதன் மூலம் பணக்கார அணிகள் அதிக விலை கொடுத்து வீரர்களை இழுப்பதை தடுக்க முடிந்தது. அடுத்த சீசனில் (2009) இந்த சம்பள உச்ச வரம்பு நீக்கப்படலாம். அணிகள் தங்களை நிலைநிறுத்திக்கொண்டபின் நிலைமை மாறலாம் எந்த அணியும்... யாரையும் விலைக்கு வாங்கலாம். இந்த நிலைமை மிக விரைவில் ஏற்படலாம்" - என்றார்.

இதையடுத்து, ஆஸ்திரேலிய வீரர்களான ஹைடன், பிரட் லீ, மெக்ராத் உள்ளிட்டவர்கள் சம்பளம் பல மடங்கு உயரும்.

இதுபற்றி ஹைடன் கூறுகையில், அடுத்த ஆண்டு ஒவ்வொரு வீரரும் மிகப் பெரும் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட வாய்ப்புள்ளது என்றார். ஆஸ்திரேலிய நிருபர் ஒருவரிடம் டோனி கூறுகையில், அடுத்த சீசனில் வீரர்கள் சுமார் 61 கோடி ரூபா வரை ஒப்பந்தம் செய்யப்படலாம்" - என்றார்.

**அக்தருக்கு ஐ.பி.எஸ். அனுமதி**

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தருக்கு விதிக்கப்பட்ட 5 ஆண்டு போட்டித் தடையை ஒரு மாதத்துக்கு நிறுத்திவைக்கும்படி நீதிபதி அப்தாப் பாருக் உத்தரவிட்டுள்ளார். இதனை தொடர்ந்து அவருக்கு இந்திய பிரிமியர் லீக்கில் விளையாட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சொஹைப் அக்தருக்கு உடனடியாக ஐ.பி.எல். இல் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கவுள்ளதாக அதன் தலைவர் லலித் மோடி தெரிவித்தார். இதனபடி அவர் ஐ.பி.எல் தொடரில் விளையாடுவதற்காக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடன் இணைந்துகொள் வார் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஹர்பஜன்

மோசமான நடத்தை காரணமாக 5 ஆண்டு தடைக்கு உள்ளான அக்தர் அதற்கு எதிராக மேன்முறையீடு செய்தார். எனினும் அவரது மேன்முறையீடும் நிராகரிக்கப்பட்ட நிலையில், தனக்கு விதிக்கப்பட்ட தடைக்கான இறுதி தீர்ப்பு வெளியாகும் வரை தடையை தற்காலிகமாக நிறுத்தி வைத்தால் ஐ.பி.எல் போட்டிகளில் கலந்துகொள்ள உதவியாக இருக்கும் என அக்தர் மேன் முறையீடு செய்திருந்தார் இந்த [illegible] ரித்த 3 பேர் கொண்ட [illegible] விதிக்கப்பட்ட தடையை ஒரு மாதத்துக்கு மாத்திரம் நிறுத்திவைத்து உத்தரவிட்டது.

**சச்சினுக்கு பத்ம விபூஷன் விருது!**

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு பத்ம விபூஷன் விருது வழங்கப்பட்டுள்ளது. டெல்லியில் ஜனாதிபதி மாளிகையில் நடந்த விருது வழங்கும் விழாவில், சச்சினுக்கு ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் பத்ம விபுஷன் விருதை வழங்கினார்.

விருதை பெற்றுக் கொண்டு சச்சின் பேசுகையில், "இந்த 18 ஆண்டுகளில் ஏகப்பட்ட விருதுகளை நான் பெற்றுள்ளேன் என்றாலும் இந்த விருது தான் மனதிற்கு இதமாக உள்ளது. இந்த மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தைகள் இல்லை" -என்றார

**கவாஸ்கர் விலகல்**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் கிரிக்கெட் குழுத் தலைவர் பதவியிலிருந்து, சுனில் கவாஸ்கர் திடீரென விலகினார்.

கடந்த 8 ஆண்டுகளாக இந்த பதவியிலிருந்து வந்த அவர் தனது இந்த முடிவு குறித்து கூறுகையில், இந்தப் பொறுப்பை முழு மன நிறைவுடன் செய்து வந்ததாகவும், ஊடகங்களில் மேற்கொள்ளும் தனது பணி காரணமாக இரண்டு பொறுப்புகளை கவனித்துக் கொள்வது கடினமாக உள்ளதாகவும் கூறினார்.

கவாஸ்கரின் பதவி விலகல் குறித்து ஐசிசியின் தலைமை நிர்வாக அதிகாரி (பொறுப்பு) வெளியிட்டுள்ள அறிக்கையில், கிரிக்கெட் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடந்த நிலையில், கவாஸ்கர் தனது முடிவை ஐசிசியிடம் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகைகளில் கட்டுரையாளராகவும் வர்ணனையாளராகவும் இருப்பது, ஐசிசி கிரிக்கெட் குழுத தலைவராக செயல்படுவது என ஒரே நேரத்தில் இரு வெவ்வேறு பணிகளில் ஈடுபடக் கூடாது என்று ஐசசி கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, கவாஸ்கர் தனது விலகல் முடிவை எடுத்துள்ளார்.

**கடைசியாக ஒரு வாய்ப்பு தாருங்கள் ஹர்பஜன் கிரிக்கெட்சபைக்கு கடிதம்**

[illegible] நடவ[illegible]க்கை எடுக்கும் முன் தனக்கு கடைசியாக ஒரு வாய்ப்பு தருமாறு ஹர்பஜன் சிங் இந்திய கிரிக்கெட் சபைக்கு கடிதம் எழுதியுள்ளார். இத் தகவலை என்.டி. தொலைக்காட்சி சேவை கடந்த புதன்கிழமை வெளியிட்டது.

ஓர் ஆட்டத்தின்போது ஸ்ரீசாந்தின் கன்னத்தில் அறைந்தது தொடர்பாக ஏற்கனவே ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட ஹர்பஜன் சிங்குக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து விசாரிக்க சுதிர் நாணாவதி என்பவரை இந்திய கிரிக்கெட் சபை நியமித்துள்ளது. அஹமதாபாத்தில் நாணாவதி முன் ஆஜராவதற்கு 2 நாள்கள் இருக்கும் நிலையில் கிரிக்கெட் சபைக்கு ஹர்பஜன் சிங் கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது, இச்சம்பவம் குறித்து ஸ்ரீசாந்திடம் மன்னிப்புக் கோரியுள்ளேன். தேவையெனில் பொதுவாகவும் மன்னிப்புக்கேட்கத் தயாராகவுள்ளேன். என்னுடைய மனப்பூர்வமான மன்னிப்பை ஏற்றுக்கொள்வதுடன் கடைசியாக ஒரு வாய்ப்பையும் தாருங்கள். ஹர்பஜன் சிங்கின் கடிதம் குறித்து இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் நிரஞ்சன் ஷா கூறியதாவது,

ஹர்பஜன் நிறைய கடிதங்கள் அனுப்பியுள்ளார். விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. நாணாவதியின் அறிக்கைக் காக காத்திருக்கிறோம். இந்த நேரத்தில் கடிதத்தில் உள்ள விவரங்களை தெரிவிப்பது சரியில்லை - என்றார். இதனிடையே ஹர்பஜன் அவ்வாறு நடந்து கொள்ளுமாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என சுதிர் நாணாவதி தெரிவித்துள்ளார்.



அக்தர்

## ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட அக்தருக்கு தற்காலிகமாக அனுமதி

எனினும் இன்னும் பஞ்சாப் அணியின் தலைவர் யுவராஜ் சிங், மும்பை இந்தியன்ஸ் பயிற்சியாளர் லால்சாந்த் ராஜ்பு ஆகியோருடன் பேச வேண்டியுள்ளது என்றார் நாணாவதி. ஹர்பஜன் சிங் அவ்வாறு நடந்துகொள்ள எந்த காரணமும் இல்லை என நாணாவதி அறிக்கை சமர்ப்பித்தால் ஹர்பஜனுக்கு கடுமையான தண்டனை அளிக்கப்படக்கூடும் என கிரிக்கெட் சபை வட்டாரங்கள் கூறுகின்றன.

- டிலான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலைக்கு முன்னால் நடைபாதை வியாபாரம் செய்யத் தடை

குருநகர்,மே11

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள நடைபாதையில் வியாபாரம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நடைபாதையில் வியாபாரம் செய்த சகல வியாபாரிகளும் நேற்று முன்தினம் அங்கிருந்து அகற்றப்பட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பான நடைபாதையில் நடைபாதை வியாபாரிகள் உடுபுடைவைகள் மற்றும் சில்லறைச் சாமான்கள் வைத்து விற்பனை செய்ததனால் மக்கள் வீதிகளினூடாகவே பயணித்தனர். இதனைத் தடை செய்து மக்கள் நடைபாதையில் நடந்து செல்ல வசதியாக யாழ்.மாநகர சபையால் நடைபாதையை உள்ளடக்கி கம்பங்கள் நடப்பட்டு வலைக்கம்பிகள் அமைக்கப்பட்டன. எனினும் நடைபாதை வியாபாரிகள் தமது பொருள்களை அகற்றாத காரணத்தால் மக்கள் நடைபாதையூடாக நடந்து சென்றனர். வியாபாரிகள் அப்புறப்படுத்தப்பட்டதன் காரணமாக இந் நடைபாதையூடாக ஆஸ்பத்திரி வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலை வரை சுலபமாகச் செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது. (202-51)


காரைநகர் களபூமி பாலாவோடை

குறிஞ்சாக்குளி ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில்

சர்வதாரி வருஷ பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

சித்திரை 29ஆம் நாள் (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 10 மணிக்கு கொடியேற்றம்

வைகாசி 4ஆம் நாள் (17.05.2008) சனிக்கிழமை
வேட்டைத்திருவிழா

வைகாசி 5ஆம் நாள் (18.05.2008) ஞாயிற்றுக்கிழமை
சப்பறத் திருவிழா

வைகாசி 6ஆம் நாள் (19.05.2008) திங்கட்கிழமை
காலை 9 மணி தேர்த்திருவிழா

வைகாசி 7ஆம் நாள் (20.05.2008) செவ்வாய்க்கிழமை
காலை 9 மணி தீர்த்தத் திருவிழா

வைகாசி 8ஆம் நாள் (21.05.2008) புதன்கிழமை
பூங்காவனத் திருவிழா

வைகாசி 10ஆம் நாள் (23.05.2008) வெள்ளிக்கிழமை
வேள்வியும் வைரவர் பொங்கலும்

மஹோற்சவ குரு: பிரம்மஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள்
(ஆலய பிரதம குரு)

தினமும் அன்னதானம் நடைபெறும்.

நிர்வாகம்.

(74014)


## மரண அறிவித்தல்



### வைரவி இராமு

**(முன்னாள் கிராமசபை உறுப்பினர்)**

சங்கானை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவி இராமு (முன்னாள் கிராம சபை உறுப்பினர்) 08.05.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் ஜெயதேவி, ஜெயபாலசிங்கம் (ஜேர்மனி), அருள்நேசன் (முன்னாள் மக்கள் வங்கி உத்தியோகத்தர் - மன்னார்), இராசநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசேந்திரம் (கிருஷ்ணா பான்சி ஹவுஸ் - சித்தங்கேணி), வசந்தமாலா (ஜேர்மனி), மீரா (உதவிக் கல்விப்பணிப்பாளர் - யாழ்.கல்வி வலயம்), செல்வராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஜெயந்தினி - மகேந்திரன் (சுவிஸ்), ஜெயரஞ்சினி - மதீஸ்வரன் (கனடா), நிஷாந்தன் (பிரான்ஸ்), பிரியதர்சினி (நுண்கலைப் பீடம், 3ஆம் வருடம் - யாழ்.பல்கலைக்கழகம்), கஜானா, ஜெலீனா (ஜேர்மனி), ஆருணியா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சதேசன், சாமுவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் அனோஜன், அஜய் (சுவிஸ்) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வரா வீதி,
சங்கானை மேற்கு,
சங்கானை. (74015)

தகவல்:
அருள்நேசன் (மகன்).


ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட விலைக்கழிவு

மே 31 வரை மட்டுமே

பாடசாலை அதிபர்களே!

மாணவமணிகளே!

நாடுங்கள்......

* பாடசாலை, பல்கலைக்கழகப் பாடப்புத்தகங்கள்
* புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள்
* பாடசாலை உபகரணங்கள்
* தர உள்ளீட்டுப் பொருள்கள், மூலதனப் பொருள்கள்
* வாத்தியக் கருவிகள்
* அழிபொருள்கள்
* நுணுக்குக்காட்டிகள்
* கணனி நூல்கள்
* விளையாட்டுப் பொருள்கள்
* ஆய்வுகூட உபகரணங்கள்
* ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள்
* அலுவலக அலுமாரிகள், புத்தக றாக்கைகள்
* O.H.P புறொஜெக்ரர்கள், றோணியோ மெசின்கள்
* மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

10% முதல் 50%வரையான விசேட விலைக் கழிவு

யாவற்றையும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்:

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி/552800)



விற்பனைக்கு

எமது நிறுவனத்தில் வெற்று உரப்பைகளும், பலகைப் பெட்டிகளும் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்.

நியூ லங்கா ரேடேர்ஸ்,
222, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (74019)



மணமகள் தேவை

1975ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பிறந்த, கல்வியியற் கல்லூரி டிப்ளோமா (விஞ்ஞான) ஆசிரியருக்கு ஆசிரிய மணமகள் தேவை. நட்சத்திரம் - ஆயிலியம், கிரக பாவம் - 3சுற்றும் 32½ செவ்வாய் - 12இல் பொருத்தமான நட்சத்திரங்கள் பூசம், உத்தரம், அத்தம், திருவோணம், உத்தராடம் (1), அவிட்டம் (1,2) சதயம்.

(வடமராட்சி விரும்பத்தக்கது).

விளம்பர இல: 3094,
மே/பா உதயன், யாழ்ப்பாணம். (74023)


## அங்குரார்ப்பண கூட்டம்

வலி.தென்மேற்கு,மே11

பண்டத்தரிப்பு விழிப்புக் குழுவின் அங்குரார்ப்பண கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு பண்டத்தரிப்பு கிராம அலுவலர் எஸ்.அருள்ஞானாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (202-135)

## மரக்கறி விலை உயர்வு

சங்கானை,மே11

சங்கானைச் சந்தையில் மரக்கறிகளின் விலை திடீரென உயர்ந்துள்ளதால் மரக்கறி வகைகளை வாங்கமுடியாமல் மக்கள் சிரமப்படுகின்றனர். வெங்காயம் கிலோ 100 ரூபாஆகவும், பாகற்காய், கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, தக்காளிப்பழம் போன்றவை கிலோ 200 ரூபாவுக்கு மேலாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (202-29)

## தாதியர் பயிற்சிக்குத் தெரிவானவர்களுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,மே11

யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலையில் தாதியர் பயிற்சிநெறிக்குத் தெரிவானவர்களுக்கான நியமனக்கடிதங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

பயிற்சி நெறிக்குத் தெரிவானவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தந்து கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202)

## சமூக வலுவூட்டல் பயிற்சிப் பட்டறை

சங்கானை,மே11

சங்கானை கிழக்கு, மேற்கு, மத்தி, தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட சமுர்த்தி செயலணி அங்கத்தவர்களுக்கு 'வேள்ட்விஷன்' நிறுவனம்சமூக வலுவூட்டல் பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளது.

150 அங்கத்தவர்களுக்கு இப்பயிற்சி நடாத்தப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக சங்கானை தெற்கு மாவடி சனசமூக நிலையத்தில் எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் காலை 9 மணி முதல் 3.30 மணி வரை 25 அங்கத்தவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி பட்டறையில் அனர்த்த முகாமைத்துவம், சுயதொழிற்பயிற்சி போன்றவை பற்றிய விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. (202-29)

# காசநோய் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த பண்டத்தரிப்பில் தெருக்கூத்து

வலி.தென்மேற்கு,மே11

பரவி வரும் காசநோயை தடுப்பதற்காகவும், அந்நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காகவும் பண்டத்தரிப்புப் பகுதியில் தெருக்கூத்து நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் பண்டத்தரிப்பு பொதுச்சந்தை முன்றலிலும், அம்பன் வீதி, அன்னை வேளாங்கன்னி மாதா ஆலய முன்றலிலும், பண்டத்தரிப்பு பற்றிமா மாதா ஆலய சுற்றாடலிலும் காசநோய் பற்றிய தெருக்கூத்து பண்டத்தரிப்பு பொதுசுகாதார பரிசோதகர் என். நிர்மலானந்தனின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

இதேவேளை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஏனைய இடங்களிலும் இத்தெருக்கூத்து நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-135)

## காணவில்லை



பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்நத தங்கத்துரை திவாகரன் (வயது 17) என்பவரை 08.05.2008 முதல் காணவில்லை. கடைக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டுச் சென்றவர். கறுப்பு நிற காற்சட்டையும் பச்சை நிற ரீ-சேட்டும் அணிந்திருந்தார்.

இவரைக் கண்டவர்கள் பெற்றோருடனோ அல்லது 021 222 3031 அல்லது 021 222 3032 தொலைபேசியூடாகவோ தகவல் தரவும்.

பிரான்பற்று, பண்டத்தரிப்பு. (74016)

பெற்றோர்.


VACANCIES

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 21st May 2008.

FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

1) Assistant Lecturer(on contract) in Commerce/Business Administration
2) Visiting Lecturer in e - Commerce

| Post | Salary scale |
|---|---|
| Assistant Lecturer | Rs.25,145/- (fixed) p.m |
| Visiting Lecturer | Rs. 500/- per hour |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, University of Jaffna, SriLanka either in person or by post, on a payment of *Rs.100/-* per form. Those who wish to obtain application forms *by* post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for **more than one** post should apply in ***separate forms.***

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
09.05.2008

(C/552799)


## கண்ணீர் அஞ்சலி

### செல்லத்துரை பாலசுப்பிரமணியம்



**(முன்னாள் சாரதி, யாழ்.மத்திய கல்லூரி, பால் கூட்டுறவு சங்கம், திருநெல்வேலி)**

அவர்கள் 08.05.2008 வியாழக்கிழமை இயற்கை எய்திய செய்தி அறிந்து பெருந்துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல காமாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

கோ.புவனேந்திரன் குடும்பத்தினர்,
88/33, கேசாவில் பிள்ளையார் கோயில் வீதி,
பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை பக்தகுணசீலன் (விளாக் - முடமாவடி)
## (உரிமையாளர் - பூங்கனிச்சோலை)

திருநெல்வேலி கிழக்கைப் (முடமாவடி) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பக்தகுணசீலன் 09.05.2008 இல் அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (M.L.T.), வாலாம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அலன், செல்வநாயகி (திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மருமகனும் வசந்தரூபியின் அன்புக் கணவரும், அருண்புஜன் (யா/இந்துக் கல்லூரி, கணிதப் பிரிவு - 2007), ருத்திலா (யா/ இந்து மகளிர் கல்லூரி, கலைப்பிரிவு - 2009), சந்துஜன் (யா/ இந்து ஆரம்பப் பாடசாலை, தரம் - 4), நிலாஜன் (யா/ இந்து ஆரம்பப் பாடசாலை, தரம் - 2) ஆகியோரின் அன்புத் தந்தையும் உருத்திரசீலி (பிரான்ஸ்), நவநீதசீலன் (பிரான்ஸ்), புவிராஜசீலன் (பிரான்ஸ்), நவநீதசீலி (பிரான்ஸ்), நற்குணசீலன் (பிரான்ஸ்), ஜெயசீலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசதுரை (பிரான்ஸ்), கௌரி (பிரான்ஸ்), ஜெயமலர் (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), சுஜாத்தா (பிரான்ஸ்), சோதிநாதன் (பிரான்ஸ்), சிவநாதன் (பிரான்ஸ்), சாந்தரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், லிகிந்தா (பிரான்ஸ்), பிகந்தா (பிரான்ஸ்), கவிமிராஜ் (பிரான்ஸ்), புவிராஜ் (பிரான்ஸ்), உதித்தா (பிரான்ஸ்), சாட்நசின் (பிரான்ஸ்), நிசாட் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரமணீசன் (பிரான்ஸ்), அருந்ததி (பிரான்ஸ்), கஜனீசன் (பிரான்ஸ்), ஜெகனீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஈசப்பிரியா (பிரான்ஸ்), மயூரிகா (பிரான்ஸ்), கௌசலன் (பிரான்ஸ்), பினாகா (பிரான்ஸ்), சுஜன் (பிரான்ஸ்), சுஜனி (பிரான்ஸ்), சிவதர்சன் (பிரான்ஸ்), நிரோஜன் (பிரான்ஸ்), மிரோ (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பூங்கனிச்சோலை'
இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (சி-552804)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நேற்று நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மூதாட்டி ஒருவர் வாக்களிப்பதையும் வாக்காளர் ஒருவர் படையினரால் சோதனையிடப்படுவதையும், படையினர் ரோந்து பணியில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

# மாத்தறையில் பொலிஸ் சுட்டதில் கொள்ளையர் ஒருவர் உயிரிழப்பு

## நகைகள், பணம் என்பன மீட்பு

கொழும்பு, மே 11

மாத்தறை மாவட்டம், கெக்குநுந்துவப் பகுதியில் வியாழக்கிழமை இரவு கொள்ளையர் இருவரை நோக்கிப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும், அவர்களால் கொள்ளையிடப்பட்ட ஒரு தொகை நகைகள் மற்றும் பணம் என்பன மீட்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

வியாழக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இரு கொள்ளையர்கள் அந்தப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் தங்க ஆபரண விற்பனை நிலையம் ஆகியவற்றில் முதலில் கொள்ளையடித்திருக்கின்றனர். பின்னர் அந்தப் பகுதியிலுள்ள வங்கி ஒன்றினுள் நுழைந்து அவர்கள் அங்கு கொள்ளையிட முயற்சித்த வேளை, பொலிஸார் அவர்களைப் பிடிக்க எத்தனித்தனர் என்றும், ஆனால் கொள்ளையர்கள் தப்பியோடவே பொலிஸார் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் கூறப்பட்டது. இதில் கொள்ளையர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றையவர் தப்பிச் சென்றுவிட்டார் என்றும் கூறப்பட்டது.

கொள்ளையர் விட்டுச் சென்ற ஆறரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 64 ஆயிரம் ரூபா பணம் ஆகியன வற்றைப் பொலிஸார் மீட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளையர்களுக்கு மேலும் பல கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்பு இருப்பதாகவும், தப்பியோடிய கொள்ளையரைத் தேடுவதற்கு விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் மாத்தறைப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (சி)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா கூறினார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரதம ஜயந்த கூறுகையில் -

ஒரு சில சிறு சம்பவங்களால் தேர்தலின் இறுதி முடிவுகளை மாற்றிவிட முடியுமா? - என்று கேட்டார். (அ-2)

## அம்பாறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தினர் என்றும் அவர்கள் கூறினர்.

இந்த ஷெல் தாக்குதல் காரணமாக அந்த பிரதேச வாக்குச் சாவடியில் சுமார் 30 நிமிடத்திக்கு மேல் வாக்களிப்பு தடைப்பட்டிருந்தது என்று மேல் அதிகாரிகள் கூறினர். (அ-01-02)

## கிழக்குத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றிரவு கடும் தொனியில் தெரிவித்தார்.

நேற்றைய தேர்தலில் 60 வீதமான வாக்காளர்கள் - 10 லட்சம் வாக்காளர்கள் - தமது வாக்குரிமையை பயன்படுத்தியிருந்த போதிலும் இத்தகைய ஒரு முக்கியமான தேர்தலில் இது குறிப்பிடக்கூடிய எண்ணிக்கையே அல்ல என்று 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் நேற்றிரவு கருத்துத் தெரிவித்தார். (அ-2)

## அமைச்சர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போது ஹக்கீம் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

ஸ்ரீல.மு.கா - ஐ.தே.க கூட்டணிக்கு அதிகம் வாக்களிக்கச் சாத்தியமிருந்த இடங்களிலேயே இவ்வாறு மக்கள் அடித்து விரட்டப்பட்டனர் என்றும் அவர் சொன்னார்.

"சில இடங்களில் குண்டர்கள் பொது மக்களைத் தாக்கி விரட்டிய போது பொலிஸார் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். இது குறித்து பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது" என்றும் ஹக்கீம் கூறினார். (அ-02)

# நெடுங்கேணியில் விமானக் குண்டு வீச்சு

வவுனியா, மே 11

முல்லைத்தீவில், நெடுங்கேணிக்கு வடக்கே நேற்று சனிக்கிழமை பி.ப 12.15 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் புலிகளின் வெடிபொருள் கிடங்குடன் கூடிய பீரங்கு நிலை ஒன்று நிர்மூலமாக்கப்பட்டது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த பீரங்கி நிலையிலிருந்தே புலிகள் மணலாறு பிரதேசத்தில் உள்ள சிங்களக் கிராமங்கள் மீது எறிகணைத் தாக்குதலை நடத்துவதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புலிகள் தரப்புத் தகவல்கள் எவையும் நேற்று இரவு வரை வெளியாகவில்லை. (அ-2)

## வாக்காளர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

463 பேரும்- வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் மொத்தமாக 9 லட்சத்து 82 ஆயிரத்து 721 பேர் 34 மாகாண சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

அதிக வாக்குகளைப் பெறும் கட்சிக்கு 2 போனஸ் மாகாணசபை உறுப்பினர்கள் கிடைக்கப்பெறும். (அ-2)

## ஆயுதங்களுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீற்றர் நீளம் கொண்டது. தாக்கப்பட்டு 13 நிமிடங்களில் கப்பல் முழுமையாக மூழ்கிவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் படையினர் மற்றும் ஆயுதங்களை ஏற்றி - இறக்கும் பணியில் இக்கப்பல் ஈடுபட்டு வந்தது.

''இன்விசிபிள்'' கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் டி.கே. பி.திசநாயக்காவும் உறுதி செய்தார்.

ஸ்ரீலங்கா கடற்படையினரின் ஆழ்கடல் நடவடிக்கையில் முக்கிய பங்குவகித்த போர்க் கப்பல்களுக்கு வழங்கல்களை வழங்கி வந்த இரண்டு விநியோகிக் கப்பல்களில் 'இன்விசிபிள்' ஏ - 520 கப்பலும் ஒன்று எனக் கூறப்படுகிறது.

இந்தச் சரக்குக் கப்பல் 1970 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 2003 இல் 254 சட்ட விரோத குடியேற்றக்காரர்களை ஏற்றிக்கொண்டு இந்தச் சரக்குக் கப்பல் இலங்கைக் கடலில் சென்று கொண்டிருந்தவேளை, தங்காலை கடற்பிரதேசத்தில் வைத்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

பின்னர் நீதிமன்ற உத்தரவின்பேரில் இந்தக் கப்பல் கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டது. (அ-2)

# படையினர் ஐவரின் சடலங்கள் கையளிப்பு

வவுனியா, மே 11

மன்னார், கறுக்காய்க்குளம் பகுதியில் இடம் பெற்ற மோதலில் கொல்லப்பட்ட படையினரில், புலிகளால் கைப்பற்றப்பட்ட ஐவரின் சடலங்கள் செஞ்சிலுவை சர்வதேச குழுவிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

தங்களால் கைப்பற்றப்பட்ட படையினரின் ஏழு சடலங்களில் நல்ல நிலையிலிருந்த ஐந்து சடலங்களே ஒப்படைக்கப்பட்டன என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-02)

## வன்செயல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ந்துள்ள வன்செயல்கள் பலவற்றை அடிப்படையாகக்கொண்டு சம்மந்தப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் இடம் பெற்ற வாக்களிப்பை தள்ளுபடி செய்யுமாறு சி.எம்.ஈ.வி தேர்தல் ஆணையாளரை கேட்டுள்ளது.

சி.எம்.ஈ.வி. சுட்டிக்காட்டியுள்ள வன்செயல், மோசடிகளில் சில வருமாறு:-

* தம்பிலுவில் மற்றும் திருக்கோவில் பகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கையாள்கள் பலரும், தங்கள் விரல்களில் பூசப்பட்ட அடையாளங்களை அழித்து விட்டு புதிய வாக்காளர் அட்டைகளுடன் சென்று மீண்டும் மீண்டும் வாக்களித்தனர் என்று சி.எம்.ஈ.வி தெரிவித்துள்ளது.

அந்த வாக்களிப்பு நிலையங்களில் வேறு எந்த தேர்தல் ஏஜெண்டுகளும் காணப்படவில்லை. பவ்ரல் அமைபின் அதிகாரி ஒருவரும் பொலிஸ் அதிகாரியும் மட்டுமே பிரசன்னமாக இருந்தனர்.

* அதே வாக்களிப்பு நிலையத்தில் த.ம.வ.பு ஆதரவாளர்கள் ரி- 56 ஆயுதங்களுடன் முன்னே நிற்கக் காணப்பட்டனர்.

* தம்பிலுவில் உள்ள வாக்களிப்பு நிலைய வாசலில் த.ம.வி.பு அங்கத்தவர்கள் ஆள்மாறாட்டம் செய்யும் நபர்களுக்கு வாக்காளர் அட்டைகளை கற்றை கற்றையாக விநியோகித்துக் கொண்டிருக்கக் கணப்பட்டனர்.

* மட்டக்களப்பில் ஒன்பது வாக்களிப்பு நிலையங்களில் திட்டமிட்ட முறையில் ஆள் மாறாட்டம் செய்யப்பட்டு வாக்களிப்பு இடம்பெற்றது.

* ஆரைப்பற்றில் உள்ள வாக்களிப்பு நிலையம் மொன்றில் த.ம.வி.பு. அமைப்பாளர் ஒருவரால் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவர் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதை ஆஸ்பத்திரி வட்டாரங்கள் உறுதி செய்தன.

* காத்தான் குடியிலுள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு அருகாமையில் சுயேட்சைக் குழு ஒன்றின் வேட்பாளர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டார்.

* குச்வெளியில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்கு காலை 7மணிக்கு வாக்களிக்கச் சென்ற வாக்காளர்கள் அங்கு நின்ற குண்டர்களால் தாக்கப்பட்டு வாக்களிக்க அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டனர். இந்தத் தாக்குதல் காலை 8 மணிவரை தொடர்ந்ததாகத் தெரிவிக் கப்பட்டது. (அ-2)

விசேட விலைக்கழிவில் உயர்தரமான
திருமண அழைப்பிதழ்கள்
15%
SPECIAL OFFER
ADORNA
WEDDING CARDS

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:
ANDRA DIGITAL IMAGE
# 356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
# 6D, உப்புமடம் சந்தி, கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்.
T.P:021-4590268,0602218435
இணையத்தள முகவரி: www.andradesigns.com
திருமண அழைப்பிதழ்களை எமது இணையத்தளத்தினூடாகவும் தெரிவு செய்யலாம்.

மாவட்ட ரீதியிலான பரீட்சை
திருமலை.எஸ்.கணேசலிங்கம் அவர்களின்
2008 தரம் : 4 வெற்றித்தேர்வு- 3
2008 தரம் : 5 வெற்றித்தேர்வு- 14
ஞாயிறு : 11.5.2008, 6am, 8am, 10am, 2pm, 4pm
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
வெளிமாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.
பெறுமதியான பரிசுகள் காத்திருக்கின்றன.
திங்கள் சகல புத்தகசாலைகளிலும் பெறலாம்.
T.P.9016

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org